உ

முருகன் துணை.

குருபாததாசர் அவர்களால்

செய்தருளிய

திருப்புல்வயல்

குமரேச சதகம்

மூலமும்

திருநெல்வேலி வித்வான்

குப்புசாமிப்பிள்ளை அவர்கள்செய்த

உரையும்.

சென்னை,

இட்டா - பார்த்தசாரதிநாயுடு

குமாரன்

இட்டா - கோவிந்தராஜுலு நாயுடு

அவர்களால்

சென்னை-சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1922. [ரூபா-1.

நெ-13, நம்புலையர் தெருவு,—சென்னை.

முருகன்றுணை.

குமரேச சதகம்.

குமரேச என்ற திருநாமத்தை யமைத்துப் பாடப் பெற்ற நூறுசெய்யுள் கொண்ட பிரபந்த மாதலால் இந்த நூலுக்கு குமரேசசதகம் என்று பெயராயிற்று. இந்நூலின் செய்யுள் ஒவ்வொன்றிலும், மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே, என்பது மகுடமாயமைக் கப்பட்டிருத்தல் காண்க. குமரேச சதகம் என்றதொடர் குமரேசனைக்குறித்த சதகம் எனவிரிந்தால் இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுமுடன் றொக்க தொகையாகவும் குமரேசன் விஷயமான சதகம் என விரிந்தால் ஆறாம்வேற் றுமைத் தொகையாகவும் கொள்ளப்படும். குமரேச என் பது குமரேச என்னும் வடமொழித் தொடரின் விகாரம், அது குமார ஈச என்றுபிரியும், இது வட சொற்புணர்ச்சி குணசந்தி குமாரனாகிய ஈசன் என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை, சுப்பிரமணியனாகிய கடவுள் என்பது பொருள். குமாரன் என்பது, கு-மார என்று பிரிந்து (கு-குற்சிதம். மாரன்-மன்மதன்) எனப் பொருள்படும். மன் மதனுங் குரூபமுடையவ னென்று சொல்லும்படி செய்ய வல்ல கட்டழகுடையவ னென்பது கருத்து. ஈசசதகம் என் பதும் வடநூன் முடிபேயாம்.

சதகம் என்பது பிரபந்தவகை தொண்ணூற்றாறனுள் ஒன்று, அதனிலக்கணம் அகப்பொருளொன்றன் மேலாவது புறப்பொருளொன்றன் மேலாவது நூறுசெய்யுள்பாடுவது (அகப்பொருள் சிற்றின்பம், புறப்பொருள் மற்ற விஷயங்கள்) இந்நூல் பலவகை நீதிகளையும் சில சரித்திரங்களையும் மற்றும் பலவகையியல்புகளையும் விளக்குதலால் புறப்பொருளின்மேற் கூறியதாம், சதம் நூறு, அதுசப்பிரத்தியம் பெற்று சதகம் என நின்றது,

இந்நூல் முதலில் காப்புச் செய்யுளாகிய வெண்பா ஒன்றும் அவையடக்க மாகிய விருத்த மொன்றும் தவிர நூறு ஆசிரியவிருத்தங்களா லமைந்தது. திருப்புல்வயல் என்ற தலத்தில் மலையின் மீதெழுந்தருளி யிருக்கிற பாலசுப்பிரமணியரென்னுந் திருநாமத்தை யுடைய முருகக் கடவுளின் மேல் பாடப்பட்டது. இந்நூலின் 51-ம் செய்யுளில், மாடமிசையன்னக் கொடித்திரள்கொள் சோணாடு வாழவந்திடு முதல்வனே என்றும், 60-ம் செய்யுளில், வாணுடுபுகழுமொரு சோணாடு தழையவிவண் வந்தவதரித்த முதலே, என்றும், 68-ம் செய்யுளில் மதிலுடன்கோபுரமும் வாவியும் புடைசூழ மருவுசோணாட்டதிபனே என்றும், பாடியிருத்தலால், திருப்புல்வயல் என்றதலம் சோழநாட்டிலுள்ள தென்றறியலாம். சுப்பிரமணிய சுவாமியினிடத்தில் மிகுந்த பக்தியோடு அப்பெருமானைப் பிரபந்தத் தலைவனாக வைத்துப் பாடப்பட்ட இந்நூல் தத்துவஞானத்தையும் சிறந்தபதவிகளையும் முடிவில்

முத்தியையும் தரவல்ல தென்பதை 'பன்னரியபுல்லயவில்லா லகுமரேசர் மேற் பரிந்து குருபாததாசன் பாங்கான தமிழா சிரிய விருத்தத்தினறை பாடலொரு நூறும்நாடி நன்னயம் தாகப்படித்த பேர் கேட்ட பேர் நாடொறுங்கற்ற பேர்கள் ஞானயோகம் பெறுவா பதவியாவும் பெறுவர் நன்முத்தியும் பெறுவர்' என்று இந்நூலின் இறுதிச்செய்யுளிற் கூறியிருத்தலால் அறியலாம். இந்நூல்போலவே கடவுளின்பெயரையமைத்து நீதியுரைக்கும் நூல்கள் மற்றுஞ் சிலவுள, அவை திருவேங்கடசதகம், அறப்பளீசுரசதகம், கோவிந்த சதகம், தண்டலையார் சதகம் முதலியன.

இக் குமரேசசதகத்தைப் பாடினவர்; குருபாததாசர் என்பதுமாத்திரம் இந்நூலின் இறுதிச்செய்யுளால் விளங்குகின்றது. இவரது சரித்திரமுதலிய விவரங்கள் தகுதியான ஆதாரத்தோடு விளங்கவில்லை. இவர் சற்றேறக்குறைய 170-வருடங்களுக்குமுன்இருந்ததாக ஊகிக்கப்படுகின்றது. இவர் சுப்பிரமணியக்கடவுளின்மீது மிகுந்தபக்தி யுள்ளவர் என்பது இந்நூலினுல் நன்குவிளங்கும். இந்நூலின், 44-ம் செய்யுளில், வல்லமையினு லெண்ணத்தினுலொன்றும் வாராது பரமசிவ னெத்தனப்படி முடியுமாம்-என்றும், 85-ம் செய்யுளில், வாடாம லினைவெலாஞ் சிவன் செயல்களல்லாது மனச்செயலினுலும் வருமோ என்றும் கூறியிருத்தலாலும், விபூதிவாங்கு முறைமையையும் அதைத் தரிக்கும் முறைமையையும் பற்றி இந்நூலிற் கூறியிருந்தலாலும் இவர்

சைவமதஸ்தர் என்பது இனிது விளங்குகின்றது அன்றியும் 86-ம் செய்யுளில், மேவாசமஞ்சிவ புராண மிவைகேளாமல் விட்டசெவி யென்னசெவி என்றதும் அதை வற்புறுத்து கின்றது.

புல்வயல் என்பது புதுக்கோட்டையை யடுத்ததோ ரூர் என்றும், இதில் ஒரு மலையும் அதின்மேல் முருகக்கட வுளின் ஆலயமும் இருக்கின்ற தென்றும், அதற்கு அருண கிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழும் உண்டென்றும், இந்தக் குருபாததாசரது இயற்பெயர் முத்துமீனாட்சிக் கவி ராயர் என்றும், இவர் பரம்பரைச் சைவவேளாளர் என்றும் இவர் இந்தச் சதகமொன்றையே யன்றி வேறு பலநூல்களை யுஞ் செய்தாரென்றும், இவர் புத்திர பரம்பரையோர் சேல த்தை யடுத்த சார்வாய் என்னும் ஊரிலும் இப்பொழுதும் இருக்கிறார்கள் என்றும், இவர்புத்திரி பரம்பரையாரில் கதிர் வேற்கவிராயர் என்றொரு மஹாவித்துவான் இருந்தாரென் றும் சிலமுதியோர் கூறுகின்றனர்.

உ

முருகன் துணை.

குமரேச சதகம்.

மூலமும் உரையும்.

காப்பு.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே வியசதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

(பதவுரை.)

பூமேவு - அழகுபொருந்திய, புல்லை - திருப்புல்வயலில், பொருந்து-எழுந்தருளிய, குமரேசர் தம்மேல் - குமாரக் கடவுள்மீது, தேம் மேவிய சதகம்செப்ப- இனிமை பொருந்திய சதகமொன்றைப் பாடுதற்கு, கோமேவி - தலைமைபெற்று, காக்கும் - (எல்லாவுயிர்களையும்) காப்பாற்றுகிற, சரவணத்தான் - முருகக்கடவுளும், கம்பம் - (எப்பொழுதும்) அசையுமியல்புள்ளதும், கும்பத்து - குடம்போன்ற மத்தகத்தையுடையதும், ஐந்துகரம் — ஐந்து கைகளையுடையதும், கா-சோலையிற் பயில்வதும்ஆகிய, குஞ்சரம்-யானைபோன்ற, வணத்தான்-வடிவத்தையுடையவனாகிய விநாயகக்கடவுளும், காப்பு - பாதுகாவலாவர். என்றவாறு.

(விசேடவுரை.)

பூ-என்பது மங்கலமொழிகளுள் ஒன்றாதலாலும், நூற்றொடக்கத்தில் மங்கலச்சொல் வைப்பது சான்றோர் மரபாதலாலும், இந்நூலாசிரியரும் பூ என்னும் மங்கலமொழியைத் தமது நூலாகிய இச்சதகத்தின் காப்புச்செய்யுளின் முதலில் அமைத்துக்கொண்டனர். புல்வயல் என்பது புல்லை என மரூஉவாயிற்று. இவ்வாறே தஞ்சாவூர் தஞ்சையென்றும், ஆற்றூர் ஆறையென்றும், பேறூர் பேறையென்றும், உறையூர் உறந்தையென்றும், மரூஉவாகி வழங்குதல் காண்க. தாம்தொடங்கும் சதகம் தம்மால் வணங்கப்படும் கடவுளின் கருணையால் இனிதுமுடியுமென்பது கருதி, 'தேமேவிய சதகஞ்செப்பக்காப்பு என்றார். குமாரக்கடவுளையே முதற்பெருந் தெய்வமாகக் கொள்ளுகிற கௌமார மதத்தின் சித்தாந்தப்படியே குமாரக்கடவுள் மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவராதலால் அத்தன்மை தோன்ற 'கோமேவிக் காக்குஞ் சரவணத்தான் என்றார். கோமேவிகாக்கும் என்பதற்கு தேவலோகத்தை விரும்பிக்காக்கின்ற என்றுரைத்தலுமாம், தேவசேனாபதியாய் அசுரர்களை யழித்துத் தேவர்களைக் காத்தமையால். கோ - தேவலோகம்.

சரவணத்தான் - நாணற்காட்டில் அவதரித்தவன். சூரபதுமன் முதலிய கொடிய அசுரர்களைக் கொல்லுமாறு பிரார்த்தித்த தேவர்களுடைய பிரார்த்தனைக்கிரங்கிய சிவபிரான்

ஆறு திருமுகங்கொண்டு அவற்றின் நெற்றிக்கண்களினின்று உண்டாக்கிய ஆறு அனற்பொறிகளை அக்கினியும் வாயுவும் கொண்டுபோய்க் கங்கையிற் சேர்க்க, கங்கையும் அவற்றைச் சரவணப் பொய்கையில் சேர்க்க, அவ்விடத்தில் குமாரக்கடவுள் ஆறு திருமுகங்களோடும் பன்னிரண்டு திருக்கைகளோடும் அவதரித்தனன் என்பது புராணவரலாறு. சரவணப் பொய்கை-நாணற்காட்டினாற் சூழப்பட்டதோர் கங்கையின் மடு. சரம்வநம்-சரவணம். இதுவடமொழிப் புணர்ச்சி,

கம்பம் கும்பம் கா-என்றவை யானைக்கேற்ற அடைமொழிகள் ஐங்கரம் என்பது விநாயகருக் கேற்ற அடைமொழி தூங்குங்களிறு என்றபடி யானைக்கு எப்பொழுதும் அசை தலியல்பாதலால் கம்பம் என்பதற்கு அசைதல் எனப் பொருள் கூறினுமாம். இப்பொருட்கு கம்பம் சாதியடையெனக் கொள்க. மதயானை யென்பது கருத்து. யானைத்தலையில் இரண்டுகுடங் கவிழ்த்தார் போலத் தோன்றுகிற மாமிசபிண்டங்க ளிரண்டும் கும்பங்களென்று பெயர் பெறும். இயல்பாகிய நான்கு திருக்கைகளோடு யானை யுருவத்துக்குரியதான துதிக்கையும் சேர்ந்து ஐந்தாதல்காண்க. ஐந்துகரக்கா-ஐந்து கைகளாகிய ஐந்து கற்பக விருக்ஷங்களையுடையவென் றுரைத்தலுமாம். கா-சோலை மரத்துக்கிலக்கணை கருதியவற்றைத் தருதலால் கரம் கற்பகம் எனப்பட்டனகம்பம், கும்பம், கரம், குஞ்சரம் என்பன வடசொற்கள். குஞ்சரம் என்பதற்கு காட்டுப் புதர்களிற் சஞ்சரிப்பதென்பது பொருள். வணம்-வண்ணமென்பதன் தொகுத்தல்.

மாகதன் என்னும் முனிவனுக்கு விபுதையென்னும் அசுரப் பெண்ணினிடத்தில் யானைமுகனாகப் பிறந்த கஜமுகாசுரன் (இரணியன் போல) தேவர்களாலும் அசுரர்களாலும் மனிதர்களாலும் மிருகங்களாலும் வேறெந்தப்பிராணிகளாலும் தனித்தனி இறவாதபடி வரம்பெற்று அச்சமின்றிச் செருக்கி உலகத்தை மிக வருத்தி வருகையில், தேவர்கள் வேண்டுகோளால் இவனைக் கொல்லும்பொருட்டு யானைமுகமும் தெய்வப்பிறப்பும் பூதவடிவுமாகத் தோன்றினவர் விநாயகர் என்றறிக.

இடையூறு நீக்கும்பொருட்டு விநாயகரைமுதலிற் கூறுதல் பொருந்துமாயினும் இந்நூலாசிரியர் முருகக் கடவுளை முதலில் துதித்தது இவரது சுப்பிரமணிய பக்தி விசேஷத்தாலென்க. அன்றியும் விநாயகர் வழிபடுகடவுள் மாத்திரமேயாக. சுப்பிரமணியர் அதனோடு இந்நூலுக்கு ஏற்புடைக் கடவுளுமாகி முன்னிற்றற் குரிமையுடையராதல் காண்க.

அவை யடக்கம்.

மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவு
 மனைக்குநிக ரென்று சிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவுஞ்ச ந்திரன்முன்
 மருவுமின் மினிபோ லவும்
பாருக்கு ளல்லோர்மு னேபித்தர் பலமொழி
 பகர்ந்திடுஞ் செயல் போலவும்
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
 பாரிலா டுதல் போலவும்

பூரிக்கு மினியகா வேரிக்கு நிகரென்று
போதுவாய்க் கால் போலவு
புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்தவைத் தது போலவும்
வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவுமின்சொல்
வண்ணர்மு னுகந்து புல்லே
வாலகும ரேசர்மேற் சதகம் புகன்றனன்
மனம்பொருத் தருள் புரிகவே.

(இ-ள்.) மாரிக்கு நிகர் என்று - மழைக்கு நிகரென்று, பனி சொரிதல் போலவும்-பனிபெய்தல் போலவும், மனைக்கு நிகர் என்று-வீட்டுக்கு நிகரென்று, சிறுபெண்- சிறியபெண் ணானவள், மணல்வீடு கட்டுவது போலவும்-மணல்வீட்டைக் கட்டுதல் போலவும், சந்திரன் முன் - சந்திரனுக் கெதிரில், மருவு - பொருந்திய, மின்மினிபோலவும்- மின்மினிப்பூச்சி போலவும், பாருக்குள் - உலகத்தில், நல்லோர் முன்னே - நல்லோர்களுக் கெதிரில், பித்தர் - பைத்தியக்காரர், பல மொழி - பலசொற்களை, பகர்ந்திடும் செயல்போலவும்-சொல் லுகிற செய்கைபோலவும், பச்சைமயில் ஆடுதற்கு இணை யென்று . பச்சைநிறமுள்ள மயிலானது ஆடுதற்குச் சமான மென்று- வான்கோழி - வான்கோழியானது, பாரில் ஆடு தல்போலவும் - உலகத்தில் ஆடுதல் போலவும், பூரிக்கும் - நீரால் நிறைக்கப்பட்ட, இனிய காவேரிக்கு நிகர் என்று - இனிதாகிய காவேரியாற்றுக்குச் சமானமென்று, போது வாய்க்கால் போலவும்- ஓடுகிற வாய்க்கால் போலவும், புகல்

கின்ற சிப்பிக்குநிகரா-சொல்லப்பட்ட - முத்துசிப்பிக்குச் சமாநமாக, பளிங்கை-படிகக்கல்லே, பொருந்த வைத்தது போலவும்-பொருத்தமாக வைத்தாற் போலவும், வாரிக்கு முன்-கடலுக் கெதிரே, வாவிபெருகல் போலவும்-தடாகமா னது பெருகுதல் போலவும். இன்சொல்வாணா முன்-இன் சொற்களை யுடைய கவிவாணருக் கெதிரில், உகந்து-விரும்பி புல்லே-திருப்புல்வயலி லெழுந்தருளியிருக்கிற வாலகுமரே சர்மேல்-பாலசுப்பிரமணியக் கடவுள்மேல், சதகம் புகன்ற னன்- சதகமொன்றைப்பாடினேன், மனம்பொறுத்து அருள் புரிக மனம் பொருத்தருள் செய்யக்கடவீராக, எ-று

அவை-சபை அது இடவாகு பெயராய் அந்தச்சபையி லுள்ளோரை உணர்த்திற்று, ஆகவே, சபையிலுள்ள பெரி யோரை நோக்கி இந்நூலாசிரியர் மாரிக்கு நிகரென்று பனி சொரிதல் முதலிய செயல்கள்போல், கல்வியிற்சிறந்த உங்க ளுக்கு முன்னே நானும் ஒருசதகத்தைப் பாடினேன், அதி லுள்ள குற்றங்களைக் குணங்களாகக் கொண்டருள் புரிதல் வேண்டுமென் றிரக்கின்றா ராதலால் இதற்கு அவையடக்க மென்று பெயராயிற்று. அவையடக்கம்-சபையிலுள்ளார் அடங்குதற்குரிய பணிமொழி. இனிய என்னும் அடையை நீருக்காக்குக புகல்-யாவராலும் சிறப்பித்துச்சொல்லப்படு கிற சதகம் - குமரேசசதகம் என்னும் பிரபந்தம். புரிக - வியங்கோள்.

நூல்.

குமரேசர் மகிமை.

பூமிக்கோ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளை யாடியும்
புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
சேமிக்க வரிகரப் பிரமாதி கட்குஞ்
செயிக்கமுடி யாவ சுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினா லிருகூறு
செய்தமரர் சிறை தீர்த்தும்
நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனி
னினைக்குமுன் வந்து தவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகிலுனை
நிகரான தெய்வ முண்டோ
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே வள்ளி கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (1)

(இ-ள்.) பூமிக்கு-பூமியின்மேல், ஓர் ஆறுதலையாய் வந்து-ஒரு ஆறுதலைகளை யுடையவனா யவதரித்து, சரவணப்பொய்கைதனில் விளையாடியும்-சரவணப் பொய்கையில் விளையாடுதல் செய்தும், புனிதற்கு-சிவபெருமானுக்கு, மந்த்ரஉபதேசமொழி சொல்லியும்-மந்திரோபதேசவார்த்தையைச் சொல்லியும், போதனை சிறையில்வைத்தும்-பிரமனைச்சிறை

பிலடைத்து வைத்தும், தேமிக்க-அழகுமிகுந்த அரி அர பிர மாதிகட்கும்-அரி அரன் பிரமன் முதலியோர்களுக்கும், செயிக்கமுடியா அசுரனை-வெல்ல வொண்ணாத அசுரனை, தேகம் கிழித்து-சரீரத்தைப் பிளந்து, வடிவேலினால்-வடித்தவேலா யுதத்தால், இருகூறுசெய்து-இரண்டு பங்காக்கி, அமரர்சிறை தவிர்த்தும்-தேவர் சிறை நீக்கியும், நேமிக்குள்-உலகத்தில், அன்பர்-அன்பர்கள், இடர் உற்றசமயந் தன்னில்-துன்ப மடைந்தகாலத்தில், நினைக்குமுன்-அவர்கள் நினைக்குமுன்னே, வந்து உதவியும்-வந்து உதவி செய்தும், நிதமும்-நாள் தோறும், மெய்த்துணையாய் விளங்கலால்-உண்மையாகிய துணையாகி விளங்குதலால், உலகில்-உலகத்தில், உன்னை நிகர் ஆனதெய்வம்-உன்னை நிகர்த்ததெய்வம், உண்டோ-உள்தோ, மாவண்டுகள், மிக்க தேன்பருகு-மிகுதியாகிய தேனையுண்ணுதற்கிடமாகிய, பூகடம்பு அணியும்-கடப்பமலர் மாலையையணிந்த மணிமார்பனே- அழகியமார்பை யுடையவனே, வள்ளிகணவா-வள்ளிமணாளனே மயில்ஏறி விளையாடுகுகனே-மயிலின் மேலேறி விளையாடுகிற குகனே, புல்வயல்நீடு-திருப்புல் வயலிலுள்ள, மலைமேவு-நீண்டமலையின்கண் எழுந்தருளி யிருக்கிற, குமரேசனே-குமாரக் கடவுளே.

தலையாய்-தலைமையுடையவனாய், மந்த்ரவுபதேச மொழியென்றது-பிரணவார்த்தம் போதித்த சொல்லை, போது-தாமரைமலர், அதிலிருப்பவனாதலால் பிரமனைப் போதன் என்றார். அரிஅரப் பிரமாதிகட்குஞ் செயிக்க முடியாவசுரன் என்றது-சூரபன்மனை அனுமார்பன் என்றும் பிரிக்கலாம்.

அந்தணரியல்பு.

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையுங்
கூறுசுருதிப் பெருமையுங்
கோதிலா வாகம புராணத்தின் வளமையுங்
குலவுயா காதி பலவும்
முறையாக நடத்தலாற் சகலதீ வினைகளையு
முளரிபோ லேதகிப் பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதுவிக ளிற்றெய்வ
மூர்த்தமுண் டாக்கு ப்விபார்
நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா
னீண்மழை பொழிந் திடுவதும்
நிலமது செழிப்பதும் மரசர்செங் கோல்புரியு-
நிலையுமா தவர்செய் தவமும்
மறையோர்க ளாலே விளங்குமிவ் வுலகத்தின்
மானிடத் தெய்வ மிவர்காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே (2)

இ-ள். குறையாத-குறைவுபடாத, காயத்ரி ஆதி-காயத்ரிமுதலிய மந்த்ரங்களை, செபமகிமையும்-செபித்தலின் பெருமையும், கூறுசுருதிப் பெருமையும்-சொல்லப் பட்ட வேதத்தின் பெருமையும், கோது இல்லா-குற்றமில்லாத-ஆகமபுராணத்தின் வளமையும்-ஆகம புராணங்களின் பெருக்கமும், குலவு யாகாதிபலவும்-விளங்குகிற யாக முதலிய

வற்றையும், முறையா நடத்தலால்-கிரமமாகநடத்துதலாலே, சகலதீவினைகளையும்-சகலமான பாவங்களையும், முளரிபோலேதகிப்பார்-சூரியன்போலஎதிர்த்து விடுவார்கள் முதன்மைபெறு-தலைமைபெற்ற, சிலை செம்பு பிருதிவிகளில்-கல்செம்பு மண் என்பவைகளில், தெய்வமூர்த்தம் உண்டாகக்குவிப்பார்-தெய்வமூர்த்த முண்டாக்கி வைப்பார்கள், நிறையாக நீதிநெறிவழுவார்கள்-பூர்ணமாக நீதிமார்க்கத்தி னின்றும் வழுவமாட்டார்கள், ஆகையால்-ஆதலால், நீள்மழை பொழிந்திடுவதும்-பெருமழை சொரிவதும், நிலமது செழிப்பதும்-பூமிசெழிப்பதும், அரசர்-அரசர்கள், செங்கோல்புரியும் நிலையும்-செங்கோல் செலுத்துந் தன்மையும், மாதவர்செய்தவமும்-பெரிய தவத்தினர் செய்கிறதவமும், மறையோர்களாலே விளங்கும்-வேதியராலே விளங்கும், (ஆதலால்) இவ்வுலகத்தில்-இந்தலோகத்தில், இவர்-இந்தவேதியர், மானிடத்தெய்வம்-மானுஷரூபமான தெய்வமாவர், மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

காய்த்ரி-வேதமந்தரம், சுருதி-கேட்கப்படுவது, வேதம் எழுதிப் படிக்காமல் கேட்டற்கே யுரியதாதலால் இதற்கு இப்பெயர் வந்தது, ஆகமம்-காமிகமுதலியன. புராணம்-மச்சமுதலியன, யாகம்-ராஜசூயம், அசுவமேதம், பசுமேதம் முதலியன, தீவினை-தீவினைப்பயன் (பாவம்) தெய்வமூர்த்தமமைதவாவேசம்.

அரசரியல்பு.

குடிபடையி லபிமான மந்திரா லோசனை
குறிப்பறிதல் சத்யவசனங்
கொடைநித்த மவரவர்க் கேற்றமரி யாதைபொறை
கோடாத சதுரு பாயம்
படிவிசா ரணையொடு ப்ரதானிகள கர்த்தரைப்
பண்பறிந் தேய வைத்தல்
பல்லுயி ரெலாந்தன் னுயிர்க்குநிக ரென்றே
பரித்தல்குற் றங்கள் களைதல்
துடிபெறு தனக்குறுதி யானநட் பகமின்மை
சுகுணமொடு கல்வியறிவு
தோலாத காலமிட மறிதல்வினை வலிகண்டு
துஷ்டநிக் ரக சௌரியம்
வடிவுபெறு செங்கோ னடத்திவரு மரசர்க்கு
வழுவாத முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (3)

(இ-ள்.) குடிபடையில் அபிமாநம்-குடிபடைகளின்மேல் அபிமானமும், மந்திராலோசனை-மந்திராலோசனையும், குறிப்பறிதல்-குறிப்பறிதலும், சத்யவசநம்-உண்மைமொழியும், கொடை-கொடையும், நித்தம்-நாள்தோறும், அவரவர்க்கு ஏற்றமரியாதை-அவரவர்க்குத் தகுதியாகிய மரியாதை செய்தலும், பொறை-பொறுமையும், கோடாத சதுருபாயம்-கோணாத நான்குபாயங்களும், படிவிசாரணையொடு-லோக

விசாரணையுடனே, ப்ரதானி தளகர்த்தரை-பிரதாநி தளகர்த்தன் என்பவர்களை, பண்பு அறிந்தே அமைத்தல்-குணமறிந்தே யமைத்துக் கொள்ளுதலும், பல்உயிர்எல்லாம்-பலவுயிர்களெல்லாம், தன் உயிர்க்கு நிகர்என்றே பரித்தல்-தன்னுயிர்க்குச் சமானமென் றெண்ணிய அவற்றைக் காப்பாற்றுதலும், குற்றங்களைதல்-குற்றங்களை விலக்குதலும், துடிபெறு மேன்மைபெற்ற, தனக்கு உறுதியான நட்பு-தனக்குறுதியாகிய நட்புடைமையும். அகம் இன்மை-அகமில்லாமையும், சுகுணமொடு-நற்குணத்துடன், கல்வியறிவு- கல்வியறிவும், தோவாத-தொலையாத, காலம் இடம் அறிதல்-கால இடங்களை யறிதலும், வினைவலிகண்டு-வினைவலி நோக்கி, துஷ்டநிரக்ஹ சௌரியம் துஷடநிக்ரஹமாகிய சூரத்துவமும், (ஆகிய) இவை-இவைகளை, வடிவுபெறு செங்கோல் நடத்திவரும் அரசர்க்கு-அழகுபெற்ற செங்கோல் செலுத்திவருகிற வேந்தருக்கு. வழுவாதமுறைமை-தவறாத முறைமையாகும், மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

குடி-அந்தணர் முதலான குடிகள், படைதேர், யானை, குதிரை, காலாள் என்பன அபிமானம்-அன்பு, மந்திராலோசனை-ரகசியமான ஆலோசனை, குறிப்பறிதல்-நினைப்பறிதல், சதுருபாயம்-சாமம், தானம், பேதம், தண்டம் என்பன, அகம்-அகங்காரம். நிக்ரஹம்-வெற்றி.

வணிக ரியல்பு.

கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது
கூடிவர நய முரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம் வராதபடி
குறுகவே செலவு செய்வார்

வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்தி டார்
மருவுநாணய முளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையி லெலாங் கொடுப்பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலனு வாகிலும் விடார்
காசுவீ ணிற்செல விடாருசித மானதிற்
கனதிரவி யங்கள் விடுவார்
மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (4)

(இ - ள்.) (தகுதியாயுள்ள வியாபாரிகள்) கொண்டபடி போலும் விலைபேசி - (தாம்பொருளை) வாங்கிய வகைக்கு ஏற்ற விலையைக்கூறி, லாபம் சிறிது கூடிவர - சொற்பலாபம் (அதனோடு) சேர்ந்துவரும்படி, நயம் உரைப்பார் (வாங்குகிறவர்களுக்கு) நஷ்டமில்லாதிருக்கும்படி சொல்லுவார்கள்; கொள்ளும் ஒருமுதலுக்கு மோசம்வாராதபடி - (தாம் வியாபாரத்தின் பொருட்டுப் பொருள்களை) வாங்குதற்கென்று வைத்திருக்கிற முதல் தொகைக்குக் குறைவு வராதபடி, குறுகவே செலவுசெய்வார் - (அதன் இலாப வரவு தொகையைக்கொண்டே) சொற்பமாகவே செலவு செய்வார்கள், வண்டப் புரட்டர்தாம் - துஷ்டத்தன்மையுள்ள வஞ்சகர்கள், முறிதந்து - சீட்டு எழுதிக்கொடுத்து, பொன் அடகுவைக்

கினும் - பொன்னை ஈடாகவைத்தாலும், கடன் ஈந்திடார் - அவர்களுக்குக் கடன் கொடுக்கவே மாட்டார்கள், மருவு நாணயம் உளோர் - பொருந்திய நாணயத்தையுடையவர்கள், கேட்டு அனுப்புகினும் (நேரில்வந்து பொருளீடுகாட்டிச் சீட்டு எழுதிக்கொடுத்த லில்லாமல் தமது ஏவலாளர் மூலமாக இன்ன பண்டம்வேண்டுமென்று வாய்மொழியாய்க்) கேட்டு அனுப்பினாலும், அவர் வார்த்தையில் - அவர்களுடைய அந்தச் சொல் மாத்திரத்தைக் கொண்டே, நம்பிக்கையோடு எல்லாம் கொடுப்பார் - (அவர்கட்கு) வேண்டியவைகளையெல்லாம் கொடுப்பார்கள், கண்டு எழுது - ஒவ்வொன்றையும் தவறாமற் குறிப்பிட்டு எழுதுகிற, பற்று வரவினில் - கொடுக்கல் வாங்கல் விவரத்தில், மயிர்பிளந்தே- மயிரை இருபிளவாகக் குறுக்கே பகிர்ந்தளவு நுண்ணிய தொகையையுங்காட்டி, கணக்கில்- கணக்கில், அணு ஆகிலும் விடார் - மிகச் சிறிதொன்றையும் விடமாட்டார்கள், காசு - ஒரு காசையும், வீணில் செலவிடார் - வீணான வகையில் செலவு செய்யமாட்டார்கள், உசிதம் ஆனதில் - தகுதியான ஒரு காரியத்தில், கனதிரவியங்கள் விடுவார்- மிகுதியான பொருள்களைச் செலவு செய்வார்கள், மண்டலத்தூடு - உலகத்திலே, கனவர்த்தகம் செய்கின்ற-பெருமைக்கு இடமான வியாபாரத்தைச்செய்கிற, வணிகர்க்கு - வைசியர்களுக்கு, முறைமை இதுகாண் - உரிய நிலைமை இதுவேயாம், மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே, எ - று,

"வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந் தம்போற் செயின்" என்ற திருக்குறளினாலும், பிறர்பொருளையும் தம்பொருள்போல எண்ணிக்கொள்வது. மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல் ஒப்பநாடி வாணிகம் செய்தலே. நல்ல வாணிகமாமென்று அறிக.

தாம் வாங்கிய விலையை யுள்ளபடிகூறி அதற்குமேல் இவ்வளவுலாபம் தரவேண்டுமென்று சொற்பலாபத்தைக் குறிப்பிட்டுக்கேட்டலும், அங்ஙனமன்றித் தாம்கொண்ட விலையோடு சொற்பலாபத்தையும் கூட்டியே விலைகூறுதலும் ஆகிய இருவகையும் இதனுள் அடங்கும், முதல் வியாபாரஞ் செய்தற் கென்றுவைத்த தொகை. "ஆனமுதலி லதிகஞ் செலவானால், மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை, யெல்லார்க்கும் பொய்யனா யேழ்பிறப்புந் தீயனாய், நல்லார்க்கும் பொல்லனா நாடு" என்ற ஔவையார் வாக்கினாலும் அதிகச் செலவுசெய்தல் பெருங்குற்றமாதல் அறிக. வண்டத்தனம்-துடுக்குத்தனம், இச்சொல், இந்நூலின் 75-ஆம் செய்யுளிலும் 'வண்டப்பரத்தையர்' எனப்பகர்ந்துள்ளது. புரட்டர்-பொய் பேசுபவர்; சொன்னசொல் தவறுவோர்; வாக்கு நாணயமில்லாதவர் ; மோசக்காரர், நாணயம் - சொன்ன சொல் தவறாது நடத்தல் (நம்பிக்கைக் கிடமான தன்மை) பற்று - தம்மிடத்தினின்று பிறர்பொருளைப் பெற்றுக் கொண்ட விவரம் குறிப்பது, வரவு - பிறரிடத்தினின்று தமக்குப் பொருள்வந்த விவரம் குறிப்பது. காசு - ஒரு சிறு நாணயம். வீண்-பயனற்றது. உசிதம்-பயனுள்ளது. செலவி

டார் என்பதை செல்லவிடார் எனிவும் செலவு இடார் எனவும் பிரிக்கலாம். ஒவ்வொரு காசாகப் பொருளைச் சேர்த்து வராகன் வராகனாகச் செலவுசெய்தல் வணிகரியல்பென்பது இதனால் கூறப்பட்டது,

முருகக்கடவுளால் வேல்கொண்டு பிளக்கப்பட்ட சூரபதுமனது உடம்பின் கூறு இரண்டும் மயில்வடிவமும் கோழிவடிவமும் பெற்று அக்கடவுளருளால் அப்பிரானுக்கு வாகனமுங் கொடியுமாய் அமைந்தனவென்று அறிக

வேளாள ரியல்பு

நல்லதே வாலயம் பூசனை நடப்பது
நாடோறு மழை பொழிவதும்
நாடிய தபோதனர்கண் மாதவம் புரிவது
நவில்வேத வேதிய ரெலாஞ்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோ பனங்களுங் கொற்றவர்கள் செங்கோ
லுலங்குமனு நெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்த்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீராண சூர விலியும்
வல்லவர்கள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ வன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே (5)

(இ-ள்.) நல்லதேவாலயம் பூசனை நடப்பது-நன்மையாகிய தேவாலயங்களில் பூசைகள் நடப்பதும், நாள்தோறும் மழைபொழிவதும்-தினந்தோறும் மழைபெய்வதும் நாடிய தபோதனர்கள்-நாடிய தவச்செல்வர்கள், மாதவம் புரிவதும் பெரிய தவத்தைச் செய்வதும், நவில்-சொல்லப்பட்ட, வேத வேதியர் எல்லாம்-வேதங்களையுடைய அந்தணரெல்லாரும், சொல் அரிய-சொல்லுதற்கரியதாகிய, யாகாதி கருமங்கள் செய்வதும்-யாகமுதலான தொழில்களைச்செய்தலும், தொல் புவிசெழிக்கும் நலமும்-பழமையாகிய இவ்வுலகம் செழிக்கின்ற நன்மையும், சுபசோபனங்களும்-சுபமாகிய சோபனகாரியங்களும், கொற்றவர்கள் செங்கோல்-வேந்தர்களுடைய செங்கோலானது, துலங்கும்-விளங்குகிற, மனுநெறி முறைமையும்-மநுநெறியின் கிரமமும், வெல் அரிய-வெல்லுதற்கரிய, சுகிர்தமொடு-தருமத்துடனே, வர்த்தகன் கொள்விலையும்-வியாபாரி கொள்ளுதற் குரியகிரயமும், விற்பனையும்-விற்கிறதும், அதிகபுகழும்-மிகுகீர்த்தியும், மிக்க அதிகாரமும்-மேலான அதிகாரமும், தொழிலாளர் சீவனமும்-வேலைகாரருடைய சீவனமும், வீரரண சூரவலியும்-வீரத்தன்மையுள்ள ரணசூரபலமும், வல்லமைகள் சகலமும் (இவை போன்ற) வல்லமைகள் யாவும், வேளாளர்-வேளாளருடைய மேழியின் வாழ்வினுன்-மேழியின் நிலைபேறுடைமையால், விளைவ அன்றோ-உண்டாவனவன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

தேவாலயபூசை புரிவார்க்கு எக்காலத்துந் தீமைவிளையா தாதலால் நல்ல தேவாலயம் என்றார் நாடுதல்-இறைவனை தியானித்தல் சுகிர்தம்-புண்ணியம். மேழி-கலப்பைமேழி யின் வாழ்வு-கலப்பையின் சஞ்சாரம் என்னினுமாம். கலப் பையின் சஞ்சாரம் ஏருழுதல்.

பிதாக்கள்.

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவனொரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா
சார்ந்தசற் குருவொரு பிதா
அவமறுத் தாள்கின்ற வரசொரு பிதாநல்ல
வாபத்து வேளை தன்னி
லஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா
வன்புளமு னோனொரு பிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
கலிதவிர்த் தவனொரு பிதா
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதியாகும்
மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
மதலையென வருகுரு பரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (6)

(இ-ள்.) (ஒருவனுக்கு) தவமதுசெய்தே பெற்று எடுத்தவன்-நல்வினை செய்து (அதன் பயனாக அவனை) ஈன்றவன், முதல்பிதா-முதன்மையான தந்தையானவன், தனைவளர்த்தவன்-அவனை வளர்த்தவன், ஒருபிதா ஒருதந்தை யாவன், தயை ஆக்-அன்போடு, வித்தையை சாற்றினவன்-கல்வியை சொல்லிக் கொடுத்த ஆசிரியன், ஒருபிதா-ஒருபிதா, சார்ந்த சத்குரு-அமைந்த நல்ல(ஞானத்தை உபதேசித்த) ஆசிரியன் ஒருபிதா-ஒருபிதா, அவம் அறுத்து ஆள்கின்ற அரசு-தீங்குதனை ஒழித்துப் பாதுகாக்கிற அரசன், ஒருபிதா-ஒருபிதா, நல்ல ஆபத்துவேளை தன்னில்-மிக்க துன்பம் நேர்ந்தசமயத்தில் அஞ்சல் என்று-பயப்படாதே யென்று உறுதிமொழி கூறி, உற்றதுயர் தீர்த்துளோர்ன்-நேர்ந்த அத்துன்பத்தை நீக்கி யுதவியவன், ஒருபிதா-ஒருபிதா, அன்பு உளமுனோன்-அன்புள்ள தமையன், ஒருபிதா-ஒருபிதா, கவளம் இடுமனைவியை பெற்றோன்-அன்போடு உணவை யூட்டுகிறமனையாளைப்பெற்றவனனமாமனார் ஒருபிதா-ஒருபிதா, கலிதவிர்த்தவன் (தனது) வறுமையைத் தீர்த்துப் பொருளுதவியவன், ஒருபிதா-ஒருபிதா, காசினியில்-உலகத்தில், இவரை-இவர்களையெல்லாம், நித்தம்-எப்பொழுதும், பிதா என்றுஉளம்கருதுளது (தனித்தனி) தந்தை யென்று மனதில் எண்ணி அதற்கு ஏற்பநடப்பது, நீதிஆகும்-நியாயமாம், மவுலிதனில் திருமுடியிலே மதி சந்திரனையும், அரவு-நாகத்தையும், புனைதரித்த, விமலர்-குற்றமற்ற கடவுளான சிவபிரான், உதவு

பெற்ற, சிறு மதலையென-இளைய்குமாரனாக,. வரு-அவதரித்த, குருபரா-சிறந்த ஆசிரியனே! மயிலேறி விளையாடு, குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

இங்குக்கூறப்பட்ட ஒன்பதின்மருள் முதலிற் குறிக்கப் பட்டவன். உண்மையான தந்தை; மற்றையோரைத் தந்தை யென்றது உபசாரவழக்கு; தந்தைபோலப் பாவிக்கத்தக்க வர் என்றபடி நல்வினையினாலன்றி மக்கட்பேறு இயலாதா தலின், 'தவமது செய்தே பெற்றெடுத்தவன், என்றார் தவம் இங்கே, நல்வினை யென்னுமாத்திரமாய் நின்றது. உபாத்தி யாயர்க்கு மாணாக்கரிடம் அருள் இன்றியமையாதாதலின், தயையாக வித்தையைச் சாற்றினவன், என்றார்.

சற்குரு ." ஞானம் அனுட்டானம் இவை நன்றாகவே யுடையவனான" குரு, கு-(அஞ்ஞானமாகிய)இருளை, ரு-ஒழி ப்பவன் குடிகளின் சுகதுக்கங்களைக் கருதாத கொடுங்கோ லரசனை விலக்குதற்கு 'அவமறுத்து ஆள்கின்ற அரசு என்றார் மன்னுயிரைத் தன்னுயிர்போலக் குறிக்கொண்டுகாக்கும் அர சனென்க. நல்ல ஆபத்து கொடிய ஆபத்து; இத்தொடரை நல்லபாம்பு, என்றார்போலக் கொள்க. அஞ்சலெனல் அப யம் அளித்தல் முன்னோன் முன்பிறந்தவன். 'தாய்க்குப்பின் தாரம் என்றபடி குழந்தையினிடத்தே கொண்டு அவனை இனிய உணவுகளாற்போஷித்தல் மனையாளின் கடமையாத லால் 'கவளமிடு மனைவி, என்றார் இத்தகையாளின்வாய்ப்பே அவனைப் பெற்றவனைப் பிதாவாக மதித்தற்குக் காரணமாம்.

பிரணவப்பொருளறியாத்துபற்றிப் பிரமனைக் குமாரக் கடவுள் சிறையிட்டகாலத்தில் அவனை விடுவிக்கவந்த சிவ பிரானது விருப்பத்தின்படி தந்தையாகிய அப்பெருமானுக்கு மைந்தனுகியதால் பிரணவ மகாமந்திரத்தின்பொருளை உப தேசித்து 'சுவாமி, என்று ஒரு சிறப்புப்பெயர் பெற்றமேன் மையும் தமிழுக்கு முதலாசிரியராகிய அகத்தினுர்க்குத் தமி ழையும் தத்துவஞானத்தையும் முருகக்கடவுள் உபதேசித்த தலைமையையும் உட்கொண்டு, குருபரா 'என விளித்தார். குருபரன் பரமகுரு.

ஒன்றையொன்று பற்றியிருப்பன.

சத்தியந் தவரு திருப்பவ ரிடத்தினிற்
சாந்துதிரு மாதிருக் குஞ்
சந்ததந் திருமா திருக்கும் விடந்தனிற்
றனது பாக்கியமிருக் கும்
மெய்த்துவரு பாக்கிய மிருக்கும் விடந்தனில்
விண்டுவின் கலையிருக் கும்
விண்டுவின் கலைபூண் டிருக்கு மவிடந்தனின்
மிக்கான தாயை யிருக்கும்
பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனிற்
பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக் கும்

எவத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (7)

(இ-ள்.) சத்திய தவறுதிருப் பவரிடத்தினில் - சத்தியம் வழுவாதிருப்பவரிடத்தில், சார்ந்த திருமாது இருக்கும், பொருந்திய திருமாதிருப்பாள், சந்ததம் எப்போதும் திருமாது இருக்கும் அவிடந்தனில் திருமாதிருக்கிற, அவ்விடத்தில், தனது பாக்கியம் இருக்கும்-தனது சம்பத்திருக்கும், மெய்த்துவருபாக்கியம் இருக்கும் அவிடந்தனில்-உண்மையாய் வருகிற பாக்கியமிருக்கிற அவ்விடத்தில், விண்டுவின் கலை இருக்கும்-விஷ்ணுவின் அமிசமிருக்கும், விண்டுவின் கலை பூண்டிருக்கும் அவ்விடந்தனில்-விஷ்ணுவின் அமிசம் பொருந்தியிருக்கிற அவ்விடத்தில், மிக்கான தயை இருக்கும் மிகுதியாகிய தயையிருக்கும், பக்திபுடன்-பக்தியோடு, இனியதயை உள்ளவரிடந்தனில்-இனிதாகிய தயையுள்ளவரிடத்தில், பகர்தருமம் மிக இருக்கும்-சொல்லப்பட்ட தருமமானது மிகுதியாயிருக்கும், பகர்தருமம் உள்ளவரிடந்தனில்-சொல்லப்பட்ட தருமமுள்ளவரிடத்தில், சத்துரு-பகைவன் பிரலாயநம்-புறங் காட்டும்படியான, திறல் இருக்கும் வெற்றியிருக்கும், வைத்து இசைமிகுந்த திறல் உள்ளவரிடத்தில்-வைக்கப்பட்டு கீர்த்திமிகுந்த வெற்றியுள்ளவரிடதகில்,வெகுமன் உயிர் சிறக்கும் அன்றோ-பலவாகிய நிலைபெற்ற சீவர்

சிறந்துவாழுமல்லவா, மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று,

சத்தியம்-உண்மை. திருமாது-திருமகள் (இலக்குமி) களை-கலை, (அமிசம்) பகர்தருமம்-நூல்களாற் சொல்லப்பட்டதருமம். பாலாயநம்-புறங்காட்டுதல், திறல்-வலியெனினும் பொருந்தும்.

இவர்க்கிவர் தெய்வமெனல்.

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்க ளேதெய்வ
மன்பான மாணுக் கருக்
கரியகுரு வேதெய்வ மஞ்சினோர்க் காபத்
தகற்றினோ னேதெய்வ மாம்
காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாங்
கணவனே மிக்க தெய்வங்
காசினியின் மன்னுயிர் தமக்கெலரங் குடிமரபு
காக்குமன் னவர்தெய்வ மாம்
ஓதரிய பிள்ளைகட் கன்னைதந் தையர்தெய்வ
முயர்சாதி மாந்தர் யார்க்கு
முறவின்முறை யார்தெய்வம் விசுவாச முள்ளபேர்க்
குற்றசிவ பத்தர் தெய்வம்
மாதயையி னுற்குத் திரர்க்குமறை யோர்தெய்வம்
வானவர்க்குத் தெய்வநீ
மரிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (8)

(இ-ள்,) ஆதுலர்க்கு-தரித்திரருக்கு, அன்னம்கொடுத்தவர் களே-சோறுகொடுத்தவர்களே, தெய்வம்-தெய்வமாவார்கள் அன்பான மாணுக்கருக்கு-அன்புள்ள மாணுக்கருக்கு அரிய குருவே-அருமையாகிய ஆசிரியனே, தெய்வம் தெய்வமா வான், அஞ்சிஞேர்க்கு-பயந்தவர்களுக்கு, ஆபத்து அகற்றி ஞேனே (அவர்களுடைய) ஆபத்தை நீக்கினவனே. தெய் வம்ஆம்-தெய்வமாவன், காதல்உறு-ஆசைமிகுந்த,கற்புடைய மங்கையர் தமக்கு எல்லாம்-கற்புள்ள மாதருக் கெல்லாம், கணவரே-(அவர்களுடைய) நாயகர்களே, மிக்க தெய்வம்- மேலான தெய்வமாவர், காசினியில்-உலகத்தில் மன் உயிர் தமக்கு எல்லாம்-நிலைபெற்ற வுயிர்களுக் கெல்லாம், குடிமரபு காக்கும்,குடிமரபுகளைக் காப்பாற்றுகிற, மன்னவர்கள்-அர சர்களே, தெய்வம்-தெய்வமாவர், ஓது அரிய பிள்ளைகட்டு- சொல்லுதற்குரிய குழந்தைகளுக்கு, அன்னை தந்தையர் தெய் வம்-தாய்தந்தையரே தெய்வமாவர்,உயர்சாதி மாந்தர் யார்க் கும் உயர்ந்த சாதியிற் பிறந்த மக்களெல்லார்க்கும், உறவின் முறையார் தெய்வமாவர், விசுவாசம் உள்ள பேர்க்கு-விசு வாசமுள்ள பேர்களுக்கு, உற்ற-பொருந்திய, சிவபத்தர்-சிவ பக்தர்களே, தெய்வம்-தெய்வமாவர், சூத்திரர்க்கு-சூத்திரர் களுக்கு, மாதயையினுல்-பெரிய தயயுடைமையால், மறை யோர்-வேதியரே, தெய்வம்-தெய்வமர் வானவர்க்கு-தேவர் களுக்கு, நீ தெய்வம்-நீயே தெய்வமாவாய், மயிலேறி விளை யாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே எ-று.

அரிய-கிடைத்தற்கரிய ஆபத்து-அபாயம், (துன்பம்,) கற்பு-பதிவிரதா தருமம். குடிமரபு-குடிகளும் வமிசத்தார்களும் விசுவாசம்-அன்பு, வானவர் விண்ணுலகத்திலுள்ளவர்.

இவர்க்கிது நினைவெனல்.

ஞானநெறி யாளர்க்கு மோக்ஷத்தி லேநினைவு
நல்லறிவு ளோர்தமக்கு
நாடொறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு
ராச்சியந் தன்னி னினைவு
ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவு
ளஞ்சாத திருடருக் கிங்
கனுதினங் களவிலே நினைவுதன் வணிகருர
காதாய மீது நினைவு
தானமிகு குடியாள் ருக்கெலாம் வேளாண்மை
தனினினைவு கற்ப வர்க்குத்
தருகல்வி மேனினைவு வேசியர்க் கினியபொரு
டருவோர்கண் மீது நினைவு
மானபர னுக்குமரி யாதைமே நினைவெற்கு
மாறாதுன் மீது நினைவு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (9)

(இ-ள்.) ஞானநெறியாளர்க்கு-ஞானமார்க்கத்தைரிடையவருக்கு, மோக்ஷத்திலே நினைவு- மோக்ஷத்திலேயே நினைவிருக்கும், நல் அறிவு உள்ளோர்தமக்கு-நல்ல விவேகமுள்ளவர்களுக்கு, நாள்தோறும்-தினந்தோறும், தருமத்திலே

நினைவு-தருமத்திலேயே நினைவிருக்கும், மன்னர்க்கு-அரசரு க்கு, ராச்சியந் தன்னில் நினைவு-ராஜ்யபாரத்திலேயே நினைவி ருக்கும், ஆனகாமுகருக்கு-உண்டாகிய காமுகருக்கு, மாதர் மேலே நினைவு-மாதர்மீதிலேயே நினைவிருக்கும், உள் அஞ் சாத திருடருக்கு-மனமஞ்சாத திருடருக்கு, இங்கு-இவ்வி டத்தில், அநுதினம்-தினந்தோறும், களவிலே நினைவு-களவு செய்தலிலேயே நினைவிருக்கும், தனவணிகருக்கு தனத்தை யுடைய வணிகர்களுக்கு ஆதாயமீது நினைவு-லாபத்தின்மே லேயே நினைவிருக்கும், தானம்மிகு-கொடைமிகுந்த, குடி யானவருக்குஎல்லாம்-குடியானவர்களுக்கெல்லாம், வேளாண் மைதனில்நினைவு-வேளாண்மை செய்தசுலேயே நினைவிருக் கும், கற்பவர்க்கு-படிப்போர்க்கு, தகு-தகுந்த, கல்விமேல் நினைவு-கல்விமேலேயே நினைவிருக்கும், வேசியர்க்கு-வேசை களுக்கு, இனியபொருள் தருவோர்கள்மீது நினைவு-இனிதா கிய பொருள் கொடுப்பவர்கள் மேலேயே நினைவிருக்கும்: மானபரனுக்கு-மானமுள்ள வனுக்கு, மரியாதைமேல் நினைவு மரியாதை மேலேயேநினைவிருக்கும், எற்கு-எனக்கு, மாறாது இடையறாமல், உன்மீது நினைவு-உன்மேலேயே நினைவிருக் கும், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே- எ-று.

ஞானநெறி-முத்திமார்க்கம். காமுகர்-தூர்த்தர், வணி கா வியாபாரிகள் (செட்டிகள்) வேளாண்மை-பயிரிடுதல் உல கின்பங்களெல்லாவற்றிற்குங் காரணம் பொருளாதலால் அதனை இனியபொருள் என்றார்,

இவர்க்கிது வில்லையெனல்.

வேசைக்கு நிசமில்லை திருடனுக் குறவில்லை
வேந்தர்க்கு நன்றி யில்லை
மிடியற்கு விலைமாதர் மீதுவங் கணமிலை
மிலேச்சற்கு நிறைய தில்லை
ஆசைக்கு வெட்கமிலை ஞானியா னவனுக்கு
ளகமில்லை மூர்க்கன் றனக்
கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோற்
கழகில்லை சித்த சுத்தன்
பூசைக்கு நவிலங்க சுத்தியிலை யாவுமுணர்
புலவனுக் கயலோரிலை
புல்லனுக் கென்ன்முதி தானுசித மில்லைவரு
புலையர்க் கிரக்க மில்லை
மாசைத் தவிர்த்தமதி முகதெய்வ யானையொடு
வள்ளிக் கிசைந்த வழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ-ள்-) வேசைக்கு-வேசிக்கு, நிசம் இல்லை-உண்மையில்லை, திருடனுக்கு-கள்ளனுக்கு, உறவு இல்லை-உறவினரில்லை, வேந்தர்க்கு நன்றி இல்லை-அரசருக்கு உபகாரமில்லை, மிடியற்கு-தரித்திரனுக்கு- விலைமாதர்மீது-வேசையர்மேல்- வங்கணம்இல்லை-சிநேகமில்லை, மிலேச்சற்கு-நீசனுக்கு. நிறையது இல்லை-நிறைகுணமில்லை, ஆசைக்கு வெட்கம் இல்லை-ஆசைக்கு வெட்கமில்லை. ஞானியானவனுக்கு-ஞானியா யிருப்பவ

னுக்கு, உள் அகம் இல்லை-மனத்தில் அகங்காரமில்லை- மூர்க்கன் தனக்கு-மூர்க்கனுக்கு, அன்புஇல்லை-அன்பில்லை, காமிக்கு-காமுகனுக்கு, முறையில்லை- வரிசையில்லை, குணம் இலோற்கு-குணமில்லாதவனுக்கு, அழகு இல்லை-அழகில்லை, சித்தசுத்தன் பூசைக்கு-சித்த சுத்தியுடையவன் செய்யும் பூசைக்கு, நவில்-சொல்லப்பட்ட, அங்கசுத்திஇல்லை-சரீரசுத்தியில்லை, சாவும் உணர்புலவனுக்கு-எல்லாமறிந்த புலவனுக்கு, அயலோர் இல்லை-அந்நியமில்லை, புல்லனுக்கு-அற்பனுக்கு, என்றும்-எந்நாளும், உசிதம் அநுசிதம் இல்லை-உசிதாநுசிதங்களில்லை, வருபுலையர்க்கு-வருகின்ற சண்டாளருக்கு இரக்கம் இல்லை-இரக்கமில்லை, மாசைதவிர்த்த மதிமுகம்-களங்கம் நீங்கின பூர்ணசந்திரன்போலு முகத்தையுடைய முதும்பை யானையுடனே வள்ளிநாயகிக்கும், இசைந்த-இசைவாகிய-அழகா-அழகனே, மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

உசிதாநுசிதம் தகுதியும் தகுதியின்மையும், அங்க சுத்தி-நீரில்மூழ்குதல் முதலியவற்றா லுண்டாகிற சரீரசுத்தி.

இப்படிப்பட்டவ ரிவரெனல்.

நியாயநெறி தவறாமல் லுலகபரிபாலன்
நடத்துமவ னேயரசனும்
ராசயோ சனைதெரிந் துறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந்திரி

நேயமுட னேதன் சரீரத்தை யெண்ணாத
நிர்வாகி யேசூர னும்
நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு
நிபுணகவி யேகவிஞ னும்
ஆயதொரு வாகடந் தாதுவி னிதானமு
மறியுமுதி யோன் வைத்திய
னகமின்றி மெய்யுணர்ந் தைம்புல னொழித்துவிட்
டவனேமெய்ஞ் ஞானி யெனலாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (11)

(இ-ள்.) நியாயம்நெறி தவறாமல்-நீதிமுறைமை தப்பாமல், உலகபரிபாலனம் நடத்துமவனே - இராச்சியத்தை நன்றாக ஆளுகை செலுத்துகின்ற அரசனே, அரசன் ஆம்-அரசனென்று சிறப்பித்துக் கூறப்படுபவனுவன், நிருபர் யோசனை தெரிந்து-அரசர்கட்குரிய ஆலோசனைகளைத் தான் அறிந்து, உறுதி ஆகியசெய்தி (இராச்சியத்துக்கு) நன்மை விளைவிப்பனவாக நிச்சயித்த செய்திகளை, நவிலுமவனே-கூறுபவனே, மந்திரி-சரியான மந்திரியாவன், நேயமுடனெ தன் சரீரத்தை எண்ணாத-தனது உடம்பினிடத்தில் அபிமானங் கொண்டு அதன் நன்மையையேகருதாத, நிர்வாகியே-போர்த்தொழிலில் திறமுள்ளவனே, சூரன் ஆம்-சூரனென்று சொல்லத்தக்கவனும், நிலைபெறும் இலக்கணம் இலக்கியம் அறிந்து-நிலைபெ

ற்ற இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் அறிந்து சொலும் (அவற்றின் முறைமை தவறாமல்) கவிசொல்லுகிற நிபுணகவியே-வல்லமையுள்ள பாவலனே, கவிஞன் ஆம்-கவிபாடவல்லவ னென்று மதிக்கத் தக்கவனாவன், ஆயது ஒருவாகடம்-தகுதியானதொரு வைத்திய சாஸ்திரத்தையும், தாதுவின் நிதானமும்-நாடியினுடைய நிலையையும் அறியும்-அறிந்த, முதியோன்-அனுபவம் முதிர்ந்தவனே, வைத்தியன்-தக்க வைத்தியனாவன், அகம் இன்றி-அகங்காரமில்லாமல், மெய்உணர்ந்து-தத்துவஞானத்தால் பொருள்களின் நிலைமையைஉள்ளபடி யறிந்து, ஐம்புலன்ஒழித்து விட்டவனே-ஐம்புலவாசைகளை அகற்றி விட்டவனே, மெய்ஞானி எனல் ஆம்-தத்துவஞானி யென்று கொண்டாடத் தக்கவனாவன், மாயவர்சகோதரி-கண்ணபிரானது உடன்பிறந்தவளான, மனோன்மணிக்கு-உமாதேவிக்கு, அன்புஆன வரபுத்ர-அன்புள்ளசிறந்தமகனே, வடிவேலா-கூர்மையான வேலாயுதத்தை யுடையவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

அஹம்-நான்; தானல்லாத உடம்மை யானென்று கருதி அதனுடத்துப் பற்றுச்செய்தல், அகம்காரமென்னும் அபிமானம் இனி, அகம்-பாவம் என்றுங் கொள்ளலாம். மெய்யுணர்தல்-பிறப்பு முத்திகளையும் அவற்றின் காரணங்களையும் உண்மையாக அறிதல்.

பார்வதியினது அம்சவிசேஷமான துர்க்கை, விஷ்ணு கிருஷ்ணனாய் வசுதேவர் மனைவியான தேவகிவயிற்றில் அவ

தரித்தவுடனே அப்பெருமானது விருப்பத்தின்படி தான் நந்தகோபர் மனைவியான யசோதையின் வயிற்றில் ஒருபெண்குழந்தையாய்ப் பிறந்ததனாலும், கண்ணன் கட்டளைப்படி வசுதேவர் எவருமறியாமல் கண்ணனாகிய ஆண்குழந்தையை யசோதையினிடத்திற் கொண்டுபோய் விட்டு அங்கிருந்த துர்க்கையாகிய பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து அக்குழந்தையையே தமக்குப் பிறந்ததாகச் சொல்லிக் கம்சனுக்குக் காட்டியதனாலும், இப்படித் துர்க்கைக்குத் தந்தையான நந்தகோபர் துர்க்கையின் முன் பிறந்தவனான கண்ணபிரானை வளர்த்த தந்தையாகுதலாகும்; பார்வதி திருமாலின் தங்கையெனப் படுவள், அப்பார்வதியின் குமாரனான முருகனை 'திருமாலின் மருமகன்' என்பதும் இவ்வுறவு முறைபற்றியதே, மனோன்மணி-மநோந்மநீ என்ற வடசொல்லின் விகாரம் (பகைவரது) மனத்தைக் கலக்குதல் பற்றிச் சிவபிரானுக்கு மனோன் மனனென்று ஒரு பெயராதலால் (இது; மநஸ் உந்மந என்பவை புணர்ந்தது) மனோன்மநீ என்பது அதன் பெண்பாலாய் அத்தன்மை யுடையவளான பார்வதியைக் குறிக்கும். வரபுத்ரன் அழகிலும் ஆற்றிலும் சிறந்த குமாரன். வடித்தல்-நெருப்பிலிட்டுக் காய்ச்சியடித்துக் கூராக்குதல். இனி-வடிவேல்-தேர்ந்தெடுத்த வேல் என்றுமாம்; சிறந்தவேல் என்பது கருத்து. சிவபிரான் குமாரனைப் போருக்கு அனுப்பும் பொழுது ஒப்புயர்வற்றதொரு வேலாயுதத்தைக் கொடுத்தனுப்ப, அது கொண்டு முருகன் போர் வெல்லுதல்பற்றி, வேலவனென்று அவனுக்கு ஒரு பெயர்.

விரைந்தடக்கத் தகுவன் இவையெனல்.

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்சமனை
யாளைவளர் பயிர்கொள் களையை
யஞ்சா விரோதிகளை யனியாய முடையோரை
யகிர்த்தியப் பெண்க ளார்ப்பைக்
கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட வடிமையைக்
களவு செய்யுந் திருடரைக்
கருதிய விசாரத்தை யடக்கமில் பலிசையைக்
கடிதான கோபந் தனை
மெய்க்கினித லாப்பிணியை யவையுதா சீனத்தை
வினைமூண் டிடுஞ் சண்டையை
விஷமேறு கோத்தை யன்றடக் குவதலான்
மிஞ்சிவிட லாகாது காண்
மைக்கினிய கன்னிகுற வள்ளிதெய் வானையை
மணஞ்செய்த பேரழகனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (12)

(இ-ள்.) அக்கினியை-நெருப்பையும், வாய்முந்து துர்ச்சநரை-வாய்முந்திப் பேசுகிற துஷ்டசனங்களையும், வஞ்சம் மனையாளை-கபடத்தையுடைய மனையாளையும், வளர்பயிர் கொல்களையை-வளராநின்ற பயிரை யழிக்கிற களையையும், அஞ்சாவிரோதிகளை-அஞ்சாத பகைவரையும், அநியாயம் உடையோரை-அநியாய முள்ளவர்களையும், அகிர்த்தியப்

பெண்கள்-கெட்ட செய்கையுள்ள பெண்களுடைய ஆரவாரத்தையும், கைக்கு இனியதொழிலாளியை-கைக்கினிதாகிய வேலைக்காரனையும், கொண்ட அடிமையை-கொண்ட அடிமையையும், களவுசெய்யுந்திருடரை-திருடுகிறதிருடரையும், கருதிய விசாரத்தை நினைப்பிலுண்டாகிறவிசாரத்தையும், அடக்கம் இல்பலிசையை-அடக்கமில்லாதசிறுபெண்ணையும், கடிதான கோபந்தனை-வேகமானகோபத்தையும், மெய்க்கு-சரீரத்துக்கு இனிது அல்லாபிணியை இனிதாகாத நோயையும், அவை உதாசினத்தை - சபையாரது உதாசீன வார்த்தைகளையும், வினைமூண்டிடும் சண்டையை-வினைமூளத்தக்க சண்டையையும், விஷம் ஏறுகோரத்தை-விஷமேறுகிற கொடுமையையும், அன்று-அப்பொழுதே, அடக்குவது அல்லாமல், அடக்குவதேயன்றி; மிஞ்சவிடலாகாது-அதிகரிக்க விடப்படாது, கைக்கு இனியகண்ணி-கையினால் அழகுபெற்ற கண்களையுடையவளாகிய, குறவள்ளி-குறவள்ளியையும், தெய்வானை-தெய்வானையையும், மணம்செய்த-மணஞ் செய்துகொண்ட, பேரழகனே-கட்டழகனே, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கொல்லுதல்-அழித்தல், கிர்த்தியம்-செய்கை, கொண்டவடிமை-முறியாள், பாலிகை-சிறுபெண், அது பலிசையெனக் குறுக்கலாயிற்று உதாசீனம்-வெறுப்பு, வினை தீவினை, (பாவம்) கோரம்-கடுமை (வேகம்.)

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக் கொடுக்குந் தியாகிக
டமக்குநற் பொரு டுரும்பு
தன்னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி
தளமெலா மொருதுரும்பு
பேரான பெரியருக் கற்பரது கையினிற்
பிரயோசனந்துரும்பு
பெரிதான மோக்ஷசிந் தனையுள் ளவர்க்கெலாம்
பெண்போக மொரு துரும்பு
தீராத சகலமும் வெறுத்துற விக்குவிறல்
சேர்வேந்த னொரு துரும்பு
செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாம்
செந்தமிழ்க் கவி துரும்பாம்
வாராருமணிகொண்முலை வள்ளிதெய் வானையை
மணம்புணரும் வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (13)

(இ-ள்.) தாராளமாகக் கொடுக்கும்-மிகுதியாகக் கொடுக்கிற, தியாகிகள் தமக்கு-தியாகிகளுக்கு, நல்பொருள்-துரும்பு-நல்லபொருளானது துரும்பாகும், தன் உயிரை எண்ணாத சூரனுக்கு-தன் உயிரை யொருபொருளாய் மதிக்காத சூரனுக்கு, எதிராளி - பகைவனது, தளம் எல்லாம் - சேனைகளெல்லாம், ஒரு துரும்பு - ஒரு துரும்பாகும், பே

ரான பெரியருக்கு-பிரபலரான, பெரியோருக்கு, அற்பரது கையினில்-அற்பருடைய கையினின்றும் பெறுகிற, பிரயோஜனம் - லாபம், துரும்பு - துரும்பாகும், பெரிதான-சிறந்ததாகிய, மோக்ஷ சிந்தனையுள்ளவர்க்கு எல்லாம் - முத்தி விருப்பமுள்ளவருக்கெல்லாம், பெண் போகம் - மாதரின்பம், ஒரு துரும்பு-ஒரு துரும்பாகும், தீராத சகலமும்-விட்டுநீங்காத எல்லாப்பற்றுகளையும், வெறுத்த துறவிக்கு - வெறுத்த சந்நியாசிக்கு, விறல்சேர்வேந்தன் - வெற்றிபொருந்திய அரசன், ஒரு துரும்பு-ஒரு துரும்பாவான். செய்யகலை-செவ்வையாகிய கலைகளையுடைய, நாமகள் - சரஸ்வதியின், கடாக்ஷம் உள்ளோர்க்கு எல்லாம் - கிருபையுள்ளவர்களுக்கெல்லாம், செந்தமிழ்கவி - செந்தமிழ்க்கவிபாடுதல், துரும்பு ஆம் - துரும்பாகும், வார் ஆரும்-கச்சுப்பொருந்திய, மணிகொள் முலை-ரத்நாபரணங்களை யணிந்த தனங்களையுடைய, வள்ளிதெய்வானையை-வள்ளி தெய்வானையென்னு மிருவரையும், மணம்புணரும்-மணம்புணர்ந்த, வடிவேலவா-வடிவேலையுடையவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எ-று)

தியாகி-கொடையாளி. சூரன்-வீரன் சகலமும்-அகப்பற்றும் புறப்பற்றும் கடாக்ஷம் - கடைக்கண்பார்வை அணிகொள் முலையெனப்பிரித்து அழகைக்கொண்ட முலையென்று முரைக்கலாம் வடிவேல் - வடித்தவேல் (கூரிட்டவேல்)

இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி
பார்விளக் குவது மேகம்
பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதரசு
பரிவிளக் குவது வேகம்
இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநல
மிசைவிளங் குவது சுதியூ
ரிடம்விடக் குவதுகுடி யுடல்விளக் குவதுண்டி
யினியசொல் விளக்குவ தருள்
புகல்விளக் குவதுகொடை தவம்விளக் குவதரிவு
பூவிளக் குவது வாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக் குவதறிவு
புத்தியை விளக்குவது நூல்
மகம்விளக் குவதுமறை சொல்விளக் குவதுநிசம்
வாவியை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (14)

(இ-ள்) பகல்விளக்குவது இரவி - பகற் காலத்தை விளக்குவது சூரியன், நிசிவிளக்குவதுமதி - இராக்காலத்தை விளக்குவது சந்திரன், பார்விளக்குவது மேகம் - பூமியை விளக்குவது மேகம், பதிவிளக்குவது பெண் - வீட்டை விளக்குவதுபெண், குடிவிளக்குவது அரசு - குடிகளை விளக்குவது அரசன், பரிவிளக்குவது வேகம் - குதிரையை விளக்கு

வது அதன்வேகம், இகல்விளக்குவது வலி - பகையை விள க்குவது பலம், நின்றவிளக்குவது நலம் - நிறையை விளக்கு வது நன்மை, இசைவிளக்குவது சுதி - இராகத்தை விளக்கு வது சுதி, ஊரிடம்விளக்குவதுகுடி - ஊரிடத்தை விளக்கு வது குடி, உடல்விளக்குது உண்டி-உடம்பை விளக்குவது உணவு, இனியசொல் விளக்குவது அருள் - இன்சொல்லை விளக்குவது அருள், புகல்விளக்குவது கொடை-புகலைவிளக் குவது ஈகை, தவம் விளக்குவது அறிவு - தவத்தைவிளக்கு வது அறிவு, பூவிளக்குவது வாசம் - மலரை விளக்குவது மணம், பொருள் விளக்குவது திரு - பொருளை விளக்குவது திருமகள், முகம்விளக்குவது நகை - முகத்தை விளக்குவது சிரிப்பு, புத்தியை விளக்குவது நூல் - புத்தியை விளக்குவது சாஸ்திரம், மகம் விளக்குவது மறை-யாகங்களை விளக்குவது வேதம், சொல்விளக்குவது நிசம் - சொல்லை விளக்குவது உண்மை, வாவியை விளக்குவது நீர்-தடாகத்தை விளக்குவ து நீர். மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே.

இரவி முதலியவற்றோடு ஆகும் என்றொரு சொல் வரு வித்து இறுதியிற் கூட்டியுரைத்துக்கொள்க பதி கணவன் எனினுமமையும். நலம் - நற்குணம். புகல் - அடைக்கலம் புகுந்தவன்.

பிறப்பிட நன்மையால் நன்மைபெறுமை.

சிங்கார வனமதி லுதிப்பினும் காகமது
தீஞ்சொல் புகல் குயிலாகுமோ

திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகுமோ
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
தானைபின் கன்றாகுமோ
வாண்மையா கியநல்ல குடியிற்பிறந்தாலு
மசடர்பெரி யோராவ ரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான்
சாலக்கி ராம மாமோ
தடமேவு கடனீரி லேயுப்பு விளையினுஞ்
சாரசர்க் கரையாகு மோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (15)

(இ-ள்) சிங்கார வனமதில் - சிங்காரத் தோட்டத்தில், உதிப்பினும்-பிறந்தாலும், காகமது - காகமானது, தீசொல் புகல் - இன்சொற் சொல்லுகிற, குயில் ஆகுமோ - குயிலாகுமா, (ஆகாது) திரைஎறியும் - அலைவீசுகிற, வாவியில்பூத்தாலும் - தடாகத்தில் மலர்ந்தாலும், கொட்டி - கொட்டிப் பூவானது, செங்கஞ்சமலர் ஆகுமோ - செந்தாமரைப் பூவாகுமா (ஆகாது), அம்கானகத்தில் பிறந்தாலும் - அழகிய காட்டிற் பிறந்தாலும், முயலானது - முசலானது, ஆனையின்கன்று ஆகுமோ-யானைக்கன்றாகுமா (ஆகாது), ஆண்மையாகிய நல்லகுடியிற் பிறந்தாலும் - ஆண்மையுள்ள நற்குடியிற்பிறந்தாலும், அசடர்-மூடர், பெரியோர் ஆவரோ

பெரியோராவாரோ (ஆகார்) சங்குஆடு - சங்குகள் விளையா டுகிற, பாற்கடல் பிறந்தாலும் - பாற்கடலிற் பிறந்தாலும், கத்தை-கத்தையானது, சாலக்கிராமம் ஆமோ - சாலக்கிரா மம் ஆகுமா (ஆகாது) தடம்மேவு - பெருமைபொருந்திய கடல்நீரிலே-கடனீரில், உப்புவிளையினும்-உப்பு விளைந்தாலும் சாரம் - சாரமுள்ள, கர்க்கரை ஆகுமோ - சர்க்கரையாகு மா (ஆகாது), மங்காத-அழியாத, செந்தமிழ்-செந்தமிழை, குறுமுனிக்கு-அகஸ்தியமுனிவனுக்கு, உபதேசம் வைத்த - உபதேசித்த, மெய்ஞ்ஞானகுருவே-உண்மையான ஞானாசி ரியனே, மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே. (எ-று)

சிங்காரம்-அலங்காரம், நீ - மதாரம், அம்கானகத்தில் என்றது பெருங்காட்டில் என்றபடி, அசடர் - குற்றமுடை யவர், அசடு-குற்றம், சாரம்-இனிமை.

பலர்க்கும் பயன்படுவன.

கொண்டல்பொழி மாரியு முதாரகுற் குணமுடைய
கோவுமு ருணியி னீருங்
கூட்டமிடு மம்பலத் தருதருவி னிழலுங்
குடியாளர் விவசாயமும்
கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியிற்
கனிபல பழுத்த மரமுங்
கருணையுட னேவைத் திடும்தணீர்ப் பந்தலுங்
காவேரி போலாற்ற மும்
விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
விசயா ருத சிதமும்

விவேகியெனு நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகார மாம்
வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (16)

(இ-ள்) கொண்டல் பொழிமாரியும் - மேகம் பொழி கிறமழையும், உதாரம் - ஔதார்ய மென்கிற, சற்குணம் உடைய - நற்குணமுள்ள, கோவும் - அரசனும், ஊருணியின் நீரும் - ஊருணியிலுள்ள நீரும், கூட்டம் இடும் - கூட்டங்கூடு கிற, அம்பலத்து உறு - அம்பலத்திலுள்ள, தருவின்நிழலும் மரநிழலும், குடியாளர் - குடித்தனக்காரருடைய, விவசாய மும் - பயிர்த்தொழிலும், கண்டவர்கள் எல்லாம் வரும் - கண் டவரெல்லாரும் வருகிற, பெருஞ் சத்திரம் - பெரியசத்தி ரம், ... கனி பல பழுத்த மரமும் - பல பழங்களைப் பழுத்த மர மும், கருணையுடனே - அருளோடு, வைத்திடும் - வைக்கப் படுகிற, தணீர்ப்பந்தலும் - தண்ணீர்ப்பந்தலும், காவேரியா ற்றை நிகர்க்கிற ஊற்றும், ஊற்றும், விண்தலத்து - ஆகா யத்தினிடத்தில், உலவு - சஞ்சரிக்கிற, சந்திராதித்த கிரண மும் - சந்திர சூரியர்களுடைய கிரணங்களும், வீசும் - அடிக் கின்ற, மாருதம் - காற்றினது, சீதமும் - குளிர்ச்சியும் விவே கியென்னும் - விவேகியென்கிற, நல்லோனிடத்தில் உறு - நல்லவனிடத்திற் பொருந்திய, செல்வமும் - பொருளும், வெகுசனர்க்கு - அநேக சனங்களுக்கு, உபகாரம் ஆம் - உபகாரமாகும், வண்டு இமிர் - வண்டுகள் ஒலித்தற்கிட மாகிய, கடப்பமலர்மாலை - கடப்பமலர்மாலையை, அணி -

தரித்த, செங்களபம்-செஞ்சந்தன மணிந்த, மார்பனே-மார்பையுடையவனே, வடிவேலவா - வடிவேலவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

உதாரம்-ஈகைக்குணம், ஊருணி - ஊராரெல்லாராலும் உண்ணப்படுகிற நீரையுடைய குளம். அம்பலம்-பொதுவிடம் சந்தி - நாற்றெருக்கூடுமிடம். சந்திராதித்த கிரணம் - நிலவு. வெளியில். விவேகி - அறிவுள்ளவன். இமிர்தல்-ஒலித்தல்.

தாமழியினுங் குணமறியாதவை.

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினுந்
தன்னொளி மழுங்கிடாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமோ
தன்மணங் குன்றிடாது
பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய் விடாது
துங்கமணி சாணையிற் றேய்ந்துவிட் டாலுந்
துலங்குகுண மொழியாது பின்
றொன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவறுகுமோ
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புய வாசனே

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (17)

(இ-ள்.) தங்கமானது-பொன்னானது, தழலில் - நெருப்பில், நின்று உருகிமறுகினும் - நின்றுருகியாடினாலும், தன் ஒளிமழுங்கிடாது-தனது ஒளிகுறையாது, சந்தனக்குறடு-சந்தனக் கட்டையானது, மெலிந்து தேய்ந்தாலும் - மெலிந்து தேய்ந்திட்டாலும், தன் மணம் குன்றிடாது-தனது மணங்குறையாது, பொங்கம்மிகு சங்கு-அழகு மிகுந்த சங்கானது, செந்தழலில் வெந்தாலும் - செந்தீயில் வெந்தாலும், பொலி வெண்மை குறைவுறாது - விளங்குகிற வெண்ணிறமானது குறைவுபடாது, நன்பால்-நல்ல பாலானது, போதகாய்ந்து - மிகவுங் காய்ந்து, குறுகினாலும் - அளவிற் குறைந்தாலும், பொருந்துசுவை போய்விடாது, துங்கம்மணி-பரிசுத்தமான ரத்நம், சாணையில் தேய்ந்துவிட்டாலும்-சாணையிலிட்டுத்தேய்ந்துபோனாலும், துலங்கு குணம்-விளங்குகின்ற குணமானது ஒழியாது - (அதைவிட்டு) நீங்காது, பின்-பிறகு, தொன்மைதரு பெரியோர் - பழமையாகிய பெரியோர்கள், மடிந்தாலும் மாண்டுபோனாலும், அவர்களது - அவர்களுடைய, தூயநிறை தவறு ஆகுமோ - பரிசுத்தமாகிய நிறைகுணம் தவறிப்போகுமோ, மங்களகல்யாணி-மங்கள கல்யாணியாகிய, குறமங்கை-குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியையும், சுரகுஞ்சரியை-தெய்வயானையையும், மருவி-கூடுகின்ற, திண்புயவாசனே பரிமளிக்கிற திண்டோளனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

தங்கம்-உயர்ந்தபொன், மறுகுதல் - ஆடுதல், குறடு - கட்டை. பொங்கம்-அழகு, குறைவுறு - ஒருசொல், பால் என்றதனுல்சுவை இன்சுவைக்காயிற்று, மணிக்கு ஒளிவிடுங் குண மியற்கையாதலால் துலங்குகுணம் என்ருர். நிறை - இங்குப்புகழையுணர்த்தும், மங்கள கல்யாணி - சுபகரமான கல்யாண குணமுள்ளவள்.

நரகில் வீழ்வோர்.

மன்னவரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
 மறந்தவர் கொலைப் பாதகர்
மாதா பிதாவைநிந் தித்தவர்கள் பரதார
 மருவித் திரிந்தபேர்கள்
அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணிஞெ
 ரரசடக் கிய வமைச்ச
ராலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக
 ரருந்தவர் தமைப்பழித் தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
 முகஸ்துதி வழக் குரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினத்தவர்கள்
 மூழுதும்பொ யுரைசொல்லு வோர்
மன்ஞெருவர் வைத்தபொரு ளபகரித்தோ ரிவர்கண்
 மாநரகில் வீழ்வ ரன்ருே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (18)

(இ-ள்.) மன்னரை-தமது அரசரை, சமரில்விட்டு-போர்க்களத்தில் தனியேவிட்டு, ஓடினவர் - ஓடினவர்களும், குருமொழி மறந்தவர் - குருவாக்கியத்தை மறந்தவர்களும், கொலைப்பாதகர் - கொலைப்பாதகரும், மாதா பிதாவை நிந்தித்தவர்கள் - தாய்தந்தையரை நிந்தனை செய்தவர்களும், பரதாரம் - பிறர்மனைவியரை, மருவித்திரிந்தபேரும் - கூடித்திரிந்தபேர்களும், அன்னம் கொடுத்தபேருக்கு-சோறிட்டவர்களுக்கு, அழிவை எண்ணினோர்-கெடுதி நினைத்தவர்களும், அரசு அடக்கிய அமைச்சர்-அரசரையடக்கிய மந்திரிகளும், ஆலயம் இகழ்ந்தவர்கள் - தேவாலயங்களை யவமதித்தவர்களும், விசுவாசகாதகர்-விசுவாசகாதகர்களும், அருந்தவர்தமைப் பழித்தோர் - அரிய தவத்தோரைப்பழித்தவர்களும், முன்-முன்னே, உதவியாய்செய்த-உதவியாக ஒருவர்செய்த, நன்றியை மறந்தபோ-உபகாரமதை மறந்தபேர்களும், முகஸ்துதிவழக்கு உரைப்போர் - தாக்ஷிண்யத்தின் பொருட்டு வழக்குரைப்பவரும், முற்றுஞ் சிவபக்தரை - முதிர்ந்த சிவபக்தர்களை, நடுங்க சினத்தவர்கள்-நடுங்கும்படி கோபித்தவர்களும், முழுதும் பொய் உரைசொல்லுவோர் - முழுதும் பொய்யையே பேசுவோரும், மன-மிகுதியாக, ஒருவர் வைத்தபொருள்-ஒருவர்வைத்தபொருளை, அபகரித்தோர் - அபகரித்துக்கொண்டவர்களும் ஆகிய, இவர்கள்-இவர்கள் யாவரும், மாநரகில்-பெரிய நரகத்தில், வீழ்வர் அன்றோ - விழுவார்களல்லவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கொலைப்பாதகர் கொல்லுந் தொழிலையே செய்கிற பாவிகள். சம்சாரம் - மனைவி, அரசடக்குதல் - அரசரைத் தம்

வசமாகச் செய்து கொள்ளல், விசுவாச காதகர்-நம்பிக்கை துரோகஞ் செய்வோர், முகஸ்துதி வழக்குரைப்போர்-தாக்ஷி ண்யமுள்ளவர் பட்சமாக வழக்குப் பேசுவோர், ஒருவர்வைத்த பொருள்பகரித்தோர்-காப்பாற்றிக் கொடுக்கும்படி ஒருவர் கொண்டுவந்து வைத்த பொருளைக் கவர்ந்து கொண்டு இல்லையென்று சொல்லுவோர்.

சரீரசுகம்.

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறுவி ரோசனந் தான்
வருஷத் திரண்டுவிசை தைலந் தலைக்கிடுதல்
வாரத் திரண்டு விசையாம்
மூதறிவி னுடுதனது வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன்சை யோகம்
முற்றுதயிர் காய்ச்சுபா லீர்மோ ருருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவ்வளவா னாலும் புசித்தபின்
ருகந் தணக்கு வாங்கல்
தயையாக விண்டபி னுலாவலியை மேலவர்
சரீரசுக மாமென்பர் காண்
மாதவரு மாரிசா ரங்கத் துதித்தகுற
வள்ளிக் குகந்த சரசா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (19)

(இ-ள்.) மாதத்து இரண்டுவிசை-மாதத்திற்கிரண்டுதரம் மாதரைபுல்குவது-மாதரைப் புணர்வது, வருஷத்துக்கு இர

ண்டுவிசை-வருஷத்துக்கிரண்டுதரம், மறு அறு விரோசநம்-குற்றமறுதற்குரிய விரோசநத்துக் கெடுத்துக் கொள்ளுதல், வாரத்து இரண்டுவிசை-வாரத்துக் கிரண்டுதரம், தலைக்கு தைலமிடுதல்-தலைக்கு எண்ணெ யிட்டுக்கொள்ளுதல், மூதறி வினோடு-பேரறிவுடன், தனதுவயதினுக்கு இளைய-தன்வய துக் கிளையவளாகிய, ஒருமொய்குழலுடன்-ஒருபெண்ணோடு சையோகம்-புணர்ச்சி செய்தல், முற்று தயிர்-முதிர்ந்த தயிர் காய்ச்சுபால்-காய்ச்சினபால், நீர்மோர்-நீர்மோர், உருக்கு நெய்-உருக்கின நெய், முதிராவழுக்கை இளநீர்-முதிராத வழுக்கையுள்ள இளநீர், சாதத்தில்-சோற்றில், எவ்வளவாகு லும்-எவ்வளவாயினும், புசித்தபின்-உண்டபிறகு, தாகந்தண ்குவாங்கல்-தாகத்துக்குத் தண்ணீர் பருகுதல், தயையாக வுண்டபின் உலாவல்-அன்போடு உண்டபிறகு உலாவுதல், (என்னும்) இவை-இவைக ளெல்லாம், மேலவர்-மேலோர் கள், சரீரசுகம் ஆம் என்பர்-சரீரசுகத்துக்குக் காரணங்களா கும் என்று சொல்லுவா, மாதவ குமாரி-பெரியதவசுயின்மக ளாய், சாரங்கத்துஉதித்த-மானினிடத்துப் பிறந்த, குறவள் ளிக்கு-குறவள்ளி நாயகிக்கு, உகந்தசரசா-விருப்பமுள்ள சரசனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே. எ-று.

புல்குதல்-புணதர், மறு-வயிற்றிலுள்ள கல்மஷங்கள் விரோசநம்-பேதி, மெய்குழல்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. நீர்மோர்-நீர்விட்டுவிளா வினமோர்; உருக்குநெய்-உண்ணும்போ துருக்கி வார்த்துக் கொள்ளுகிற நெய். சாதம்-சோறு,

யார்க்கு மனுபோகம் விடாமை-

தேசுபெறு மேருப்ர தக்ஷிணஞ் செய்துமதி
தேகவடு நீங்க வில்லை
திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவணன்
செறும்பகை யொழிந்த தில்லை
ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரைவே
றிலாமலே வாயு வாகு
மினியகண் ணாகிவரு பரிதியா னவனுக்
கிராகுவோ கனவி ரோதி
ஆகிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினு
மமைத்தபடி யன்றி வருமோ
வவரவர்க ளனுபோக மனுபவித் திடல்வேண்டு
மல்லால் வெறுப்ப தெவரை
வாசவனு மும்பரனை வரும்விசய சயவென்று
வந்துதொழு தேத்து சரணா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (20)

(இ-ள்.) தேசுபெறு-ஒளிபொருந்திய, மேரு-மேருமலையை, பிரதக்ஷிணம்செய்தும்-பிரதக்ஷிணம் பண்ணியும்-மதிசந்திரன், தேகவடு நீங்கவில்லை (தன் சரீரத்திலுள்ள களங்கம் நீங்கவில்லை, திருமால் உறங்கிடும் சேடனுக்கு-திருமால் படுத்துறங்கப் பெற்ற ஆதிசேஷனுக்கு, உவணன்-கருடனது, செறும்பகை-கொல்லும் பகையானது, ஒழிந்ததில்லை நீங்

கினதில்லை, ஈசன்கழுத்தில் உறுபாம்பினுக்கு-சிவபெருமா னது கழுத்திலுள்ள பாம்புக்கு, வேறு இரை இல்லாமலே-வேறு ஆகாரமில்லாமலே, வாயு ஆகும்-வாயுவா யிருக்கின் றது, இனியகண்ணுகிவரு-இனியகண்ணுய் வந்த, பரிதியா னவனுக்கு-சூரியனுனவனுக்கு, இராகுவோ-ராகுவென்னும் பாம்போ, கனவிரோதி-பெரும்பகை, ஆசுஇல்லா-குற்றமில் லாத, பெரியோரிடத்தினில் அடுக்கினும்-பெரியோரிடத்தில் அடுத்தாலும், அமைத்தபடி யன்றிவருமோ-அமைத்தபடி யேயன்றி வேறுவிதமா யுண்டாகுமோ, அவரவர்கள்-அவா வர்களுடைய, அநுபோகம்-அநுபவம், அனுபவித்திடல் வேண்டும்-அனுபவித்திடவே வேண்டும், அல்லால்-அப்படி செய்யாமல், எவரை வெறுப்பது-எவரை வெறுத்துக் கொள் வது, வாசவனும்-இந்திரனும். உம்பர் அனைவரும்-தேவர்க ளெல்லாரும், விசயசயவென்று-விசயசயவென்று, வந்தொ ழுது-வந்துவணங்கி, ஏத்து-துதிக்கின்ற, காருை-திருவடியை யுடையவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே. எ-று.

பிரதக்ஷிணம்செய்தல்-வலம் வருதல், அமைத்தபடி அவரவர் செய்த நல்வினை தீவினைகளுக் கேற்றவாறு இறைவ னால் நியமிக்கப் பட்டபடி அநுபவம்-நுகர்ச்சி

இதுவின்றி யிது சிறவாதெனல்.

குருவிலா வித்தை கூறறிவிலா வாணிபங்
குணமிலா மனைவி யாசை

குடிநல மிலாநாடு நீதியில் லாவரசு
குஞ்சரமி லாத வெம்போர்
திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந்
தியானமில் லாத நிஷ்டை
தீபமில் லாதமனை சோதரமி லாதவுடல்
சேகரமி லாத சென்னி
உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக
லுண்மையில் லாத வசனம்
யோசனையி லாதமந்த்ரி தைரிய மிலாவீர
முதவியில் லாத நட்பு
மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
வையத் திருந்தென் பயன்
மயில்மேலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (21)

(இ-ள்.) குரு இல்லாவித்தை-குருவில்லாத வித்தையும், கூர் அறிவு இல்லாவணிகம்-நுட்பமாகிய அறிவில்லாதவர்த் தகமும், குணம்இல்லா மனைவி-நற்குணமில்லாத மனைவியும், ஆசைகுடிநலம் இல்லாநாடு-அன்புள்ளகுடிகளின் நன்மையில் லாநாடும், நீதியில்லா அரசு-நீதியற்ற அரசாட்சியும், குஞ் சரம் இல்லாதவெம்போர்-யானையில்லாத கொடியயுத்தமும், திரு இல்லா மெய்த்திறமை-செல்வமில்லாத மெய்வலியும், பொறை இல்லா மாதவம்-பொறுமையில்லாத பெருந்தவ மும், தியாநம் இல்லாத நிஷ்டை-தியாநமில்லாத நிஷ்டை

யும், தீபம் இல்லாதமனை விளக்கில்லாத வீடும், சோதரம் இல்லாத உடல்-உடன்பிறப்பில்லாத வுடம்பும், சேகரம் இல்லாத சென்னி-முடியில்லாதசிரசும், உருஇல்லா-அழகில்லாத, மெய்வளம்-சரீரவளமும், பசிஇல்லா உண்டி-பசியில்லாத வுணவும், புகல்-சொல்லப்பட்ட, உண்மை இல்லாதவசனம்-மெய்யில்லாத சொல்லும், யோசனை இல்லாமந்திரி-யோசனையில்லாத மந்திரியும், தைரியமில்லா வீரம்-தைரியமில்லாத வீரத்தனமும், உதவியில்லாத நட்பு-உதவியில்லாத சிநேகமும், மருஇல்லா-வாசனையில்லாத, வண்ணமலர் நிரமுள்ளபூவும், பெரியோர் இல்லாத சபை-பெரியோரில்லாத சபையும், வையத்து இருந்து-உலகத்திலிருந்து, பயன் என்-பயன்யாது, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

தியாகம்-இறைவன்மேலன்பு. சேகரம்-கிரீடம், வண்ணம்-அழகுளனினும்பொருந்தும். என்பயன் என்றவினு ஒருபயனு மில்லையென்னும் பொருளில் வந்தது.

பகைக்கப்படாதவ ரிவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையு
மரியதரு ணீகர் பகையு
மடுத்துக கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு
மருளிலாக் கொலைஞர் பகையும்
விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையுமிகு
விகடப்ர சங்கி பகையும்

வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும்
விழைமருத் துவர்கள் பகையும்
ஊரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையு
முறைவின்முறை யார்கள் பகையு
முற்றதிர வியமுளார் பகையுமந் திரிபகையு
மொருசிறிது மாகாது காண்
வரநதியின் மதலையென வினியசர வணமிசையில்
வருதருண சிறு குழவியே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (22)

(இ-ள்.) அரசர்பகையும்-அரசர்களுடைய பகைமையும் தவம்புரி-தவத்தைச் செய்கிற, தபோதனர்பகைகிம்-தவச்செல்வர்களுடைய பகைமையும், அரிய அருமையாகிய, கருணிகர் பகையும்-கணக்கர்களுடைய பகைமையும், அடுத்து கெடுப்போர் கொடும்பகையும்-சிநேகித்துக் கெடுப்போர்களுடைய கொடிய பகைமையும், உள்பகைமையும்-உட்பகைமையும், அருள்இல்லா-கிருபையில்லாத, கொலைஞர்பகையும்-கொலை செய்வோர்களுடைய பகைமையும், வீரகுமிகும் வல்லமை மிகுந்த, ஊரிலுள்ளோருடன் பகையும்-ஊரோடு கொள்ளும் பகைமையும், மிகுவிகட ப்ரசங்கிபகையும்-மிகுதியாகிய விகடப்ரசங்கியின் பகைமையும் வெகு சனப்பகையும்-அநேக சனங்களோடு கொள்ளும் பகையும், மந்திரவாதியின் பகையும்-மந்திரவாதியின் பகைமையும், விழைமருத்துவர்கள் பகையும்-விரும்புதற்குரிய வைத்தியர்களோடு கொள்

ளும் பகைமையும், உரம்மருவு கவிவாணர் பகையும்-வலிமை பொருந்திய கவிவாணருடைய பகைமையும், ஆசான் பகையும்-ஆசாரியனுடைய பகைமையும், உறவின்முறையார்கள் பகையும்-பந்துக்களுடைய பகைமையும், உற்றமிகுந்த, திரவியம் உள்ளார் பகையும்-பொருளுடையோரது பகைமையும், மந்திரிபகையும்-மந்திரியோடு கொள்ளும் பகைமையும், ஒரு சிறிதும் ஆகாது-ஒரு சிறிதாயினு மிருக்கப்படாது, வரநதியின் மதலையென கங்காபுத்திரனென்று சொல்லும்படி, இனிய-இனிதாகிய சரவணம்மிசையில்-சரவணப் பொய்கையில், வரு-அவதரித்த, தருணம்-(என்றும்மாறாத) இளமைப் பருவத்தையுடைய, சிறுகுழவியே-சிறியகுழந்தையே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

அரிய கருணீகர் பகையும் என்றது அவர்கள் பகைகொண்டோர் கெடுவது திண்ணமாதலால் அரிய வென்ற அடைமொழி கொடுத்தார். ஆற்றலிற் பெரியராகிய அரசரைப்பகைத்தால் அவரால் உடனே யழிதல் தவறாது, அரசன் அன்றுகொல்லும் என்பது பழமொழி. தவத்தாற் பெரியோராகிய முனிவரைப் பகைத்தால் அவர் தவ வல்லமையால் சாபாநுக்ரஹசக்தியை யுடையவ ராதலால் கோபங்கொண்டு சபித்து அழித்துவிடுவர். ஊர்க் கணக்கரைப் பகைத்தால் அவரால் பல மாறுபாடுகள் செய்யப் பட்டு நஷ்டத்திற்கும் துன்பத்துக்கும் உள்ளாதல் நாட்டில் பிரசித்தம் ஆதலால் அவரது கொடுமை தோன்ற 'அரிய கரு

ணிகற்பகை, என்றார். அடுத்துக்கெடுத்தல் சந்திவிக்கிரகம் என்னும் தந்திரம் உட்பகைபுறப்பகைவர்க்கு இடருண்டாக்கிக்கொடுத்து அவர் வெல்லுமளவும் அவர்க்குத் துணையாயிருக்கும் பகைவர். 'ஊருடன்பகைக்கின் வேருடன் கெடும்' ஆதலால் ஊராரோடும் பகைக்கொள்ளலாகாது. அறிவும் தந்திரமும் திறமையும் இல்லாரோடு பகைகொண்டால் பெருந்தீங்கு உண்டாமாதலால், 'விரகு மிகும்ஊரிலுள்ளாருடன்பகை ஒருசிறிதும் ஆகாது, என்றார். விகடக்காரனைப் பகைத்தால், அவன் பலரும் பரிசிக்கும்படி விளையாட்டாகவே தூஷித்து இவன் குற்றங்களையெல்லாம்வெளித்தூற்றுவான் வெகுசனவிரோதம் பொல்லாது என்பது வெளிப்படை. மந்திரவாதியுடன் பகைத்தால் அவன் மந்திரசுக்தியால் கொல்லுவான், மிகவும்நம்பவேண்டிய வைத்தியரைப் பகைத்தால் அவர் இவனது நோயைப்பரிகரிக்காமையோடு அதனை மிகுவிக்கவும் மருந்தில்நஞ்சிட்டுக் கொல்லவும் கூடும், கவிவாணரோடு பகைகொண்டால் அவர் வாழ்த்தவும் வையவும்வல்ல தமது வாக்குவல்லமையால் அரம்பாடி அழிப்பர். ஆசாரியனோடு பகைக்கொண்டால், அந்தப்பகைமை இம்மையிலும் மறுமையிலும் கேட்டைத்தரும் வரநதியின்மதலை இதுபற்றி முருகனுக்கு காங்கேயன் என்றொரு பெயர்உண்டு, தபோதநர், விகடப்ரசங்கி, புஜகம், மந்த்ரவாதி, வரநதி, என்பன வடசொற்கள். தபோதநர்-தவத்தையே செல்வமாகக் கொண்டு அதனைப் பாதுகாப்பவர், மருத்துவர்-மருந்துக்கு உரியவர் கவிவாணர்-கவிபாடி வாழ்பவர், வாணவர்

வாழ்நர் என்பதன் மரூஉ, இவ்வாறன்றிக் கவிவாணர் என்பதற்குக் கொடாதவர்மீது வசைக்கவி யாகிய வர்ணத்தைப் பிரயோகிப்பவர் என்றுரைத்தலும் பொருந்தும், தருணப்-பருவம், சிறுகுழவியென மேலேவருதலால் இளமைப்பருவ மென் றுரைக்கப் பட்டது.

பேயெனப்படுவோ ரிவரெனல்,

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையின்முகங்
 கடுகடுக் கின்ற பேயுங்
கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமாந்து
 கண்விழிக் காத பேயும்
அடைவுடன் சத்துருவின் பேச்சைவிசு வாசித்
 தகப்பட் டிழுந்த பேயும்
ஆசைமனை யாளுக்கு நேசமா வுண்மைமொழி
 யானதை யுரைத்த பேயும்
இடரிலாந ல்லோர்கள் பெரியோர் களைச்சற்
 றெண்ணு துரைத்த பேயும்
மினியபரி தானத்தி லாசைகொண் டொருவற்
 கடுக்கண்செய் திட்ட பேயும்
மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
 வசைபெற்ற பேய்க ளன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (23)

(இ-ள்.) கடன்உதவுபேர்-கடன் கொடுத்த பேர்கள் வந்துகேட்கும் வேளையில்-வந்துகேட்கும் சமயத்தில், முகம்

கடுகடுக்கின்ற பேயும்-முகம் கடுகடுத்துப் பேசுகிற பேயும், கனம்மருவு-கனம் பொருந்திய, பெரியதனம் வந்தவுடன்-பெருஞ்செல்வம் வந்தவுடனே, இறுமாந்து-இறுமாப்படைந்து, கண்விழிக்காத பேயும்-கண்திறவாத பேயும், அடைவுடன்-கிரமமாக, சத்துருவின் பேச்சை விசுவாசித்து பகைவனது பேச்சைநம்பி, அகப்பட்டு-அவனிடத்தில் அகப்பட்டுக்கொண்டு, உழன்றபேயும்-உழலாநின்ற பேயும், ஆசை மனையாளுக்கு-ஆசையுள்ள மனைவிக்கு-நேசமாய்-சிநேகமாய, உண்மை மொழியானதை-உண்மை மொழியை, உரைத்த பேயும்-சொன்ன பேயும், இடல் இல்லா-துன்பமற்ற, நல்லோர்கள்பெரியோர்களை-நல்லவர்களாகிய பெரியோர்களை, சற்றும் எண்ணுது-சிறிதும் மதிக்காமல்-உரைத்த பேயும்-பேசினபேயும், இனிய பரிதானத்தில்-ஆசைகொண்டு, ஒருவற்கு-ஒருவனுக்கு, இடுக்கண் செய்திட்ட பேயும்-துன்பஞ்செய்தபேயம், மடமனையிருக்க-இளமையாகிய மனையாளிருக்க, பரத்தையை புணர்பேயும்-பரத்தையரைப் புணர்கின்ற பேயும், வசைபெற்ற பேய்கள் அன்றோ-இகழ்ச்சி பெற்ற பேய்களல்லவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கடுகடுத்தல்-வெடுவெடுத்தல். பரிதானம்-லஞ்சம்.

அவ்வவ்வினத்திலுயர்ந்தவை.

தாருவிற் சந்தான நதியினிற் கங்கைவிர
 தத்தினிற் சோம வாரந்
தகைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டந்
 தலத்திற் சிதம்பர தலம்

சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
    தேனுமுனி வரினா ரதன்
செல்வநவ மணிகளிற் றிகழ்பதும ராகமணி
    தேமலரி லம்போ ருகம்
பேருலவு கற்பினி லருந்ததி கதிக்கிடு
    மெல்லத்தின் மாருதம் பாஷையிற்
பேசிலோ ராவகத் தமிழினி லகத்தியம்
    பிரணவம் மந்திரத் தில்
வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினின்
    மகாமேரு வாகு மன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே (24)

(இ-ள்.) தருவினில்-தருக்களில், சந்தனம்-சந்தனவிருக்ஷமும், நதியினில்-நதிகளில், கங்கை-கங்காநதியும், விரதத்தினில்-விரதங்களில், சோமவாரம்-சோமவார விரதமும், தலைபெறு நிலத்தினில்-பெருமை பெற்ற பூமியில், காஸ்மீர கண்டம்-காஸ்மீரகண்டமும், தலத்தில்-தலங்களில், சிதம்பர தலம்-சிதம்பரதலமும், சீர்உலவு ரிஷிகளில்-சிறப்புப் பொருந்திய ரிஷிகளில், வசிட்டர்-வசிஷ்டரிஷியும், பசுவில்-பசுக்களில், காமதேனு-காமதேனுவும், முனிவரில்-முனிவர்களில் நாரதன்-நாரதமுனிவனும், செல்வம் நவமணிகளில்-செல்வமாகிய நவரத்தினங்களில், திகழ்பதுமராகமணி-விளங்குகிற பதுமராகமணியும், தேமலரில்-வாசனையுள்ள மலர்களில்,

அம்போருகம்-தாமரைமலரும், பேர் உலவு கற்பினில்-பிர பலமான கற்பினர்களில், அருந்ததி-அருந்ததியும், கதித்திடு பெலத்தில்-பெருத்த பலத்தில், மாருதம்-வாயுவும். யானை யில்-யானைகளில், பேசில்-எடுத்துப் பேசுமிடத்தில், ஐராவ தம்-ஐராவதமும். தமிழினில்-தமிழ்நூல்களில், அகத்தியம்-அகஸ்தியமும், மந்திரத்தில் பிரணவம்-மந்திரங்களில் பிர வண மந்திரமும், வாரிதியிலே-சமுத்திரங்களில், திருப்பாற் கடல்-திருப்பாற் கடலும், குவட்டினில்-மலைகளில், மகா மேரு-மகாமேரு மலையும், ஆகுமன்றோ-உயர்ந்தன வாகுமல் லவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று-

திலம்-கண்டம். தலம்-சிவஸ்தலம, காமதேனு-சுவர்க் கம். இந்திரனது யானை-கீர்த்திசையானை, அகத்தியம்-அகத் தியமுனிவரால் செய்யப்பட்டதோர் நூல்.

அவரவர்க்கு பெலமாவன.

அந்தணர்க் குயர்வேத மேபெலங் கொற்றவர்க்
கரிவசௌ ரியமே பெல
மர்னவணி காக்குநிதி யேபெலஞ் சூத்திரர்க்
காயினே ருழவே பெலம்
மந்திரிக் குச்சது ருபாயமே பெலநீதி
மர்னுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குததவசு பெலமடவி யர்க்கு நிறை
மானமிகு கற்பே பெலம்

தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெலாஞ்
சாமிகா ரியமே பலஞ்
சான்றவர்க் குப்பொறுமை யேபலம் புலவோர்
தமக்குநிறை கல்வி பலமாம்
வந்தனை செய்யும்பூசை செய்பவர்க் கன்புபலம்
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (25)

(இ-ள்.) அந்தணர்க்கு-வேதியருக்கு, உயர்வேதமேபல ம்-உயர்ந்த வேதமே பலமாகும், கொற்றவர்க்கு-அரசருக்கு, அரியசௌரியமே பலம்-அரிதாகிய சௌரியமே பலமாகும், ஆனவணிசர்க்கு-உண்டாகிய வணிகருக்கு, நிதியேபலம்-திரவியமேபலமாகும், சூத்திரர்க்கு ஆயின்-சூத்திரர்க்கென்றால், ஏருழவேபலம்-ஏருழுதலே பலமாகும், மந்திரிக்கு-மந்திரியானவனுக்கு, சதுருபாயமே பலம்-சதுருபாயமேபல மாகும், நீதிமானுக்கு-நீதியுடையவனுக்கு, நடுவேபலம்-நடுநிலையேபலமாகும், மாதவர்க்கு-பெரிய தவசிகளுக்கு, தவசு பலம் (அவர்கள் செய்யும்) தவசே பலமாகும், மடவியர்க்கு-மாதருக்கு, நிறைமானம் மிகுகற்பேபலம்-நிறையும் மானமும் மிகுந்த கற்பமே பலமாகும், தந்திரம் மிகுந்த-தந்திர மிகுந்த, கனசேவகர் தமக்கு எல்லாம்-பெரிய சேவகர்களுக் கெல்லாம், சாமி காரியமேபலம்-யசமானனுடைய காரியஞ் செய்தலே பலமாகும், சான்றவர்க்கு-பெரியோர்களுக்கு, பொறுமையே பலம்-பொறுமையே பலமாகும், புலவோர்தமக்கு-புலவர்களுக்கு, நிறை கல்விபலம்

ஆம்-நிறைந்த கல்வியே பலமாகும், வந்தனையையும் பூசை செய்பவர்க்கு-வந்தனைசெய்கிற பூசைசெய்வோர்க்கு, அன்புபலம்-அன்பேபலமாகும், வானவடிவான வேலா-பாலரூபமான வேலனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

சௌரியம்-சூரத்வம். சதுருபாயம்-நான்குபாயங்கள். அவை சாமபேத தானதண்டங்கள். நிறை-நிறைகுணம். மானம்-பெருமை கற்பு-பதிவிரதாதர்மம். தந்திரம்-உபாயம். வந்தனை-வந்தித்தல் (துதித்தல்) வேலன்-வேலாயுதத்தையுடையவன்.

இருந்தும் பயன்படாதவை.

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
    தங்கிதென தராம லென்ன
தாராதர மிந்துமுறை செய்யாத மன்னரைச்
    சார்ந்திதென்ன நீங்கி லென்ன
பெருமையுட னுண்மையில் லாதவொரு பிள்ளையைப்
    பெற்றென பெறும லென்ன
பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
    பிடித்தென விடுக்கி லென்ன
தெருளாக மானமில் லாதவொரு சீவனஞ்
    செய்தென செயாம லென்ன
தேடியென வருபவர்க் கீயாத செல்வஞ்
    சிறந்தென முறிந்து மென்ன.

மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தென வரா மலென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (26)

(இ-ள்.) தருணத்திலே உதவிசெய்யாதநட்பாளர்-சமய த்தில் உதவிசெய்யாத சிநேகர்கள், பின்-பிறகு, தந்து என்ன தராமலென்ன-தந்தென்ன லபாம் தராமற்போனல் என்ன நஷ்டம், தராதரம் அறிந்து-அவரவர்களுடைய தராதரங்களைத் தெரிந்துகொண்டு, முறைசெய்யாத மன்னரை-அவரவர்க்குத்தகுந்த முறைப்படிசெய்யாத அரசரை சார்ந்து என்ன நீங்கில் என்ன-சேர்ந்தாலென்னலாபம் விட்டு நீங்கினு லென்னநஷ்டம், பெருமையுடன் ஆண்மையில் லாத ஒருபிள்ளையை-பெருமையோடு ஆண்மையு மில்லாத ஒருபிள்ளையை, பெற்று என்ன பெருமல் என்ன-பெற்று லென்னலாபம் பெருவிடி லென்ன நஷ்டம், பிரிமமாய்-இஷ்டமாய், உள்ளன்பு இல்லாதவர்கள் நேசம்-மனத் தன்பில் லாதவர்களுடைய நட்பை, பிடித்து என்ன விடுக்கில் என்ன-பற்றினுலென்ன லாபம் விட்டா லென்ன நஷ்டம், தெருள் ஆக மனமில்லாத-தெளிவாக மனமில்லாத. ஒருசீவனம்-ஒரு சீவனத்தை, செய்து என்ன செய்யாமல் என்ன-செய்தாலென்ன லாபம் செய்யாவிடின் என்ன நஷ்டம், தேகி எனவருப்வர்க்கு-தேகியென்று வருவோருக்கு. ஈயாத செல்வம்-கொடாத பொருள், சிறந்து என்ன முறிந்தும்

என்ன-உயர்ந்தால் என்னலாபம் தாழ்ந்தாலென்ன நஷ்டம், பருவு இளமை தன்னில் இல்லாதகன்னிகை - பொருந்திய இளமைப்பருவத்தில் இல்லாதபெண், பின்பு-பிறகு, வந்து என்ன வராமல் என்ன-வந்தாலென்ன லாபம் வராமற்போனல் என்னநஷ்டம், மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலேமேவு குமரேசனே. எ-று.

தாரதரம்-பெருமை சிறுமை (தாரதம்மியம்) முறைசெய்தல்-மரியாதைசெய்தல். ஆண்மை - ஆளுந்தன்மை. ஆணுத்தன்மை. சேவனம்-உத்தியோகம்.

உபகார மில்லாதவை.

கடனீர் மிகுந்தென்ன வொதிதான் பெருத்தென்ன
　　காட்டிலவு மலரி லென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
　　கானின்மழை பெய்து மென்ன
அடர்கழுதை லத்திகில மெல்லாங் குவிந்தென்ன
　　வரியகுண மில்லாத பெண்
ணழகா யிருந்தென்ன வாஸ்தான கோழைபல
　　வரியநூ லோதி லென்ன
திடமினிய பூதம்வெகு பொன்காத் திருந்தென்ன
　　திறன்மிகுங் கரடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூ ஷணமெலாஞ்
　　சித்திரத் துற்று மென்ன

மடமிகுந் தெவருக்கு முபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (27)

(இ-ள்.) கடல்நீர் மிகுந்து என்ன-கடல்நீரானது மிகுந்திருந்தாலென்னபயன், ஓதிதான் பெருத்து என்ன - ஓதிய மரம் பெருத்திருந்தாலென்ன பயன், காட்டு இலவு மலரில் என்ன-காட்டில் இலவமரம் பூத்தாலென்ன பயன், கருவேல் பழுத்து என்ன - கருவேலமரம்பழுத்தாலென்னபயன், நாய் பால் சுரந்து என்ன - நாய்ப்பால் சுரந்தாலென்ன பயன்; கானில் மழைபெய்தும் என்ன - காட்டில் மழைபெய்தாலும் என்ன பயன், அடர்கழு தைலத்தி-நெருங்கின கழுதைலத்தியானது, நிலம் எல்லாம் குவிந்து என்ன. பூமியெல்லாம் குவிந்திருந்தாலென்ன பயன், அரியகுணம் இல்லாதபெண்-அருமையாகிய நற்குணமில்லாத பெண்ணானவள், அழகாயிருந்தென்ன - அழகாயிருந்தா லென்ன பயன், ஆஸ்தான கோழை-ஆஸ்தான கோழையானவன், பல அரிய நூல்-பலவாகிய அரிய நூல்களை, ஓதில்என்ன-படித்தாலென்னபயன், திடம் இனிய பூதம் - வலியிற் சிறந்த பூதமானது, வெகு பொன்காத்திருந்து என்ன - அதிக திரவியத்தைக் காத்திருந்தாலென்னபயன், திறல்மிகும்-வலிமிகுந்த, காடிமயிர் காடியின் மயிரானது, செறிவாகி நீண்டு என்ன - அடர்ச்சியாய் நீண்டிருந்தா லென்னபயன், வஸ்திரபூஷணமெல்லாம்-வஸ்திரபூஷணங்களெல்லாம், சித்திரத்து உற்றும் என்ன-சித்தி

ரத்தி லெழுதப்பட்டிருந்தாலு மென்னபயன், மடம்மிகுந்து-அறியாமை மிகுந்து, எவருக்கும் - யாவருக்கும், உபகாரம் இல்லாத - உபகரித்தலில்லாத, வம்பர்-வீணருடைய, வாழ்வுக்கு நிகர்ஆம் - செல்வத்துக்கு நிகராகும், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

காட்டிலவு - முள்முருக்கு. ஆஸ்தான கோழை-சபைக் கோழை. (கோழை-அச்சமியல்புள்ளவன்.)

பதரெனப்படுவோர்.

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தம்மொடு சலிக்கும் பதர்
பின்புகா ணுவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்தி கேட்கும் பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்ச்சாட்சி சொல்லும் பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல்வெளி யாக்கும் பதர்
மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (28)

(இ-ள்.) தன்பெருமை-தனது பெருமையை, சொல்லி யே - சொல்லிக்கொண்டே, தன்னை புகழ்ந்தபதர் - தன்னைத் தானே புகழ்ந்தபதரும், சமர்கண்டு - யுத்தத்தைக் கண்டு ஒளிக்கும்பதர் - ஒளிக்கின்ற பதரும், நல்லபெரியோர் புத்தி கேளாத பதர்-தகுதியாகிய பெரியோர் புத்தியைக் கேட்காத பதரும், தோழர் தம்மொடு சலிக்கும்பதர் - தோழரோடு சலித்துக்கொள்ளுகிற பதரும், பின்பு - ஒருவனுக்குப் பின் னே, காணுவிடந்தன்னிலே - காணுதவிடத்திலே, பலபுறணி பேசி - பல நிந்தனைகளைப்பேசி, களிக்கும்பதர் - களிக்கின்ற பதரும், பெற்ற தாய் தந்தை - பெற்ற தாய் தந்தையர், துயர்பட - துன்பம் அநுபவிக்க, வாழ்ந்திருந்த பதர்-வாழ்ந் திருந்தபதரும், பெண்புத்தி கேட்கும்பதர்-பெண்புத்திகேட் கின்ற பதரும், பொன்பணம் இருக்க, பொன்னும் பணமும் இருக்கும்போதே, போய் - ஒருவரிடத்திற்போய், இரக் கின்றபதர்-யாசிக்கிறப்தரும், பொய்சாட்சி சொல்லும் பதர்- பொய்சாட்சி சொல்லுகின்ற பதரும், புவியோர் நடத்தை யை - லோகத்தாருடைய நடத்தையை, இகழ்ந்தபதர் - அவ மதித்தபதரும், தன் மனைவிபுணர்தல்-தன்மனைவியின் புணர் ச்சியை, வெளியாக்கும்பதர் - வெளிப்படுத்தும்பதரும், மன் புணரும் வேசையுடன்-அரசன் புணர்கின்ற வேசையோடு, விபசரிக்கின்றபதர் - விபசரிக்கின்ற பதரும் (இவர்களெல் லாம்) மனிதரில்-மனிதர்க்குள்ளே, பதர் என்பர் - பதர்க ளென்று சொல்லுவர் (பெரியோர்) மயிலேறி விளையாடு குக னேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

புரணி-நிந்தை. புலியோர்கூட்டத்தை-லோக மரியாதை-மன்-அரசன். விபசரித்தல்-சஞ்சரித்தல்.

காணவிடிற் றுயரப்படுமவை,

இரவிகா ணாவனச மாரிகா ணாதபயி
ரிந்துகா ணாத குமுத
மேந்தல்கா ணாநாடு கலைகள்கா ணாவோட
மின்சொல் காணா விருந்து
சுரபிகா ணாதகன் றன்னைகா ணாமதலை
சோலைகா ணாத வண்டு
தோழர்கா ணாநேயர் சலைகள்கா ணாதமான்
சோடுகா ணாதபேடு
குரவர்கா ணாதசபை தியாகிகா ணாவறிஞர்
கொழுநற்கா ணாத பெண்கள்
கொண்டல்கா ணாதமயில் சிறுவர்கா ணாவாழ்வு
கோடைகா ணாத குயில்கள்
வரவுகா ணாதசெல விவையெலாம் புவியீதில்
வாழ்வுகா ணாவிளமை யாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே- (29)

(இ-ள்.) இரவிகாணாவசனம்-சூரியனைக்காணாத தாமரையும், மாரிகாணாதபயிர்-மழையைக் காணாத பயிரும், இந்துகாணாதகுமுதம்-சந்திரனைக்காணாத அல்லியும், ஏந்தல்காணா நாடு-அரசனைக் காணாத நாடும், கலைகள் காணாத ஓடம்-

கரையைக் காணாதகப்பலும், இன்சொல் காணாவிருந்து-இனியசொல்லைக் காணாவிருந்தும், சுரபிகாணாதகன்று-பசுவைக்காணாத கன்றும், அன்னைகாணாமதலை-தாயைக்காணாத குழந்தையும், சோலைகாணாதவண்டு-சோலையைக் காணாத வண்டும், தோழர்காணாநேயர்-சிநேகிதரைக்காணாத சிநேகரும், கலைகள் காணாதமான் - கலைகளைக்காணாத மான்களும் சேர்காணாதபேடு - ஜதையைக்காணாதபெட்டையும், அறிவர் காணாத சபை - பெரியோரைக்காணாதசபையும், தியாகி காணாதவறிஞர் - கொடையாளியைக்காணாத தரித்திரரும், கொழுநர்காணாத பெண்கள் - கணவரைக்காணாத மாதரும் கொண்டல்காணாதமயில் - மேகத்தைக்காணாதமயிலும், சிறுவர் காணாவாழ்வு - புதல்வரைப்பெறாத வாழ்வும், கோடை காணாதகுயில்கள் - கோடைக் காலத்தைக் காணாதகுயில்களும், வரவுகாணாதசெலவு - வரவில்லாத செலவும், (ஆகிய) இவையெலாம்-இவையாவும், புவிமீதில் - பூமியின்மேல், வாழ்வுகாணா இளமையாம் - செல்வத்தைகாணாத இளமைப் பருவம்போலப் பயனற்றவைகளாகும், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கலை-ஆண்மான் (கலைமான்) கோடு-சேவல், கோடை-வசந்தகாலம்.

வியாதி மூலங்கள்.

கல்வினான் மயிரினான் நீரான் விரும்பலாற்
 கருதிய விசாரத்தி னாற்
கடுவழி நடக்கையான் மல்சல மடக்கையாற்
 கனிபழங் கறியுண்ண லால்

நெல்லினா லுமியினா லுண்டபின் மூழ்கலா
னித்திரைக ளில்லாமை யா
னீர்ப்புகையி னாற்பனிக் காற்றினுட னோதலா
னீடுசரு கிலையூற லால்
மெல்லிநல் லார்கலவி யதிகமும் விரும்பலால்
வீழ்மலஞ் சிக்குகையி னான்
மிகுசுமை யெடுத்தலா னிளவெயிற் காய்லான்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள் சரகாதி யுண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (30)

(இ-ள்.) கல்லினால் - கல்லினாலும், மயிரினால்-மயிரினாலும் மீதூண்விரும்பலால் - அதிகவுணவை விரும்புதலாலும், கருதிய விசாரத்தினால்-நினைக்கிற விசாரத்தினாலும், கடுவழி நடக்கையால் கடுவழி நடத்தலாலும், மலசலம் அடைகையால் - மலசலங்களை யடக்குதலாலும், கனிபழுக்கறி உண்ணலால் - முதிர்ந்த பழகறியை யுண்ணுதலாலும், நெல்லினால்- நெல்லினாலும், உமியினால் - உமியினாலும், உண்டபின் மூழ்கலால் - உண்டபின் தலைமுழுகுதலாலும், நித்திரைகள் இல்லாமையால்-தூங்காமையாலும்; நீர்புகையினால்-நீர்விரோதத்தாலும், பனிகாற்றில்-பனியிலும் காற்றிலும், உடல் நோதலால்-உடம்புநோதலாலும், நீடுசருகு இலை ஊறலால் -

பழையசருகு இலைகள் இவைபூறுதலாலும், மெல்லிநல்லார் கலவி-மாதருடைய புணர்ச்சியை, அதிகம்-அதிகமாக, உள் விரும்பலால்-மனத்தால் விரும்புதலாலும், வீழ்மலம் சிக்குகையினல்-இறங்குகிற மலம் சிக்கிக்கொள்ளுதலாலும், மிகு சுமை எடுத்தலால்-மிகுந்த சுமையையெடுத்தலாலும், இளவெயில் காய்தலால் - இளவெயில் காய்தலாலும் - மெய்வாட வேலைசெயலால் - உடல்வாடும்படி வேலைசெய்தலாலும், வல் இரவிலே-வலிய இராக்காலத்திலே, தயிர்கள் சரகாதி உண்ணலால் - தயிர்களும் சரகாதிகளும் புசித்தலாலும், வன் பிணிக்கு-வலிய நோய்களுக்கு, இடம் என்பர்-இடமுண்டாகு மென்று சொல்லுவர் (ஆயுர்வேதியர்) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

விசாரம்-விசனம். கடுவழி-நெடுந்தூரம். நீர்ப்பகை-ஒருநீர்க்கொருநீர் வேறுபாடு. இளவெயில்-காலைவெய்யில். பசு எருமை ஆடுமுதலியவற்றி லுண்டாதலால் தயிர்கள் எனப் பன்மையாற் கூறினர். சரகாதி-கீரைமுதலாயின.

செத்தும் சாகாதவர்.

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதி மன்ன
ரழியாத தேவால யங்கட்டி வைத்துளோ
ரகரங்கள் செய்த பெரியோர்
தனையொப்பி லாப்புதல் வனைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறுத
தருமங்கள் செய்த பேர்கள்

கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுந்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர் களும்
மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (31)

(இ-ள்.) அனைவர்க்கும்-எல்லார்க்கும், உபகாரம் ஆம்-உபகாரமாகிய, வாவிகூவம் உண்டாக்கினோர்-வாவிகூவங்களையுண்டாக்கின வர்கள், நீதிமன்னர்-நீதியையுடைய அரசர்கள், அறியாத-கெடாத, தேவாலயம் கட்டிவைத்துளோர் தேவாலயங்களைக் கட்டி வைத்தவர்கள், அகரங்கள் செய்தபெரியோர்-அகரங்களை யுண்டாக்கின பெரியோர்கள், தனைஒப்பிலா-தனக்குச் சமானமில்லாத, புதல்வனைப்பெற்றபேர்-புத்திரனைப் பெற்றவர்கள், சமர்-போர்க் களத்தில், பொருது-போர் செய்து, வென்ற-(பகைவரை) வென்ற, சுத்தவீரர்-சுத்தவீரர்கள், தரணிதனில் நிலைநிற்க-பூமியில் நிலைநிற்கும்படி, எந்நாளும்-எக்காலத்தும், மாறாத-அழியாத, தருமங்கள் செய்த பேர்கள்-தருமங்களைச் செய்தபேர்கள், கனவித்தை கொண்டவர்கள்-பெரிய வித்தையையுடையவர், ஓயாத கொடையாளர்-நீங்காத கொடையாளர், காவியம்செய்த கவிஞர்-காவியம்பாடின கவிவல்லோர், கற்பினின் மிகுந்த-கற்பிற்சிறந்த, ஒரு பத்தினி மடந்தையை-ஒரு பத்தினிப்பெண்ணை, கூடிமணம் செய்தோர்கள்-விவாகம் செய்

துகொண்டவர்கள், (ஆகிய,) இம்மனிதர்கள்-இந்தமானிடர், சரீரங்கள் போகினும்-உடம்புகள் அழிந்தாலும், சாகாத மனிதர்-சாகாதமாநுடர், இவர் ஆவர் அன்றோ-இவர்களா வார்களல்லவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலை மேவு குமரேசனே, ஏ-று.

வாவி-தடாகம், கூவம்-கிணறு, தேவாலயம்-சிவாலய விஷ்ணு ஆலயங்கள், ஆலயம்-கோவில், அகரம்-சிற்றூர். சுத்தவீரர்-மஹாவீரர். கனவித்தை கொண்டபேர்-கம்பன் முதலியோர் போன்ற மகாவித்வான்கள், காவியம்-சிந்தா மணிமுதலிய காவியங்கள், ஓயாத கொடையாளர்-தமக்கு வறுமைவந்த காலத்தும் தம்மைக் குறித்து வந்தவர்க்கு இல்லையென்னாது இயன்றவளவர்கக்கொடுப்பவர். கற்பினின் மிகுத்த ஒரு பத்தினிமடந்தை-பதிவிரதை, வாவிகூவமுத லியவற்றைச் செய்தவர் உலகத்தில் செத்துஞ் சாகாதவர் என்பது கருத்து.

சாகாதிருந்துஞ் செத்தவர்-

மாறாத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தி லுண்போர்
மனைவியை வழங்கியே சீவனஞ் செய்குவோர்
மன்னுமொரு ராச சபையில்
தூறாக நிந்தைசெய் துய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்ற பேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்ற பெரியோர்

விருக மனையா ட்னக்கஞ்சி வந்திடு
  விருந்தினை யொழித்து விடுவோர்
விம்புடன் சொல்லாத விவகார மதுகொண்டு
  மிக்கசபை யேறு மசடர்
மாருக விவரெலா முயிருடன் செத்தசவ
  மாகியொளி மாய்வர் கண்டாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேசனே. (23)

(இ-ள்.) மாருத வறுமையோர்-இடையுருத தரித்திரத்தையுடையவர்கள், தீராதபிணியாளர்-நீங்காத நோய் கொண்டவர்கள், வரு-வந்த, வேட்டகத்தில் உண்போர்-மாமிவீட்டிலுண்பவர்கள், மனைவியை வழங்கி-மனையாளைப் பிறர்க்குபயோகித்து, சீவநம்செய்கு வோர்-உயிர்வாழ்வோர், மன்னும் ஒரு ராஜசபையில்-நிலைபெற்ற ஒருராஜசபையில், தூருக நிந்தைசெய்து உய்குவோர்-பழிமொழிகளால் நிந்தித்துப் பிழைப்பவர், சிவிகைகள் சுமந்து பிழைக்கின்ற பேர்-பல்லக்குச் சுமந்து பிழைப்பவர் தொலையா விசாரத்து அழுந்துவோர்-தீராத விசனசாகரத்தில் முழுகுவோர், வார்த்தையில்-தமது வாக்கில், சோர்வுபடல் உற்றபெரியோர்-தவறுண்டாக்கப்பெற்ற பெரியோர், வீருகமனையாள் தனக்கு அஞ்சி-கொடுமையாகிய மனையாளுக்கு பயந்து, வந்திடுவிருந்தினை-வந்த விருந்தினரை, ஒழித்துவிடுவோர்-நீக்கிவிடுவோர், வீம்புடன் வீம்புடனே, செல்லாத விவகாரமது கொண்டு-செல்லாத

வழக்கைக் கொண்டு, மிக்க சல்பயேறும் அசடர்-மேலான சபைக்குப் போகிறதீயோர், மாறாக-(எல்லார்க்கும்) பகையாக, இவர் எல்லாம்-இவரெல்லாரும், உயிருடன்-உயிரோடிருக்கும்போதே, செத்தசவம் ஆகி-செத்தபிணத்துக்கு நிகராகி, ஒளிமாய்வர்-புகழ்குன்றுவர், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடு மலைமேவு குமரேசனே. எ-று.

மாறாத வறுமையோர்-நித்திய தரித்திரர், தீராதபிணியாளர்-குட்டநோய் முதலியவற்றால் பீடிக்கப்படுவோர்-வேட்டகம்-கலியாணஞ் செய்தவீடு அழுந்துவோர் என்றமையால் விசாரத்தைக் கடலாக்கி யுரைக்கலாயிற்று. வார்த்தையிற் சோர்வுபடலாகாது "சொற் சோர்வுபடேல்" என்னும் ஔவையார் வாக்கினாலும் விளங்கும். வீம்பு-பிடிவாதம்.

சிறிதும் பயன் படாதவை

பதராகி லுங்கன விபூதிகளை விக்கும்
    பழமைபெறு சுவராகிலும்
பலருக்கு மறைவாகு மாடுரிஞ் சிடுமலம்
    பன்றிகட் குபயோக மாம்
சுதமிகு கடாவென்னி லுழுதுபுவி காக்கும்வன்
    கழுதையும் பொதிசு மக்கும்
கல்லெனிற் றேவர்களு மாலயமு மாம்பெருங்
    கான்புற்று மரவ மனையாம்
இதமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதருசெயு
    மிழிவுறு குராங் காயினு
மிரக்கப் பிடித்தவர்க் குருவிசெயும் வாருகோ
    லேற்ற மாளிகை விளக்கும்

மதமது மிகும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (33)

(இ-ள்.) பதர் ஆகிலும்-பதராயினும், கனம்விபூதிவிளை விக்கும் - மேலாகிய விபூதியையுண்டாக்கும், பழமைபெறு சுவர் ஆகிலும் - பழமையான சுவராயிலும், பலருக்கும்-பல பேர்களுக்கும், மறைவுஆகும் - மறைவிடமாகும், மாடு உரிஞ்சிடும் - மாடுஉரிஞ்சுதற்கும் உபயோகப்படும், மலம் - மலமும், பன்றிகட்கு உபயோகம்ஆம் - பன்றிகளுக்குணவாயுபயோகப்படும், கதம்மிகுகடார்என்னில் - கோவமிகுந்த கடாவென்றால், உழுது - எருழுது (அவ்வழியால்) புவிகாக்கும் - பூமியிலுள்ள சீவர்களைக் காப்பாற்றும், வன்கழுதையும் பொதிசுமக்கும் - வலியகழுதையும் பொதியைச் சுமக்கும், கல்எனின்-கல்என்னிலோ, தேவர்களும் ஆலயமுமாம்-தேவர்களும் கோயில்களுமாகும், பெருங்கான்புற்றும் - பெருங்காட்டிலுள்ள புற்றும், அரவமனையாம் - பாம்புக்கு வீடாகும், இதம் இல்லா - நன்மையில்லாத, சவம் ஆகிலும் - பிணமாகிலும், சிலர்க்கு உதவிசெயும் - சிலபேருக்கு உதவியைச்செய்யும், இழிவுறுகுரங்காயினும் - இழிவுள்ள குரங்காயினும், பிடித்தவர்க்கு - தன்னைப்பிடித்தவர்க்கு, இரக்க உதவிசெய்யும் - இரத்தற்கு உதவிசெய்யும், வாருகோல் - வாருகோலும், ஏற்றம் - மேன்மை பொருந்திய, மாளிகை விளக்கும் - மாளிகைகளை விளக்கும், மதமதுமிகும் - மதமிகுந்த, பரமலோபரால் - பரமலோபிகளால், ஒருவருக்கும் - ஒருவ

ருக்காயினும், உபகாரம் உண்டோ - உபகாரமுளதோ, மயி லேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

பதா்-உமி. விபூதி - திருநீறு, உரிஞ்சுதல் - தேய்த்துக் கொள்ளுதல். புவி - இடவாகுபெயர். தேவர்கள்-தைவ விக்ரகங்கள். சிலர்க்கு வெட்டியான் முதலியோர்களுக்கு. இரத்தல் - ஏற்றல், (யாசித்தல்) வாருகோல் - துடைப்பம் பரம லோபர்-மிகுந்த லோபகுணமுள்ளவர். லோபகுணம்-ஈயாக் குணம் (பிசுநத்தனம்.)

உலுத்த ரியல்பு.

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணத்
தேடிப் புதைத்து வைப்பார்
சிலைநல மாகவுங் கட்டார்க ணல்லமுது
செய்துண ரறமுஞ் செயார்
புரவலர்செய் தண்டந் தனக்கும்வலு வாகப்
புகுந்திருட ருக்கு மீவார்
புலவரைக் கண்டவுட னோடிப் பதுங்குவார்
புராணிகர்க் கொன்று முதவார்
விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
வெகுபணஞ் செலவாக லால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்ன கதைபோல்
வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கண்
மற்றொருவ ருக் கீவரோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (34)

(இ-ள்.) திரவியங்காக்கும்-புதையலைக் காத்துக்கொண்டிருக்கிற, ஒரு பூதங்கள்போல்-ஒப்பற்ற பூதங்களைப்போல, பணம்தேடி - பணத்தைத் தேடி, புதைத்து வைப்பார் - பூமியில்புதைத்து வைப்பார்கள், நலமாகவும் - நன்மையாகவும், சீலைகட்டார்கள்-ஆடையுடுக்கமாட்டார்கள், நல்அமுதுசெய்து உண்ணார் - நல்ல சோற்றைச் சமைத்து உண்ணமாட்டார்கள், அறமும்செயார் - தர்மமும் செய்யமாட்டார்கள், புரவலர்செய் தண்டம் தனக்கும்-அரசர்செய்கிற தண்டனைக்கும், வலுவாக புகும் திருடருக்கும் - வலாத்காரமாய்ப் புகுகின்ற திருடர்களுக்கும், ஈவார் - கொடுப்பார்கள், புலவரைக்கண்டவுடன் - வித்வான்களைக் கண்டவுடனே, ஓடிபதுங்குவர்-ஓடி மறைவார்கள், புராணிகர்க்கு - புராணஞ் சொல்வோர்க்கு, ஒன்றும் உதவார்-ஒன்றும்கொடார், விரகு அறிந்து-உபாயமறிந்து, பிள்ளை-பிள்ளையானது, சோறுகறி தின்னுமளவில்-சோறுகறிகளைத் தின்னுங்காலத்தில், வெகுபணம் செலவாதலால்-வெகு பணம் செலவழியுமாதலால், விளையாடு - விளையாடுதற்குரிய, கிழவனும்பிள்ளையே பிள்ளையென - கிழவனுகிய பிள்ளையே பிள்ளையென்று, மிகுசெட்டி சொன்ன கதைபோல் - மேலான செட்டியொருவன் சொன்ன கதைபோல, வரவுபார்க்கின்றதே அல்லாது - வரவைப் பார்ப்பதேயன்றி, லோபியர்கள் - லோபகுணமுள்ளவர்கள், மற்றொருவருக்கு ஈவரோ - வேறொருவருக்குக் கொடுப்பார்களோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

புரவலர்-காத்தற்றொழிலில் வல்லவர். தண்டம்-சிக்ஷை (அபராதம்) புராணிகர்-புராண பிரசங்கம் செய்தே சீவிப்ப வர். லோபியர்-உலுத்தர்.

திருவாழிடங்கள்.

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
        கமலா சனந் தன்னிலும்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
        காலியின் கூட்டத்தி லும்
நடமாடு பயிரிலும் பொய்வார்த்தை சொல்லாத
        நல்லோ ரிடந் தன்னிலும்
நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
        ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்னிலு
        மருந்துளசி வில்வத் திலு
மலர்தரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு
        மதிகருண மான ரூப
மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது
        மாறு திருப்ப ளென்றே
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
        மலைமேவு குமரேசனே. (35)

(இ-ள்.) கடம்வாரணத்திலும்-மதயானையினிடத்திலும், கங்காசலத்திலும் - கங்கையாற்றின்நீரிலும், கமலா சலம் தன்னிலும், கமலாசனத்திலும், காகுத்தன்மார்பிலும் - விஷ்ணுவின்மார்பிலும், கொற்றவா இடத்திலும் - அரசரிடத்தி

லும், காலியின்கூட்டத்திலும் - பசுமந்தையிலும், நடமாடு பயிரிலும் - மநுஷ்யசஞ்சாரமுள்ள பயிரிலும், பொய்வார்த்தைசொல்லாத-பொய்ம்மொழிகள் பேசாத, நல்லோர் இடம் தன்னிலும்-நல்லோர்களிடத்தும், நல்ல சுப லக்ஷணம் மிகுந்த மனைதன்னிலும்-நல்ல சுப லக்ஷணங்கள் மிகுந்திருக்கிற வீடுகளிலும் ரணசுத்த வீரர்பாலும்-போர்க்குரிய சுத்தவீரரிடத்திலும், அடர்கேதகத்திலும்-நெருங்கின துவசத்திலும், சுயம்வரம் தன்னிலும்-சுயம்வரத்திலும் - அருதுளசி வில்வத்திலும் - அருமையாகிய துளசியிலும் வில்வத்திலும் அலர்கரு - மலர்ந்த கடப்பமலர்தனிலும் - கடப்பமலரிலும் இரதத்திலும் - தேரிலும் அதிக குணமான - மிகக் குணமுள்ள ரூபம் - சௌந்தரியத்தையுடைய மடவார் இடத்திலும - மாதரிடத்திலும், திருமாது - திருமகளானவள் குடிகொண்டு-குடியாகி மாறாது இருப்பள் அன்றே - நீங்காதிருப்பாளல்லவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கடம்-மதம். வாரணம்-யானை. கமலாசநம் - பதுமபீடம். காகுத்தன்-ஸ்ரீராமன் (விஷ்ணு) காலியின் கூட்டம் பசுமந்தை. கேதநம்-வெற்றிக்கொடி. சுயம்வரம்-கல்யாணஞ் செய்யுமிடம்.

மூதேவி வாழிடங்கள்.

சோரமங் கையர்கணிச முறையார்கள் வாயினிற்
சூதகப் பெண்க ணிழலில்
சுளகிற் றலைமயிர் புகையிற் கிளைபாஞ்
சுடுபுகையி னீசர் நிழலில்

காரிரவி லரசுநிழ லிற்கடா நிழலினொடு
    கடுஞ்சினத் தோர் சபையினில்
காமுகரி நிஷ்டையில் லாதவர் முகத்திற்
    கடுஞ்சினத் தோர் சபையினில்
ஈரமில் லாக்களர் நிலத்தினி லிராத்தயிரி
    லிழியுமது பானர் பாலி
விலைவேல் விளாநிழலி னிதமுழுக் கண்டமனைவி
    லெனநா யசகரத் தூள்
வாரிய முறத்துள் பெருக்குதூண் மூதேவி
    மாறுதிருப்ப ளென்பார்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (36)

(இ-ள்.) சோரமங்கையர்கள் நிசம்உரையார்கள்வாயில் - சோரமாதர்களும் மெய்சொல்லாதவர்களுமாகிய இவர்கள் வாயிலும், சூதகப்பெண்கள் நிழலில் - பூப்புப்பெண்களுடைய நிழலிலும் சூளையில் சூழ்தலுறுபுகையில் - சூளையில் சூழ்ந்துகொண்டிருக்கிற புகையிலும், களேபரம் சுடுபுகையில் - பிணம் சுடுகிற புகையிலும், நீசர் நிழலில் - சண்டாளர்து நிழலிலும் கார் இரவில்-கரிய இராக்காலத்திலும், அரசுநிழலில்-அரசமரத்தின் நிழலிலும், கடாநிழலினொடு - எருமைக் கடாவின் நிழலோடு, கருதியவிளக்குநிழலில் - மதிக்கப்பட்ட தீபத்தின் நிழலிலும், காமுகரில் - காமுகரிடத்திலும் நிஷ்டையில்லாதவர் முகத்தில் - நிஷ்டையில்லாதவருடைய முகத்திலும், கடுசினத்தோர் சபையினில் - கொடுங்

கோபமுள்ளவாது சபையிலும் ஈரம் இல்லா களர்நிலத்தில்-ஈரமில்லாத களர்நிலத்திலும் இராத்தயிரில்-இராக்காலத்து உண்ணப்படுகிற தயிரிலும் இழியும் - இழிந்த மதுபாநர் பாலில்-மதுபாநரிடத்திலும் இலை - இலைகளையுடைய வேல் விளா நிழலில் - வேலமரநிழலிலும் விளாமரநிழலிலும் நிதம் அழுக்கு அடைமனையில் - நாள்தோறும் அழுக்கடைந்திருக்கிற வீட்டிலும் ஏனம் - பன்றி நாய் - நாய் அசம் - ஆடு சரம் - கழுதை (இவற்றின்) தூள் - தூளிலும் வாரியமுறத் தூள்-வாரினமுறத்தூளிலும் பெருக்குதூள் - பெருக்கப்பட்ட தூளிலும் மூதேவி - மூதேவியானவள் வாழுதிருப்பள் - நீங்காதிருப்பாள் என்பார் - என்று சொல்லுவார் (பெரியோர்) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

சோரமங்கையர் - வியபிசாரிகள். சூதகப்பெண்கள் - தீட்டாயிருக்கிற பெண்கள் முதலாயின. சூளை - செங்கற் சூளை. சினம்-கோபம். களர்நிலம் - உவர்நிலம். மதுபாநர் - கட்குடியர்.

திருத்தினுந் திருந்தாமை.

கட்டியெரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினுங்
காஞ்சிரங் கைப்பு விடுமோ
கழுதையகை கட்டிவைத் தோமம் வளர்க்கினுங்
கதிபெறுங் குதிரை யாமோ
குட்டியர வுக்கமு தளித்தே வளர்க்கினுங்
கொடுவிட மலாது தருமோ

குக்கனெடு வாலுக்கு மட்டையைக் கட்டினுங்
கோணாம லேநிமி ருமோ
ஓட்டியே குறுணிமை யிட்டாலு நயமில்லா
யோணிகண் ணாகி விடுமோ
வுலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினு
முள்ளியின் குணமா றுமோ
மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமறி யாதை வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ-ள்.) கட்டி-பாத்திகட்டி, எருவிட்டு - எருப்பெய்து, செழுந்தேனைவார்க்கினும்-செழியதேனைவார்த்தாலும், காஞ்சிரம் - எட்டிக்கனியானது, கைப்புவிடுமோ - (தன்னியற்கையாகிய) கசப்புக்குணத்தைவிடுமோ, கழுதையைக்கட்டிவைத்து - கழுதையைக்கயிற்றால் தூணில்கட்டிவைத்து, ஓமம்வளர்க்கினும் - ஓமம்வளர்த்தாலும், சதிபெறும் - பல்நடைகளைப்பெற்ற, குதிரை ஆமோ - குதிரையாகுமா, குட்டி அரவுக்கு-பாம்புக்குட்டிக்கு, அமுது அளித்தே வளர்க்கினும்-பாலூட்டியே வளர்த்தாலும், கொடுவிடம் அலாது தருமோ-கொடிய விஷயத்தையன்றி வேறொன்றைத்தருமா. குக்கன்-நாயினது, நெடுவாலுக்கு-நீண்டவாலுக்கு, மட்டையைகட்டினும்-மட்டை வைத்துக் கட்டினாலும், கோணாமல் நிமிருமோ-கோணாமல் நிமிர்ந்திருக்குமோ, ஒட்டியே குறுணிமையிட்டாலும்-பொருந்தி குறுணிமையைப் பூசினாலும், நயம் இல்லா-அழகில்லாத, யோணி-யோனியானது, கண் ஆகி

விடுமோ-கன்றாய்விடுமோ, உவமை-உவமானம், கனகர்ப்பூர வாசனையைக்கட்டினாலும்-மேலான கர்ப்பூரத்தின்மணம் பெருகி யாய்ச்சேர்ந்தாலும், உள்ளியின் குணம்பாறுமோ-வெங்காயத்தின்குணம் நீங்குமா, பட்டுகட்டு-மூடக்கட்டு, ஆயிரம் புத்திசொன்னாலும்-ஆயிரம் புத்திசொன்னாலும், அதின்-அதனால், மார்க்கம்-மரியாதையாகிய நெறியுண்டாகுமா, மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே.

கதி-நடை. அது மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, இடபகதியென்பன. தோறுதல் - வெளிப்படல். குறணி-தானவருகுணி. வாசனை - வாசனை, உள்ளி - பூண்டு எனினும் பொருந்தும்.

குறிப்பறிதல்.

மனதிற் கபடபகை முகத்திலறியலா
      மாதிலோர் பூசெனலாம்
மனையிலே யறியலா நல்லோர்பெரியோர் தமை
      மக்களா லறியலாகும்
கனமருவு ஆரைச் சமரிலறியலாங்
      கற்றவொரு வித்துவானைக்
கல்விப்பிர சங்கத்தி லறியலாங் குணங்
      சனைசனையி லறியலாம்
தனதுமதித்தரா பரிக்கிலறியலாஞ்
      சாதிசொல் லாலறியலாந்
தருநீதி கேள்வியா லறியலாம் பேணித்தகு
      தாதுக்க ளாலறியலாம்

வனசயிக சிதவசன பரிபூர ணானந்த
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (38)

(இ-ள்.) மனதில்-(ஒருவனுடைய) மனத்திலுள்ள, கடும்பகை-கொடும்பகையை, முகத்தினால் அறியலாம் (அவனது) முகக் குறிப்பைக்கொண்டு அவன் சொல்லாமலே யறிந்து கொள்ளலாம், மாநிலம் - பெரியநிலத்தில் முளைத்த, பூடுகள் எல்லாம்-பூண்டுகள் யாவும் செழிக்கும்வகையை, மழையினால் அறியலாம் - (பெய்த) மழையி னளவைக்கொண்டே யறிந்துகொள்ளலாம், நல்லார்பொல்லார் தம்மை-நல்லார் பொல்லார் என்பவர்களை, மக்களால் அறியலாம் - (அவர்களுடைய) மக்களைக்கொண்டே யறிந்துகொள்ளலாம், கனம் மருவுசூரரை-பெருமையுள்ள சூரர்களின் தன்மையை, சமரினால் அறியலாம் (அவர்களுடைய) போர்த்திறத்தைக்கொண்டு அறிந்துகொள்ளலாம், கற்ற ஒரு வித்துவானை - கல்வி கற்ற ஒரு புலவனது திறத்தை, கல்விப்ரசங்கத்தினால் அறியலாம் (அவன்செய்யும்) வித்தியா சம்பந்தமான பிரசங்கத்தைக்கொண்டு அறிந்துகொள்ளலாம், குணங்களை - (ஒருவனது) குணங்களை, நடையினால் அறிலாம்-(அவனது) நடத்தையைக்கொண்டு அறிந்து கொள்ளலாம்; பளிங்கினால் - கண்ணாடியினால், தனது அகம் அடுத்தது அறியலாம் - (அதனிடத்துச் சார்ந்த) பொருளின் தன்மையை அறியலாம், சாதி-(ஒருவனது)சாதியை, சொல்லால் அறியலாம்-(அவன்

பேசும்) பேச்சைக் கொண்டேயறியலாம், தருநீதி- (நூல்களால்) போதிக்கப்பட்ட நீதிகளை, கேள்வியால் அறியலாம்- (பெரியோர்களிடத்தில்) கேட்கையினாலே யறிந்துகொள்ளலாம், பிணிகளை-வியாதிகளை, தாதுக்களால் அறியலாம்- நாடி யோட்டத்தைக்கொண்டே யறிந்து கொள்ளலாம், வனசம்-தாமரைமலர்போல, விகசிதம் மலர்ந்த-வதனமுகத்தை யுடையவனே, பரிபூரணானந்த-நிறைந்த ஆநந்த ரூபனே, பாலவடிவு ஆன-இளங்குழந்தை யுருவாகிய, வேலாயுதத்தை யுடையவனே, மயில்மேலேறி விளையாடு குகனே புல் வயனீடு பதிமேவு குமரேசனே. எ-று.

"அடுத்துகாட்டும் பளிங்குபோ னெஞ்சங் கடுத்தது காட்டுமுகம்" என மேலோர் கூறுகையால் மனதிற்கடுப்பதை முகத்தினாலறியலாம், என்றும் "தக்கார் தகவிலரென்பதவரவ ரெச்சத்தாற் காணப்படும்" என்றமேலோர் திருவாக்குக் கிணங்க, 'கல்லார் பொல்லார் தமை மக்களாலறியலாகும்' என்றும், உயர்ந்த சாதியார் சுத்தமான சொற்களையும், இழிந்தசாதியார் அசுத்தமான சொற்களையும் வழங்குதலால் 'சாதிசொல்லா லறியலாம்' என்றும் கூறினார்.

குணமாறுமை.

குணமிலாத் துஷ்டமிரு கங்களையு நற்குணங்
கொண்டிட் படுத்தி விடலாம்
கொடியபல விடநோய்க ளியாவுமௌ டதமது
கொடுத்துத் திருப்பி விடலாம்

உணர்விலாப் பிரமராட் சசிமுதற் பேய்களை
 புகந்துகூத் தாட்டிவி டலா
முபாயத்தி னாற்பெரும் பறவைக்கு நற்புத்தி
 யுண்டாக்க லாமுயிர் பெறப்
பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்
 பெரும்புன லெனச் செய்யலாம்
பிணியையு மகற்றலாங் காலதூ துவரையும்
 பின்புவரு கென்று சொல்லலாம்
மணலையுங் கயிறுத் திரிக்கலாங் கயவர்குண
 மட்டுந் திருப்ப வசமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (39)

(இ-ள்.) குணம்இல்லா-குணமில்லாத, துஷ்டமிருகங்களையும்-பொல்லாத மிருகங்களையும், நயகுணம் கொண்டு-நற்குணத்தைக் கொண்டு, உட்படுத்தி விடலாம்-வசப்படுத்திவிடலாம், கொடிய-கொடுமையாகிய, பலவிட நோய்களையாவும்-பலவகையாகிய விஷநோய்க ளெல்லா வற்றையும், ஔஷதமது கொடுத்து-மருந்து கொடுத்து, திருப்பிவிடலாம்-மீட்டுவிடலாம், உணர்வு இல்லா-அறிவில்லாத, பிரமராக்ஷசிமுதல் பேய்களை-பிரமராக்ஷசி முதலாகிய பேய்களை, உகந்து-களித்து, கூத்தாட்டி விடலாம்-கூத்தாட்டி விடலாம், உபாயத்தினால்-தந்திரத்தினால், பெரும் பறவைக்கும்-பெரிய பக்ஷிகளுக்கும், நல்லபுத்தி உண்டாக்கலாம்-நல்ல

த்தி யுண்டாக்கலாம், பிணமதை - பிணத்தை, உயிர்பெற எழுப்பலாம் - உயிர்பெறும்படி யெழுப்பலாம், அக்கினி-நெருப்பானது, சுடாமல் - சுடாதிருக்கும்படி, பெரும்புனல் என செய்யலாம் மிக்க நீர்போலச்செய்யலாம், பிணியையும் அகற்றலாம்-நோயையும் நீக்கலாம், காலதூதுவரையும்-யமதூதரையும், பின்பு வருகென்று சொல்லலாம்-பின்னேவருக வென்று சொல்லி யனுப்பிவிடலாம், மணலையும் கயிறுதிரிக்கலாம்-மணலையும் கயிறாகத்திரிக்கலாம், கயவர்குணம் மட்டும் திருப்பவசமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

துஷ்டமிருகங்கள் முதலான பலவற்றையும் வசப்படுத்துதல் கூடும். கீழ்மக்களைமாத்திரம் வசப்படுத்துதல் கூடாதென்பதாம். நோய்கள் பாம்புமுதலியவை கடித்தலாலுண்டாகும் நோய்கள். பெரும்பறவை கிளிமுதலியன.

இத்தீக்குணத்தோ ரிவ்விலங்கு போல்வரெனல்.

தான்பிடித் ததுபிடிப் பென்றமே லவர்புந்தி
தள்ளிச்செய் வோர் குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாம னின்றவர்
தாம்பய னிலாத மரமாம்
வீம்பினா லெளியவரை யெதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர்குரை ஞமலி யாவார்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாத கழுதை

சோம்பலோடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
தூங்கலே சண்டிக் கடா
சூதுடன் எடுத்தோர்க் கிடுக்கணே செய்திடுந்
துஷ்டனே கொட்டு தேளாம்
மாம்பழந் தனைவேண்டி யந்நாளி லீசனை
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (40)

(இ-ள்.) தான்பிடித்ததுபிடிப் என்று - தான்பிடித்ததே பிடியென்று, மேலவர்புத்தி - மேலோர்களுடைய புத்தியை தள்ளி-தள்ளிவிட்டு, செய்வோன் - செய்கிறவன், குரங்கு - குரங்குக்கு நிகராவான், சபையில்-சபையிலே, குறிப்புஅறியமாட்டாமல்நின்றவன் - குறிப்பறிந்து கொள்ளமாட்டாமல் நின்றவன், பயன் இல்லாத மரம்ஆம் - பயன்கொடாதமரத்துக்குநிகராவன், வீம்பினால் - இறுமாப்பினால், எளியாரை - எளியோரை, எதிர்பண்ணிநிற்கும்-எதிர்செய்துநிற்கிற, ஒரு வெறியன் - ஒருவெறியனானவன். இழிஞமலிஆவன்-இழிந்த நாய்க்குச் சமானமாவான், மிகநாடிவருவோர்-மிகவும் நாடி வருவோருடைய, முகம்பார்த்திடா-முகம்பார்க்காத, லோபன்-லோபியானவன், மேன்மையில்லா கழுதை - சிறப்பில்லாத கழுதைக்குநிகராவான், பெரியோர் சபைக்குள் - பெரியோருடைய சபையில், சோம்பலோடு-சோம்பலுடன் படுத்திடும்-படுத்துக்கொள்ளுகிற, தூங்கலே - தூங்கலே, சண்டிகடா-சண்டிக்கடாவுக்குநிகராவான் சூதுடன்-சூதோடு, அடுத்

தோர்க்கு - அண்டினவர்க்கு, இடுக்கணேசெய்திடும்-துன்பத்தையேசெய்கிற, துஷ்டனே-துஷ்டனே, கொட்டுந்தேளும் கொட்டுகிறதேளுக்குநிகராவான், அந்நாளில்-அக்காலத்தில் மாம்பழம் தனைவேண்டி - மாங்கனியை விரும்பி, ஈசனை-சிவபிரானை, வலமாகவந்த-பிரதக்ஷிணமாகவந்த, முருகா - முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

குறிப்பு - சிறுசீட்டு. தூக்கல்- தூக்குமுஞ்சி. சண்டிக்கடா-முரட்டுக்கடா. ஞமலி-நாய்.

அற்பர்வாழ்வால் குணம் வேறுபடுதல்.

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னல்விழிக்
கியாவருரு வுந்தோன் றிடா
தண்டிநின் றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலு
மவர்செவிக் கேறி டாது
முற்பக்ஷ மானபேர் வருகினும் வாருமென
மொழியவும் வாய்வ ராது
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகல வைப்பார்
விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத் தேகி நிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீரு மென்பார்

மற்புயந் தனினீப மாலையணி லோலனே
மார்பனே வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (41)

(இ-ள்.) அற்பர்க்கு-அற்பருக்கு, வாழ்வுசற்று அதிகமானால்-செல்வஞ்சிறிது அதிகரித்தால், விழிக்கு-அவரது கண்களுக்கு, யாவர் உருவும் தோன்றிடாது-ஒருவருருவமும் காணப்படாது, அண்டிநின்று நல்லவார்த்தைகள் உரைத்தாலும் - அடுத்து நின்று நல்லசொற்களைச் சொன்னாலும், அவர் செவிக்கு ஏறிடாது - அவர்களுடைய காதுக்கேறாது, பக்ஷமானபேர் - அன்புள்ளபேர் முன்வருகினும் - முன்னே வந்தாலும், வாரும் என மொழியவும் - வாருமென்று சொல்லவும், வாய்வராது - வாய்வராது, வாதப் பிடிப்பு வந்தது போல-வாதப்பிடிப்பு வந்தாற்போல, முன்காலை - முன்னங் காலை, மோதி அகலவைப்பார் - மோதி விரியவைப்பார்கள் விற்பனம் மிகுந்த-கல்வியிற்சிறந்த, பெரியோர்செய்தி சொன்னாலும் - பெரியோர்களுடைய பெருமையாகிய சங்கதியைச்சொன்னாலும், வெடுவெடுத்து - கடுகடுத்து, எதிர்நிற்பார் - எதிர்நிற்பார்கள் (இத்தன்மையோர்க்கு) விருதா-வீணாகிய, மகத்துவப்பேயது - மகத்துவமாகிய பேயானது சவுக்கு அடிவிழும்போது - சவுக்கடிவிழும்போது, நீங்கும் என்பார் - நீங்குமென்றுசொல்லுவார் (பெரியோர்) மல்-மற்போர்க்குரிய, புயந்தனில்-தோளில், நீபமாலை அணி-கடப்பமலர்மாலையையணிந்த, லோலனே - லோலனே, மார்ப

னை-மார்பைப் புடையவனே, வடிவேலர்-வடிவேலையுடைய வனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

வாழ்வு-செல்வம். விற்பனம்-கல்வியறிவு. ஏகுதல்-நிட் டுதல், மகத்துவம்-பெருமை

இத்திங்குளோ ரிக்கோள் போல்வரெனல்

அன்னைதந்தையர் புத்தி கேளாத பிள்ளையோ
அஷ்டமச் சனி யாகுவா
னஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்
கங்காரகச் சென்ம மாம்
தன்னையிந் திச்சொன்ன வார்த்தைகே ளாவடிமை
சந்திராஷ் டகமென்ன லாம்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சநர்ந்தசன் மச்சூரி யன்
நன்னய மிலாதவஞ் சனைசெய்த தமையன்முன்
றுமிடத்தில் வியா ழம் [ன்
காடொறும் விரோதமிடு கொண்டோன் கொடித்துயோ
ராகுகே துக்க ளெனலாம்
மன்னையனை யன்றுசிறை தனிலிட்டு கம்பற்கு
மந்திர முறைத்த குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (42)

(இ-ள்.) அன்னை தந்தையர் புத்திகேளாத பிள்ளை தாய் தந்தையர் புத்தியைக்கேளாதபிள்ளை அஷ்டமச்சனியாகுவா

ன்-அஷ்டமத்திற் சனியை நிகர்பான், அஞ்சாமல்-பயப்படா மல், எதிர்பேசிநிற்கும் மனையாள்-எதிர்பேசி நிற்கிற மனைவி யானவள், வாக்கில் அங்காரகச் சன்மமாம்-வாக்கில் அங்கா ரகனுள்ள பிறவியாவள், தன்னைமிஞ்சி-தன்னளவு மிஞ்சி சொன்னவார்த்தை கேளா அடிமை-சொன்ன சொல்லைக் கேட்காத அடிமையானவன், சந்திராஷ்டமம் என்னலாம்-சந்திராஷ்டக மென்று சொல்லப்படுவான் தன் பங்குதாவெ ன்று-தன்பங்கு கொடுவென்று சபையேறுதம்பி-நியாயசபை யேறுகிற தம்பியானவன், சார்ந்தசன்மச் சூரியன்-பொருந் திய சென்மத்திற் சூரியன் போல்வான், நல்நயம் இல்லாது-நற்குணமில்லாமல், வஞ்சனைசெய்த தமையன்-வஞ்சனைசெ ய்த தமையனானவன், மூன்றுமிடத்தில் வியாழம்-மூன்று மிடத்தில் வியாழம் போல்வான், நாள்தோறும்-தினந்தோ றும், விரோதமிடு-கலகஞ்செய்கிற, கொண்டோன் கொடுத் துளோன்-கொண்டவனும் கொடுத்தவனும், ராகுகேதுக்கள் எனலாம் ராகுகேதுக்க ளாவார்களென்று சொல்லலாம், மன் நிலைபெற்ற, அயனை-பிரமனை, அன்று-அக்காலத்தில், சிறைக ளில் இட்டு-சிறையில் வைத்து, நம்பற்கு-சிவபெருமானுக்கு மந்திரம் உரைத்தகுருவே-மந்திரோபதேசம் செய்த ஆசாரி யனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

மந்திரம் என்றது பிரணவ மந்திரத்தை

நல்வினஞ் சேர்பயன்

சந்தனவிருக்ஷத்தை யண்டிநிற் கின்றபல

தருவுமவ் வாசனை தருந்

தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ்
சாயல்பொன் மயமே தரும்
பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம்
பால்போ னிறங் கொடுக்கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங் கொடுக்கும்
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடு
லடுத்ததும் பசுமை யாகு
மானபெரி யோர்களொடு சகவாச மதுசெயி
லவர்கள்குணம் வருமென்பர் காண்
மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தவரி
மருகமெய்ஞ் ஞான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (43)

(இ-ள்.) சந்தன விருக்ஷத்தை-சந்தனமரத்தை, அண்டி நிற்கின்ற-அடுத்துநிற்கிற, பலதருவும்-பலவகைமரங்களும், அவ்வாசனை தரும்-அந்த வாசனையையே வீசும், தங்கமக மேருவை-பொன்மயமாகிய மகமேரு மலையை, அடுத்திடும் காகமையும்-அடுத்திருக்கிற காகமும், சாயல்-நிறத்தால், பொன்மயமேதரும்-பொன்மயமாகவே யிருக்கும், பந்தம்மிகுபாலுடன்-விருப்ப மிகுதியைக் கொடுக்கிற பாலோடு, விளாவிய கலந்த, தண்ணீரெல்லாம்-தண்ணீர்முழுதும், பால்போல் நிறம்கொடுககும்-பால்போல நிறத்தைத்தரும், படிகமணிக ட்கு உள்ளே நிற்கின்ற வடமும்-படிகமணி களுக்குள்ளே

பிருக்கிறதாயினும், அப்படியேகுணங் கொடுக்கும் அப்படியே குணத்தைத்தரும், அந்தமிகு-அழகுமிகுந்த மரகதக்கல்லை தரித்திடின்-மரகதக்கல்லை தரித்தால், அடுத்ததும்-அதனை யடுத்திருப்பதும், பசுமையாகும்-பச்சைநிறமாயிருக்கும், ஆனதன்மையாகிய, பெரியோர்களோடு சகவாசமதுசெயில்-பெரியோர்களுடன் சிநேகஞ் செய்தால், அவர்கள் குணம் வரும்-அவர்களுடைய குணமே யுண்டாகும். என்பர்-என்றுசொல்லுவர் (அறிஞர்) மந்தர நெடுங்கிரியின்-மந்தரமென்கிற பெரியமலையினால், முன்-முதற்காலத்தில், கடல்கடந்த-பாற்கடலைக் கடைந்த, அரிமருக-திருமால்மருகனே, மெய்ஞான முருகா-மெய்ஞானத்தைத் தருகிற முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

பந்தம்-விருப்பம். படிகமணி-பளிங்குமணி. வட்டம்காபிறு மரகதப்-பச்சை ரத்தினம். சகவாசம்-கூடிவாழ்தல்.

வலியோரையு மூழ்விடாமை.

அன்றுமுடிசூடிவ திருக்காகு ராமன்மு
னருங்கா டுறைந்த தென்ன
வண்டரெல் லாமமிர்த முண்டிடப் பாமனுக்
காலம் லளித்த தென்ன
வென்றிவரு தேவர்சிறை மீட்டவீ களிக்வே
டிக்கையைச் சேர்ந்த தென்ன
மேதினி படைக்குமய னுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையி லுற்ற தென்ன

என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
 தென்னகாண் வல்லமையினா
லெண்ணத்தி னாலொன்றும் வாராது பரமசிவ
 னெத்தனைப் படிமுடியு மாம்
மன்றுதனி னடனமிடு கங்காதரன் பெற்ற
 வரபுத்ர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (44)

(இ-ள்.) அன்று-அக்காலத்தில், முடிசூடுவது இருக்க-மகுடந்தரிப்பதாயிருக்க, ரகுராமன் - இரகுராமனானவன், முன்-முன்னாளில், அரும்காடுஉறைந்ததுஎன்ன - அருமையாகியகாட்டில் வசித்ததற்குக்காரணம்யாது, அண்டர் எல்லாம்-தேவர்கள் எல்லாரும், அமிர்தம்உண்டிட-அமுதத்தையுண்ணாநிற்க, பரமனுக்கு-சிவபெருமானுக்கு, ஆலம்லபித்தது என்ன-விஷம் கிடைத்ததற்குக்காரணம்யாது, வென்றிவருதேவர் சிறைமீட்ட நீ-வெற்றியையுடைய தேவர்சிறையை மீட்டநீ, களவில்-திருட்டுத்தனமாக, வேடிச்சியைசேர்ந்தது என்ன-குறத்தியைப் புணர்ந்ததற்குக் காரணம் யாது, மேதினிபடைக்கும்-உலகத்தைப் படைக்கின்ற, அயனுக்கு-பிரமனுக்கு, ஒருசிரம்போகி-ஒருதலையிழந்து, வெம்சிறையில் உற்றது என்ன-கொடிய சிறையில் இருந்ததற்குக் காரணம் யாது, என்றும் - எக்காலத்தும், ஒரு பொய்சொலா மன்னவன்-ஒரு பொய்யைச் சொல்லாத மன்னவனாகிய அரிச்சந்திரன், விலைபோனது என்ன-விலைபட்டதற்குக் காரணம்யாது,

வல்லமையினால் - சொந்த சக்தியினாலும், எண்ணத்தினால்-ஆலோசனையினாலும், ஒன்றும் வாராது ஒருபொருளும் லபிக்காது, பரமசிவன்-பரமசிவனது, எத்தனப்படி - திருவுளப்படியாகவே முடியும் (எல்லாக் காரியங்களும்) முடிவுபெறும், மன்றுதனில்-கனகசபையில், நடனமிடு-நடனஞ்செய்கின்ற, கங்காதரன்-சிவபெருமான், பெற்ற-ஈன்றருளிய, வரபுத்ர-மேன்மையான புதல்வனே, வடிவேலவா-வடிவேலையுடையவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

அருங்காடுறைந்தது-வனவாசஞ் செய்தது. புலிமுதலிய மிருகங்கள் நெருங்கி யிருத்தலால் அவ்விடத்து வேறொருவர் சஞ்சரித்தற்கு இயலாதென்பது தோன்ற அருங்காடென்றார். வேடிச்சி - வள்ளிநாயகி. விலைபோனது அடிமைப்பட்டது.

பெரியோர்வாக்ய பரிபாலனஞ் செய்தது.

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
றசரத குமார ராமன்
றமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்
தருமனுக் கிளைய நால்வர்
சிந்தையி லுணர்ந்தகுரு வாக்கியபரி பாலனஞ்
செய்தவ னரிச் சந்திரன்
றேகியென் றோர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் றான கன்னன்
நிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவ
னீள்பெல மிருத்த அநுமா

ணிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனை
நிலத்தினி னளாயினி செய்தாள்
மாந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (45)

(இ-ள்.) நிலத்தினில்-இந்தபூலோகத்திலே, தசரதகுமார ராமன் - தசரதசக்ரவர்த்தியுடைய திருமகனா யவதரித்த ஸ்ரீ ராமன், தந்தைதாய்வாக்ய பரிபாலனம்செய்தவன்-மாதாபிதாக்களுக்கு இளையநால்வர்-தருமபுத்திரற்கு இளையவர்களாகிய வீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் என்னும் நால்வரும், தமையன் அருள் வாக்யபரிபாலனம் செய்தோர்கள்-தமையனார்க்கரிய வாய்மொழியை நன்றாகப் பாதுகாத்தவர்கள், அரிச்சந்திரன்-அரிச்சந்திரனானவன், சிந்தையில் உணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ் செய்தவன்-மனத்திலறிந்து கொண்டு தனது ஆசாரியன் சொன்ன வார்த்தையை நன்றாகப் பாதுகாத்தவன், தானம் கன்னன் - ஈகையிற் சிறந்த கர்ணன், தேகியென்றோர்க்கு இல்லையெனா வாக்யபரி பாலனம் செய்தவன்-கொடு என்றுசொல்லி யிறந்தவர்க்கு இல்லையென்று சொல்லாமையாகிய மொழியை (தன்னிடம் விட்டு நீங்காதபடி) பாதுகாத்தவன், நீள்பெலம் மிகுந்த அநுமான்-மிகுதியான பலம் அதிகமாகப் பெற்ற அநுமான், நிந்தைதவிர் வாக்யபரி பாலனம்செய்தவன்-பழிப்பற்ற (பெரியோர்) சொல்லை நன்றாகப் பாதுகாத்தவன், நளாயினி - நளாயினியான

வள், நிறைவுடன்-கற்புநிலையுடனே, பத்தாவின் வாக்ய பரி பாலனஞ்செய்தாள்-தன் கணவனது சொல்லை நன்றாகப்பாது காத்தாள், மந்தை - மந்தைவெளியிலும், வழி - வழியிலும், கோயில்-கோயிலிலும், குளமும்-குளக்கரையிலும், குலவு - எழுந்தருளியிருக்கிற, தும்பிமுகன்-யானைமுகத்தையுடைய வனாகிய விநாயகக்கடவுள், மகிழ்தர-மகிழ்ச்சியடைய, உகந்து (அவனுடன்) விரும்பி விளையாடுகின்ற, துணைவா (அவனது) தம்பியே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

ஸ்ரீராமபிரான், தன் தந்தையாகிய தசரதன் தன் சிறிய தாயாகிய கைகேயிக்குக் கொடுத்திருந்த வரங்களை நிறைவேற்றும்பொருட்டு, அவள் கட்டளைப்படி பரதனுக்கு நாடு கொடுத்துத் தான் காடுபுகுந்தது ஸ்ரீராமாயணத்தால் விசதம். பாண்டவரைவருள் வீமன்முதலிய தம்பிமார் நால்வரும் தமையனான தருமபுத்திரனது கட்டளையை ஒருபொழுதுங் கடவாதல் அதற்கிணங்கி நடந்துவந்தமை மஹாபாரதத்தால் பிரசித்தம்.

அரிச்சந்திரன் சூரியகுலத்தில் திரிசங்கு மகாராஜனது குமாரன். தேவேந்திரன் ஒருநாள் தன் சபையில் வந்திருந்த முனிவர்களை நோக்கி, பூலோகத்தரசர்களில் சத்தியம் முதலியவற்றிற் சிறந்தவர் யார் என்று கேட்க, சூரியவமிச குருவாகிய வசிஷ்டர், அரிச்சந்திரன் சிறந்தவனென்று சொல்ல, விசுவாமித்திரர் அதனை மறுத்து, அந்த அரிச்சந்திரன் எவ்வகையிலும் மிகத்தாழ்ந்தவன் என்று சொல்லிச்

சாதிக்கையில், அரிச்சந்திரன் சத்திய முதலியவற்றில் தவ றினால், நான் தவஞ்செய்வதை விட்டு தலையோட்டில் கள்ளை யேந்திக்கொண்டு தெற்கே போவேனென்று வசிஷ்டரும், அவன் தவறாதிருந்தால் என் தவத்தால் பாதி கொடுப்பே னென்று விசுவாமித்திரரும் இந்திரன் முன்னிலையில் சப் தஞ் செய்துகொண்டார்கள். பிறகு விசுவாமித்திரர் பல வகையாகிய பெருந் தீங்குகளைச் செய்ய, அத்தீங்குகளுக்கு அரிச்சந்திரன் மனங் கலங்காமல் நாடுவிட்டுக் காடுபுகுந்து காசியையடைந்து, தன் மனைவியை விற்றுத் தன்னையும் விற் றுப் புலையனுக்கு அடிமையாகிப் பல பெருந் துன்பங்களை யனுபவித்து, சத்தியமுதலிய நல்லொழுக்கங்களில் சிறிதும் தவறாமல் சத்திய அரிச்சந்திரனென்று பேர்பெற்று இவ் வாறு குருவாக்கிய பரிபாலனஞ்செய்து, முடிவில் சுகமடைந் தானென்பது புராணப் பிரசித்தம்.

குந்திதேவி கன்னிகையா யிருந்தபோது சூரிய னனுக் கிரகத்தால் அவளிடம் கவசகுண்டலங்களுடன் பிறந்தவனும் பஞ்சபாண்டவர்க்குத் தமையனுமான கர்னன் எவர்க்கும் வேண்டிய பொருள்களை யெல்லாம் இல்லையென்னாமல் அளி க்கும் வண்மையில் சிறந்தவனாய், அந்தண வடிவங்கொண்டு தன்னிடம் வந்து இரந்த இந்திரனுக்குத் தனது கவசகுண் டலங்களை அறுத்துக்கொடுத்த தல்லாமல், போரில் தான் இறக்கும்பொழுது, அந்தண வடிவங்கொண்டு வந்து இரந்த கண்ணபிரானுக்குத் தன் புண்ணியமனைத்தையும் ஈந்துதான் கர்ணனென்று புகழ்பெற்றமை, மகாபாரதத்தில் பிரசித்தம்.

அனுமான், இராமபிரானது வார்த்தையின்படி சுக்ரீவன் கூறிய கட்டளை தவறாமல் சீதையைத் தேடுதற்குப் புறப்பட்டுச் செல்லும்வழியில் சம்பாதி சொன்ன சொல்லைக் கழுவிக்கடல்கடக்கவேண்டியபொழுது ஜாம்பவான்சொன்ன வாக்கியத்தை மேற்கொண்டு கடல்கடந்து இலங்கைசேர்ந்து அசோகவனத்தில் பிராட்டியைக்கண்டு பெருமாள் சொன்ன செய்திகளையெல்லாம் அவளிடம் சொல்லி அவள் சொன்ன சொற்களைச் சிரமேற்கொண்டு மீண்டு இராமபிரானிடம் வந்து செய்திகூறி அதன் பின்பு கடலிலணைகட்டுதல், அரக்கரோடு போர்செய்தல், இருமுறை சஞ்சீவிமலை கொணர்தல் முதலிய அரிய பெரிய காரியங்களெல்லாம் இராமன் சுக்ரீவன் ஜாம்பவான் முதலிய பெரியோர்சொன்ன சொற்களின் படியே செய்து இராமதாசனாய் ஒழுகியமை இராமாயணப் பிரசித்தம். அனுமான் துணிந்து முயன்று கடல் கடந்திரா விட்டால் வானரதூதரனைவரும் சுக்ரீவாஞ்ஞையைப் பரிபாலனம்செய்து பழிக்குப் பாத்திரமாதலுங் காண்க.

நளாயினி என்பவள், திரௌபதியின் முதற்பிறப்பு. அவள் கணவனை மௌற்கலியன் அவளுடைய கற்பினுறுதியையும் அன்புநிலையையுஞ் சோதிக்கக் கருதி மிகுந்த குஷ்டரோகமும் அதனாற் சிதைந்த வடிவமும் அதிக கிழத்தனமும் எப்பொழுதும் பெருங்கோபமும் உடம்பில் துர்க்கந்தமுமுடையவனாய்த் தன்னைக்காட்ட, அப்பொழுதும் அவள் அவன் பக்கல் அன்பு சிறிதுங் குறையாமல் அவனுக்குப் பலவகை உபசாரங்களையும் வழுவாது நன்மனத்தோடு

புரிந்து முறைப்படி அவனுண்டு மிகுந்த எச்சிலைத் தானு ண்டு வாழ்ந்திருக்கையில், ஒருநாள் அவனுண்ட மிச்சத்தில் அவனுடைய கைவிரலொன்று அற்று வீழ்ந்து கிடக்கக் கண் டும் சிறிதும் அருவருப்புக் கொள்ளாமல் அதனை எடுத்து வைத்துவிட்டு அவ்வுணவை அன்போடு உண்ண அங்ஙனம் அவள் நிலைகுலையாது வழிபட்டு வந்ததை அவன் பார்த்து மிகுந்த திருப்திகொண்டு தனது நோய்வடிவத்தை யொழித் துத் தவமகிமையால் காமனிலும் அழகிய வடிவங்கொண்டு அவளை நோக்கி 'நினக்கு வேண்டும் வரம் வேண்டுவாய்' என்ன, அவள் வேறொரு வரத்தையுங் கேளாமல் உன் அன்பு எப்பொழுதும் என்னிடம் நீங்காதாகுக என்றுசொ ல்ல, அங்ஙனமே அவன் உடன்பட்டு ஐந்து வடிவங்கொண்டு இவளோடு கூடிவாழ, இவ்விருவரும் இங்ஙனம் நெடுங்காலம் கழித்தபின், நளாயினி விதிவசத்தால் இறந்து மறுபிறப்பில் இந்திரசேனையென்னும் பெயருடையளாய் அவனிடம் வர, அப்பொழுது அவன் தவஞ்செய்யுங் கருத்துடையவனாய் அவளுக்கு இடங்கொடாது விட்டுச் செல்லும்பொழுது அவள் அவனை நோக்கி 'யான் இனி யென்செய்வது? என்று வினவ அவன் கட்டளையிட்டபடி அர்த்தநாரீஸ்வர மூர்த்தி யை நோக்கித் தவஞ்செய்து வரம்பெற்று அடுத்த ஜன்மத் தில் திரௌபதியாய்த் தோன்றிப் பஞ்சபாண்டவரை மணஞ் செய்து வாழ்ந்தனளென்பது பாரதப் பிரசித்தம்.

முயற்சியின் மிக்க தாழெனல்.

வங்காள மேறுகினும் தாருகோ லொருகாசு
மட்டன்றி யதிக மாமோ

வானேறி யுயரப் பறந்தாலு மூர்க்குருவி
வண்ணப் பருந் தாகுமோ
கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரை யாகுமோ
கடலுக்கு ணாழியை யமுக்கியே மொண்டிடிற்
காணுமோ நாழி காண்
ஐங்காத மோடினுந் தன்வினைக டன்னோடே
யடையாம னீங்கி விடுமோ
வாரிடஞ் சென்றாலும் வெகுதொலைகள் சுற்றினு
மமைத்தபடி யன்றி வருமோ
மங்காத செந்தமிழ்க் கொண்டுநக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (49)

(இ-ள்.) வங்காளம் ஏறுகினும்-வங்காளத்துக்குக் கப்பலேறிப்போனாலும், வாருகோல்-துடைப்பம், ஒருகாசுமட்டு அன்றி - ஒரு காசளவேயன்றி, அதிகம் ஆமோ - அதிகமாகுமோ, வான் ஏறி-ஆகாயத்திலெழும்பி, உயரப் பறந்தாலும்-உயர்வாகப் பறந்தாலும், ஊர்க்குருவி - ஊர்க்குருவியானது, வண்ணப்பருந்து ஆகுமோ-அழகையுடைய பருந்தாகுமோ, கங்காசலந் தன்னில் மூழ்கினும் - கங்கையாற்றின் நீரில் முழுகினாலும், பேய்ச்சுரைக்காய் - பேய்ச்சுரைக்காயானது, நல்ல சுரையாகுமோ - நல்ல சுரைக்காயாகுமோ, கடலுக்குள் - கடலில், நாழியை-ஒரு நாழியை, அமு

க்கியே மொள்ளினும்-அமுக்கியே மொண்டாலும், நானாழி காணுமோ-நானாழி நீரைக்கொள்ளுமோ, ஐங்காதம் ஓடினும்-ஐந்துகாததூரம் ஓடினாலும், தன்வினைகள் (ஒருவனது) வினைகள், தன்னோடே அடையாமல்-அவனோடு கூடாமல், நீங்கிவிடுமோ-ஒழிந்து விடுமோ, ஆரிடம் சென்றாலும்-யாரிடத்திற் போனாலும், வெகுதொலைகள் சுற்றினும்-வெகுதூரம் சுற்றினாலும், அமைத்தபடி அன்றிவருமோ-(அவரவர்க்குக் கடவுளால்) அமைக்கப்பட்ட படியேயன்றி உண்டாகுமோ, மங்காத-அழியாத, செந்தமிழ் கொண்டு-செந்தமிழ்ப்பாடலை யேற்றிக் கொண்டு, நக்கீரர்க்கு வந்ததுயர்-நக்கீரர்க்குவந்த துன்பத்தை, தீர்த்தமுருகா-நீக்கியருளின முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

வங்காளம்-ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று. வாருகோல்-துடைப்பம். நாழி-படி. அமுக்குதல்-அழுத்துதல்,

இடும்பாலழிவு

சூரபத்மன் பெலமு மிராவணன் றிறமுந்
துடுக்கான கஞ்சன் வலிதந்
துடியான விரணியன் வெப்ரசா தங்களுந்
தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோத னதிநூற் றுவரது
பாராக்ரமமு மது கைடவர்
பாரிப்பு மாபெலித னண்மையுஞ் சோமுகன்
பாங்கிலுறு வல்லமை களும்

எரணவு கீசகன் கனதையுந் திரிபுர
ரெண்ணமுந் தக்க னெழிலு
மிவர்களது சம்பத்து நின்றவோ வவரவ
ரிடும்பா லழிந்த வன்றோ
மாரனைக் கண்ணா லெரித்தருள் சிவன்றந்த
வரபுத்ர வடி வேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (47)

(இ-ள்.) சூரபத்மன்-சூரபத்மனுடைய, பெலமும்-வலிமையும், இராவணன்-இராவணனுடைய, தீரமும் தைரியமும், துடுக்குஆன-தீக்குணமுள்ள, கஞ்சன்-கம்சனுடைய வலியும்-பலமும், ஆடிஆன-மேன்மைகொண்ட, இரணியன்-இரணியன் பெற்ற, வரப்ரசாதங்களும்-வர அனுக்கிரகங்களும், தொலையாத-அழியாத, வாலிதிடமும்-வாலியினதுவலிமையும், காரம்பிகு-(பூமிக்கு) பாரமாக மிகுந்த, துரியோதன ஆதி நூற்றுவர் தம்-துரியோதனன் முதலிய நூறுபேர்களுடைய, பராக்ரமும்-பகைவெல்லும் வல்லமையும், மதுகைடவர்-மதுகைடவன் என்னும் அசுரர்களுடைய, பாரிப்பும்-பெருமையும், மாபலிதன்-மகாபலிச் சக்ரவர்த்தியினுடைய, ஆண்மையும்-பௌருஷமும், சோமுகன் பாங்கில் உறு-சோமுகாசுரனிடத்திற் பொருந்திய, வல்லமைகளும்-திறமைகளும், ஏர் அணவு-வளர்ச்சி பொருந்திய, கீசகன்-கீசகனுடைய, கனத்தையும்-பெருந்தன்மையும், திரிபுரர்-திரிபுரத்து அசுரர்களுடைய, எழிலும்-செருக்கும், இவர்களது சம்பத்தும்-இவர்களுடைய ஐசுவரியங்களும், நின்றவோ-

நிலை நின்றனவோ (இல்லையே) அவரவர் இடும்பால் அழிந்த அன்றோ-அவரவர்கள் செய்த தீச்செயல்களினால் அழிந்துவிட்டன அன்றோ, மாரனை-மன்மதனை, கண்ணால்-நெற்றிக் கண்ணைக் கொண்டு, எரித்து-எரித்து, அருள் (பின்பு அவனுக்கு) அருள்செய்த, சிவன்-சிவபிரான், தந்த-பெற்ற, வரபுத்ர-சிறந்தகுமாரனே, வடிவேலவா-வடிவேலையுடையவனே மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

காசிபமுனிவர்க்கு மாயா தேவியினிடந் தோன்றிய சூரபதுமன், தனது தம்பியரான சிங்கமுகன், தாருகன்என்றவர்களுடனே, வளர்ந்து சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்து வரம்பெற்றுச் செருக்கிப்பொருது தேவர்களை வென்று தென்கடலிடையில் மகேந்திரநகரத்திலிருந்து கொடுங்கோல் செலுத்தி ஆயிரத்தெட்டண்டங்களை அரசாண்டு தேவர்க்கும் முநிவர்க்கும் யாவர்க்கும் பல பெருந்தீங்குகள் செய்து வருகையில், தேவர்கள் வேண்டுகோளின்படி சிவபிரானால் உண்டாக்கப்பட்ட முருகக்கடவுள் சென்று போர்செய்து அவர்களையெல்லாம் அழித்திட்டார்.

பலவகை வலிமைகளையும் மிகுதியாகப் படைத்த இராவணன், இராமபிரானால் அழிவடைந்தான் காலநேமி யென்னும் அசுரனது அம்சமான கம்சன் மற்றும்பல அசுரர்களின் அம்சசான அசுரர்களுடன்கூடி உலகத்திற் பலபெருந்தீங்குகளைச் செய்துவர, அவனுக்கு மருமகனாய் அவதரித்த கண்ணபிரான் அவனைக் கூட்டத்தோடு அழித் திட்டான்.

இரணியன்பெற்ற வரபலமுழுதும் நரசிங்கமூர்த்தியினால்நிலை குலைந்தது. தன்னுடன் எதிர்த்தார் வலிமையிற்பாதி தன்வலிமையில் வந்து கூடும்படி வரம்பெற்றவாலி, சுக்ரீவனோடு பொருகையில் அவ்வாலியை இராமபிரான் மறைவிலிருந்து அம்புஎய்து கொன்று விழுத்தியதினால் அவ்வலிமை பயனிலதாயிற்று. துரியோதனாதியர் நூற்றுவரையும் மகாபாரதயுத்தத்தில் வீமன் கொன்றான். மதுகைடவரென்பவர். ஆதி சிருஷ்டிகாலத்தில் தோன்றினவர். மகாபலசாலிகளான இவ்வசுரர் இருவரும் செருக்கிக் கடலில் இழிந்து திருமாலையெதிர்த்து நெடுங்காலம் போர்புரிய, இவர்களை அப்பெருமான் துடையாலிடுக்கிக் கீழேதள்ளிக் கால்களால் மிதித்துத் துவைத்து வைத்தான். மகா பலியென்னும் அசுரராசன் தன் வல்லமையால் இந்திரனையும் வென்று மூவுலகையும் அரசாண்ட பொழுது, அரசிழந்த தேவர்களின் வேண்டுகோளால் திருமால்குள்ள வடிவான வாமநாவதாரஞ்செய்து அந்தப்பலியினிடஞ் சென்று தன்காலடியினால் மூவடிமண்வேண்டி அது கொடுத்ததற்கு அவன் இசைந்தவுடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை யளாவி வளர்ந்து ஓரடியால் பூலோகத்தையும், ஓரடியால் மேலுலகத்தையும் அளந்து மற்றோரடிக்காக அவன் முடியிற் கால்வைத்து அவனைப் பாதாளத்திலழுத்தி அடக்கினான். முன் ஒருகாலத்தில் பிரமதேவன் கண்துயில்கையில் சோமுகன் என்னுமசுரன் வேதங்களையெல்லாம் கவர்ந்துகொண்டு கடலினுள் மறைந்து செல்ல, பிரமன்முதலிய தேவர்களின் வேண்டுகோளால் திருமால் ஒரு பெரியமீனாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கி அவ்வசுர

னைத் தேடிப் பிடித்துக்கொன்று, அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக் கொணர்ந்து அன்னவடிவமாய் அவற்றைப் பிரமனுக்கு உபதேசித் தருளினன். விராடராசனது மைத்துனனும் சேனைத்தலைவனும் மகாபல சாலியுமாகிய கீசகன் அஞ்ஞாத வாசகாலத்தில் வண்ணமகளாய் உருக்கரந்திருந்த திரௌபதியைப் பார்த்து மோகங்கொண்டு பலாத்காரஞ்செய்ய, அதையறிந்த வீமசேனன் ஒருநாள் நடுராத்திரியில் அக்கீசகனைக் கொன்று உடனே அவன் தம்பிமார் நூற்றுவரையும் வதைசெய்தான். தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுந்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் என்னும் மூவரும் தவஞ்செய்து பிரமனிடம் வரம்பெற்று வானத்திற் பறந்துசெல்லும் மூன்று பட்டணங்களை யடைந்து மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடன் தாம்நினைத்த யிடங்களிற் பறந்துசென்று பல இடங்களையும் பாழாக்கிவருகையில் அத்துன்பத்தைப் பொறுக்க மாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்திர சூரியரைத் தேர்ச்சக்கரங்க ளாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் அமைத்துக் கொண்டு போர்க்குச் சென்று அவ்வசுரர்களைச் சிரித்து அப்பட்டணங்களுடனே எரித்திட்டனன். பிரமனது குமாரனான தக்ஷமுனிவன் தனதுமகளாய்த் தோன்றிய சதியென்று பெயர் கொண்ட உமாதேவியைச் சிவபிரானுக்கு மணஞ்செய்து கொடுத்த பின்பு அச்சிவபிரானோடு மாறுபட்டு அம்மகளையும் மருமகனையும்

வரவழையாமல் சிவபிரானுக்கு அவிர்ப்பாகமும் கொடாமல் அவமதித்துப் பெரியதொரு யாகஞ்செய்கையில், உமாதேவி தான் மாத்திரம் வேள்விக்குச் சென்று அங்கு அம்முனிவன் தன்னை அலட்சியஞ் செய்து தன்கணவனைப் பழித்ததனால் அக்கினி பிரவேசஞ் செய்து தக்ஷபுத்திரியான உருவத்தை யொழித்துப் பர்வதராசனான இமயமானிலை மகளாய்த்தோன்றி நிற்க, அதனை யறிந்து கோபங்கொண்ட சிவபிரான் வீரபத்திரக் கடவுளை யுண்டாக்கித் தக்ஷனைத் தண்டிக்கும்படி யனுப்ப அக்கடவுள் சென்று அந்த யாகத்தைச் சின்னபின்னப் படுத்தி அம்முனிவனையும் தலை துணித்து மீண்டனன் என்பதாம்.

முன் ஒரு காலத்தில் கைலாசகிரியில் சிவபிரான் சநகர் முதலிய நால்வர்க்கு யோகநிலையை உணர்த்துதற் பொருட்டுத்தான் யோகஞ் செய்துகொண் டிருக்கையில் பிரமனேவலால் மலரம்புகளை யெய்து தனது தவத்தைக் கெடுக்கத்தொடங்கிய மன்மதனைச் சினந்து நெற்றிக்கண்ணை விழிப்பது அதன்நெருப்புக்கு இரையாய் உடம்பு எரிந்து சாம்பலாய்ப் போகும்படி செய்தனன். அப்பொழுது மன்மதன் மனைவியான ரதிதேவி தன்கணவன் தகிக்கப்பட்டதனால் சிவபிரானைச் சரணமடைந்து பிரார்த்திக்க, அவன் அவளுக்கு மாத்திரம் ரூபமுடையவனாகவும், மற்றையோர்க்கு ரூபமில்லாதவனாகவும் இருக்கும்படி அருள் செய்தனன்.

நட்பு நிலை.

மாமதியின் முயலான ததுதேய் வுழித்தேய்ந்து
வளருமப் போது வளரும்

வாவிதனி லாம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
வற்றிடும் பெருகி லுயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீந்திடும்
பொங்குகா லந் தழைக்கும்
புண்டரிக மிரவிபோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகின் மலரும்
தேமுட விளக்கிலுயிர் கூடவு மிளக்கு மது
தேறிலுயி ருஞ்சிறக் குஞ்
சேர்ந்தோர்க் கெடுக்கணது வந்தாலு நல்லோர்
சினேசமப் படி யாகுமே
வரமனச் சொரூபமத யானைமுக னுக்கிளைய
வாலகுரு பர வேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (48)

(இ-ள்.) மா-பெரிய, மதியின்-சந்திரனிடத்துள்ள, முயலானது-முயல்வடிவமானது, அது தெய்வுழிதேய்ந்து-அச்சந்திரனது வடிவம் குறையும்போது தானும்குறைந்து, வளரும்-அப்போது வளரும்-அவ்வடிவம் வளரும்போது தானும் வளரும், வாவிதனில் - குளத்திலுள்ள, ஆம்பல்கொட்டிகள்-ஆம்பற்கொடிகளும் கொட்டி யென்னும் பூண்டுகளும், அதனில் நீர்வற்றின்-அக்குளத்திலுள்ள நீர்வறண்டால், வற்றிடும்-தாமும்உலரும், பெருகில் (அக்குளத்தில் நீர்) மிகுந்தால், உயரும்-தாமும் செழித்துவளரும், பூமருவுபுதல்பூடு-நிலத்திற் பொருந்திய புற்களும் பூண்டுகளும், கோடையில்

தீய்த்திடும்-தபிவெயிற காலத்தில் (அந்நிலம் உலரும் போது தாம்) கருகிப்போம், பொங்குகாலம் (அந்நிலம் மழைவளந் தாற்) செழிக்கும்போது, தழைக்கும்-தாம்செழித்துவளரும். புண்டரீகம்-தாமரை, இரவிபோம் அளவில்-சூரியன் அஸ்தமிக்கும் பொழுது, குவிந்திடும்-தான் குவியும், உதயம்ஆய (பின்பு அச்சூரியன்) உதயமாகும்போது-அப்போது, மலரும்-தான்மலரும், தேகம் உடல், இளைக்கில் (தனக்கு) இடமான உடல் இளைத்தால், உயிரும்கூட இளைக்கும்-உயிருடன் கூடவே மெலியும். அதுதேறில்-அவ்வுடம்பு புஷ்டியடைந்தால். உயிரும் சிறக்கும்-உயிரும் வலிமைபெறும், சேர்ந்தார்க்கு இடுக்கனது வந்தால்.தம்மால் அடுக்கப்பட்டவர்களுக்குத் துன்பம் நேர்ந்தால் நல்லோர் சிநேகமும் அப்படியாகுமே. நற்குண நற்செய்கை யுடையவர்களது சிநேகமும் அவ்வாறே யாகும் (அவர்கள் இன்பமடையத் தாமும் இன்பமடைந்து அவர்கள் துன்பமடைய தாமும் துன்ப மடைவர் என்பதாம்) வாமனசொரூபம்-குட்டையான வடிவத்தையுடைய. மதயானை முகனுக்கு-மதம்பிடித்த யானையின் முகம் போன்ற முகமுள்ள விநாயகனுக்கு. இளைய-தம்பியே. வால இளமைப்பருவ முடையவனே. குருபர-சிறந்தகுருவே, வேலவா-வேலாயுதத்தை யுடையவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

சந்திரனிடத்துக் காணப்படுகிற களங்கத்தை முயலென்றல்மரபு, ஆம்பல்-ஒருநீர்ப் பூங்கொடி-கொட்டி ஒரு கிழ

க்கு சீர்ப்பூண்டு, புதல் - புதருமாம், கோடை - முதுவேனிற் பருவம், ஆனி - ஆடிமாதங்கள், உயிர் இளைத்தல் என்றது உடம்போடுகூடிய உயிருக்கு உரியகுணம் செயல்கள் குறைவுபடுதலேயே கைகால்கள் குறுகிய பூதவடிவம் விநாயகருக்கு உள்ளதனால் "வாமனசொரூபம்" என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.

கைப்பலனுமவை.

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாசடு கையும்
பலமினிய வாடிதனி லாணைவால் போலவே
பயிர்கொண்டு வரு கரும்பும்
கருணையொடு பிக்கா ணயமுடலோர் கையினிற்
கடனிட்டு வைத்த முதலுங்
காலமது போரிற் றனக்குறுதி யாகமுன்
கற்றுணர்ந் திடு கல்வியும்
விருதாச ரைக்கண்டு பழகிய சிநேகமும்
விவேகிகட் குபகார மாம்
வீணல்ல விவையெலாங் கைப்பலன தாகவபி
விர்த்தியாய் வருமென் பர்காண்
மருவுலா வியநீப மாலையுந் தண்டரள
மாலையும் புனைமார் பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ-ள்.) பருவத்திலேபெற்ற சேயும்-பருவத்திலேபெற்ற பிள்ளையும், புரட்டாசிபாதி - புரட்டாசிமாதம் பாதியில், சம்பா நடுகையும்-சம்பாநடவும், பலம் இனிய ஆடிதனில்-பலந்தருதலிற் சிறந்த ஆடிமாசத்தில், ஆனைவால்போலவே பயிர்கொண்டு வருகரும்பும்-விளைந்துவருகின்ற கரும்பும், கருணையொடு மிக்ககாணயமுள்ளோர்-கிருபையோடு மிகுந்தகாணயமும் உள்ளவாகளது, கையினில்-கையிலே, கடனிட்டு வைத்தமுதலும் - கடனாகக்கொடுத்து வைத்தபொருளும், காலமதுநேரில்-காலம் வாய்த்தால், தனக்கு உறுதியாக-தனக்கு உறுதிப்பொருளாக, முன் - முன்னமே, கற்றுணர்ந்திடு கல்வியும்-கற்றறிந்த வித்தையும், விருது அரசரைக்கண்டு-விருதுகளையுடைய வேந்தர்களைக்கண்டு, பழகியகேண்மும்-பழகியநட்பும், விவேகிகட்கு-அறிவுடையார்க்கு, உபகாரம்ஆம்-உபகாரமாகும், வீண் அல்ல-வீணாய்ப்போவன அல்ல, இவையெலாம்-இவையாவும், கைப்பலனதாக-கைப்பலனாக, அபிவிர்த்தியாய் வரும் - வளர்ந்துகொண்டேவரும், என்பர்-என்று சொல்லுவர், (மேலோர்) மருஉலாவிய - மணம்வீசுகின்ற, நீபமாலையும்-கடப்பமலர் மாலையையும், தண்தாளமாலையும்-குளிர்ந்தமுத்து மாலையையும், புனை - அணிந்த, மார்பனே-மார்பையுடையவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு வடிமேவு குமரேசனே, எ-று.

பருவம்-இளமைப்பருவம். சம்பா-சம்பாநெல். நடுகை நடுதல். ஆனைவால்போல்-யானைவால்போலப்பருத்து, பயிர்

கொண்டுவருதல் - விளைந்துவருதல். விருது-கொடி. குடை முதலியன, மரு-வாசனை, நீபம்-கடப்பமலர். தாளம்-முத்து.

சமயத்துக் குதவாதவை.

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற்
        கட்டிவைத் திடுவித் தையுங்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
        கையிற் கொடுத்த பொருளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதமென்
        றிருக்கின்ற குடிவாழ்க் கையு
மேறுமா றுகவே தேசாந் தரம்போ
        யிருக்கின்ற பிள்ளை வாழ்வும்
சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாச்
        சொல்லும்வஞ் சகர் நேசமுஞ்
சுகியமா யுண்டென் றிருபபதெல் லாந்தருண
        துரிதத்தி லுத்வா தகாண்
வல்லான கொங்கைமட மாதுதெய் வானைகுற
        வள்ளிபங் காள நேயா
மயிலேறி விளையாடு தகனேபுல் வயனீடு
        மலைமேவு குமரேசனே. (௫௦)

(இ-ள்.) கல்லாது-கற்காமல், புத்தகந்தனில் - புத்தகத்தில், எழுதி-எழுதி, வீட்டினில் கட்டிவைத்திடு-வீட்டிற் கட்டிவைத்திருக்கின்ற, வித்தையும்-கல்வியும், காலங்களுக்கு-ஆபத்துகாலங்களுக்கு, உதவவேண்டுமென்று - உதவியாக

வேண்டுமென்று, அந்நியன் கையில் கொடுத்த பொருளும், பிறன்கையில் கொடுத்து வைத்தபொருளும், இல்லாளை நீங்கி-தன் மனைவியைவிட்டு, பிறன்பாரி-பிறன் மனைவி, சதமென்று இருக்கின்ற-துணையென்று இருக்கின்ற, குடிவாழ்க்கையும்-குடும்ப வாழ்வும், ஏறுமாறாகவே-தாறுமாறாக, தேசாந்தரம் போய்இருக்கின்ற-தேசாந்தரமாகப் போயிருக்கின்ற, பிள்ளை வாழ்வும் - பிள்ளையின் உயிர்வாழ்க்கையும், சொல்லானது ஒன்றும் - சொல்லொன்றும், அவர் மனமானது ஒன்றுமா-அவர்களுடைய மனம் ஒன்றுமாக, சொல்லும் - பேசுகின்ற, வஞ்சகர் நேசமும்-வஞ்சகரது நட்பும், சுகியமாய்-சுகத்துக்கு உதவியாக, உண்டென்று-இருக்கின்றதென்று, இருப்பதெல்லாம்-இருக்கிறதெல்லாம், தருணதுரிதத்தில்-அவசர சமயத்தில், உதவாது-உதவியாகாது, வல்ஆனகொங்கை-சொக்கட்டான் கருவியையொத்த தனத்தையுடைய, மடமாது-இளம் பெண்ணாகிய, தெய்வானை-தெய்வானையையும், குறவள்ளி-குறவள்ளி நாயகியையும், பங்காள - இருபுறத்திலுமுடையவனே, நேயா - அவர்களுக்குப் பிரியனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயலீடு மலைமேவு குமரேசனே. எ-று.

பாரி-மனைவி. சதம்-உறுதி. தேசாந்த்ரம்-வேறு தேசம். வஞ்சகர்-கபடிகள். சுகியம்-சுகமனுபவித்தற்குரியன. துரிதம்-அவசரம். வல்-சூதாடு கருவி.

திரும்பமாட்டாதவை.

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவளைபு
மாலைவா யிற்க ரும்பு

மரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினி
    லகப்பட்டு மெலிகாக் கையுப்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்தது
    நமன்கைக்கு ளான வுயிரும்
நலமாக வேயணை கடந்திட்ட வெள்ளமு
    நாய்வேட்டை மட்ட முசலும்
தேடிபுண் பார்கைக்கு ளானபல வுவைமையுந்
    தீவாதை யானமனையுந்
திரள்கொடுங் கோலரசர் கைக்கேறு பெருநைத்
    திரும்பிவா ராவென் பர்கான்
மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
    வாழவந் திடுமு தல்வனே
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
    மலைமேவு குமரேசனே

(இ-ள்) ஆடுஅரவின்வாயினில் - படமெடுத்து ஆடுகின்ற பாம்பின்வாயிலே, அகப்பட்டதவளையும் - சிக்கிக்கொண்டதவளையும், ஆலைவாயில் கரும்பு - ஆலையிலகப்பட்ட கரும்பும், அரிதானகப்பலில் - முரிதாகியகப்பலிலே, பாய்மரக் காற்றினில், பாய்மரத்தின்காற்றில், அகப்பட்டு மெலிகாக் கையும்-அகப்பட்டு மெலிகின்ற காகமும், நாடு அறிய-உலக மறியும்படி, தாரைவார்த்து கொடுத்ததும்-ஒருவர்க்குந் தாரைவார்த்துக் கொடுத்த பொருளும், நமன்கைக்குள் ஆன உயிரும்-யமன் கையிற் சிக்கின பிராணனும், நலமாக-நன்றாக-அணைகடந்திட்ட வெள்ளமும்-அணைகடந்த நீர்ப்

பெருச்கும், நாய்வேட்டை பட்ட முசலும்-நாய் வேட்டையில் அகப்பட்ட முசலும், தேடி உண்பார்வைக்குள் ஆன-தேடிப்புண்பாது கையிலகப்பட்ட, பலவுடைமையும்-பலவுடைமைகளும், தீவாதையான மனை-நெருப்புக் கிரையானவீடும், திரள்கொடுங்கோள் அரசர்-திரளாகிய கொடுங்கோலையுடைய அரசந்து, கைக்கு எறுபொருள்-கையில் எறின திரவியமும் திரும்பிவரா என்பர்-மீண்டுவரமாட்டா என்று சொல்லுவா பெரியோர், மாடமிட்ச-மாடங்களின்மேல், அன்னக்கொடி திரள்கொள்-அன்னக் கொடியின் கூட்டத்தைக் கொண்ட, சோணுடுவாழ-சோழநாடு வாழும்படி, வந்திடும்-அவதரித்த, முதல்வனே-முதல்வனே, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

அன்னக்கொடி-யாசகர்க்கு அன்னம் போடுமிடமென்று அடையாளமாகக் கட்டின கொடி

இதினுமிது நன்றெனபவை.

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி னின்சொலால்
களிகொண் டழைத்த னன்று
கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொல்லாமை நன்று
வெடுவெடுக் கின்றதோ ரவிலேகி யுறவினில்
விவேகியொடு பகைமை நன்று
வெகுமநிக ளாயிரஞ் செய்வதி னரைக்காசு
வேளைகண் டுதவ னன்று

சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்ன னன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதி னுயற்ற
தாரித்தி ரியநன் றுகாண்
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மான்மருக னை முதல்வா
மயிலேறி விளையாடு முகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (52)

(இ-ள்.) கடுகடுத்து - கடுகடுத்துக்கொண்டே, ஆயிரம் செய்குவதில்-ஆயிரம் நன்மைகளைச் செய்வதிலும், களிகொண்டு-மனமகிழ்ந்து, இன்சொலால் அழைத்தல் - இனிய சொல்லைக்கொண்டழைத்தல், நன்கு-நன்மையாகும், கனம்-மேலான ஆயிரம் வேள்விசெய்வதின் - ஆயிரம் யாகங்களைச் செய்வதைப் பார்க்கிலும், கருத்தொடு-மனத்தொடு, பொய்யுரை சொல்லாமை - பொய் மொழி பேசாமை, நன்று-நன்மையாகும், வெடுவெடுக்கின்ற - வெடுவெடுக்கிற, ஓர் அவிவேகி உறவினின் - ஒரு அவிவேகியின் உறவினும், விவேகியொடு - விவேகியுடனே, பகைமை - பகைகொண்டிருத்தல், நன்று - நன்மையாகும், ஆயிரம் வெகு மதிகள் செய்வதின்- ஆயிரம் வெகுமானங்கள் செய்வதிலும், வேளை கண்டு - சமயம் பார்த்து, அரைக்காசு உதவல் நன்று - அரைக்காசு உதவுதல் நன்மையாகும், சடுதியில் - விரைவாக, பக்குவம் சொல்லும் கொடைக்கு - கெடுவுசொல்லுகிற கொடையினும், இங்கு-இவ்விடத்தில், சற்றும் இல்லையென்னல் - சிறி

துமில்லையென்று சொல்லுதல், நன்று-நன்மையாகும், சம்பத்துடன்-செல்வத்தோடு, பிணியின் மெலிகுவதின் - நோயினால் மெலிகுவதைப் பார்க்கிலும், நோய் அற்ற - பிணியில்லாத, தாரித்திரியம்-வறுமை, நன்று-நன்மையாகும், மடுவினில்-மடுவிலே, கரி-யானையானது, ஓலம் என்ன-ஓலமென்றலற, வந்து (அதற்குமுன்னே) எழுந்தருளி, அருள்செய்த-அருள்புரிந்த, மால்மருகன் ஆன-திருமாலுக்கு மருமகனாகிய, முதல்வா-முதல்வனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கடுகடுத்தல் - வெடுவெடுத்தல். பக்குவம்-செவ்வு. கரி-கஜேந்திரன். ஓலமெனல்-முறையிடல்.

பல கூடினுமொன் றற்கீடாகாதவை.

தாரகைக ளொருகோடி வானத் திருக்கினுஞ்
சந்திரற் கீடாகுமோ
தாருவிற் கொடிதொனிகள் பலகூடி னாலுமொரு
தம்பட்ட வோசை யாமோ
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினொரு
குஞ்சரக் கன்றா குமோ
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னாலுமொரு
கோகனக மலரா குமோ
பாரமிகு மாமலைகள் பலகூடி னாலுமொரு
பைம்பொன் மக மேருவாமோ
பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்விற்
பன்னொருவ னுக்கு நிகரோ

வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில்
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (53)

(இ-ள்.) ஒருகோடி தாரைகள்-ஒருகோடி விண்மீன்கள் வானத்து இருக்கினும்-ஆகாயத்தி லிருந்தாலும், சந்திரற்கு ஒரு சந்திரனுக்கு, ஈடு ஆருமோ-சமானமாகுமோ, தாருவில் கொடி தொனிகள்-கோலிற்றொடுத்த கொடித்திரளி னோசைகள், பல கூடினும்-பல சேர்ந்தாலும், ஒரு தம்பட்ட ஓசை ஆமோ-ஒரு தம்பட்ட வொலியாகுமோ, கோரம்மிகு பன்றியின்குட்டி பலகூடின்-கோரரூபம் மிகுந்த பன்றிகுட்டிகள் பலகூடினும், ஒரு குஞ்சரக்கன்று ஆகுமோ-ஒரு யானைக் கன்றாகுமோ, வாவியில்-தடாகத்தில், கொட்டிமலர் பலகூடினும்-கொட்டி மலர்கள் பலசேர்ந்தாலும், ஒரு கோகனமலர் ஆகுமோ-ஒரு தாமரை மலராகுமோ, பாரம்மிகுமாமலைகள் பலகூடினும்-பளுவுமிகுந்த பெரிய மலைகள் பல சேர்ந்தாலும், ஒரு பைம்பொன் மகமேரு ஆமோ-ஒருபசும் பொன்னாலியன்ற மகாமேரு மலையாகுமோ, பயன் இல்லா பிள்ளைகள்-பிரயோசந மில்லாத பிள்ளைகள், அநேகம் பிறந்தும்-அநேகம் பிறந்தாலும், விற்பநன்-விற்பந்நனாகிய, ஒருவனுக்கு நிகரோ-ஒரு பிள்ளைக்கு நிகராவரோ, ஒருகரத்தில் ஒருகையில், வாரணக் கொடிபிடித்து-கோழிக் கொடியைப் பிடித்து, ஒன்றில்-மற்றொரு கையில், வடிவேல் அணிந்த

முருகா-வடிவேலைத்தரித்த முருகனே, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

தம்பட்டம்-பேரி. கோகனகம்-தாமரை. விற்பந்நன் கல்வியறிவுள்ளவன்- வாரணம்-கோழி. தாரகைகள் ஒரு கோடி என்றதனால் சந்திரன் என்பதற்கு ஒரு சந்திரன் என்று கூறக்கப் பட்டது,

அருமையறிதல்.

மணமாலை யருமையைப் புனைபவர்க ளேயறிவர்
மட்டிக் குரங் கறியுமா
மக்களுடை யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவ துண்டோ
கனவனுடைய யருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவ ளறிவளோ
கருதுமொரு சந்திரின் பாண்டமென் பதைவருங்
களவான நாய றியுமோ
குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
கொடியபூ னையும றியுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமூடர் தாமறிவரோ
மணவாள னீயென்றி குறவள்ளி பின்றொடர
வனமூடு தழுவு மழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (54)

(இ-ள்.) மணம்மாலை-வாசனையுள்ள பூமாலையின், அருமையை-அருமையை, புனைபவர்களே அறிவர்-தரிப்பவரே

யறிவார், மட்டிக்குரங்கு அறியுமோ-முரட்டுக் குரங்கு அறியுமோ, மக்களுடை அருமையை-பிள்ளைகளின் அருமையை, பெற்றவர்களே அறிவர்-பெற்றவர்களே யறிவார்கள், மலடிதான் அறிவது உண்டோ-மலடியானவள் அறிவாளோ, கணவனுடை வருமையை-கணவனது அருமையை, கற்பாண மாது அறிவள்-கற்புள்ளபெண் அறிவள். கணிகையானவள் அறிவளோ-வேசையானவள் அறிவாளோ, கருதும்-நினைக்கத்தகுந்த, ஒரு சந்தியின் பாண்டம் என்பதை-ஒரு சந்திப்பாண்ட மென்பதை, வரும்-வருகிற, களவானநாய் அறியுமோ-திருட்டுநாயறியுமோ, குணமான கிளியருமைதனை-குணமுள்ள கிளியினதருமையை, வளர்த்தவர் அறிவர்-வளர்த்தவர்கள் அறிவார்கள், கொடிய பூனையும் அறியுமோ-கொடிதாகிய பூனையும் அறிவதுண்டோ, குலவு-விளங்குகிற பெரியோர் அருமை-பெரியோரது அருமையை, நல்லோர்களே அறிவர்-நல்லோர்களே யறிவார்கள்; கொடுமூடர்தாம் அறிவரோ-கொடிய மூடர்கள் அறிவார்களோ, மணவாளன் நீயென்று-கணவன் நீயேயென்று, குறவள்ளி பின்தொடர-குறவள்ளி யானவள் பின்தொடாதலும், (அவளை) வனமுடுவனத்தில், தழுவும்-தழுவின, அழகா-அழகனே மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே,

புனைபவர்கள்-தரிப்ப வர்களாகிய நாகரிக மனிதர்கள்-சந்திப்பாண்டம் விரதத்துக்குரிய மட்கலங்கள். நல்லோர்கள்-அறிவுடையோர். கற்பு-பதிவிரதா தருமம்.

தீச்சார்பாற் பயன் படாதவை

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கி ருக்கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன்
மருவியதில் வண்டி ருக்கும்
நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ரணுகாம
னீங்காத முள்ளி ருக்கும்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டணுகாது
நீரளவு சூழ்ந்திருக்கும்
குடிமல்கி வாழ்சின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கி ருக்கும்
கொடுக்குந் தியாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டு கண்டாய்
வடிவையுங் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக் குகந்த சணவா
மயிலேறி விளையாடு குகனேயுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (55)

(இ-ள்.) மடுவினில்-மடுவிலே, கஞ்சமலர் உண்டு-தாமரைமலருண்டு, ஒருவர் அணுகாமல்- (அதனிடத்து) ஒருவர்சேராமல், வல்முதலை-வலிய முதலையானது, அங்கு இருக்கும்-அவ்விடத்தி லிருக்கும், மலையினில் தேன்உண்டு-மலையின்மீது தேனிருக்கும், சென்று ஒருவர் கிட்டாமல் (அதனிடத்து) சென்று ஒருவர் நெருங்காமல், மருவி-பொரு

ந்தி, அதில் வண்டு இருக்கும்-அதில் வண்டிருக்கும், நெடு மைநிகழ் தாழை மேல் உண்டு-நீட்சி பொருந்திய தாழைமல ருண்டு, ஒருவர் அணுகாமல் (அதனிடத்து ஒருவர் கிட்டா மல், நீங்காத முள் இருக்கும்-இடையறாத முட்களிருக்கும், நீடு-நீண்ட, பல சந்தனவிருக்ஷமுண்டு-பல சந்தனமரங்களு ண்டு, அணுகாத-(அதனிடத்து) ஒருவர் சேராமல், நீள் அர வுசூழ்ந்திருக்கும்-நீண்ட பாம்புகள் சூழ்ந்திருக்கும், குடிமல்கி வாழ்கின்ற வீட்டில் - குடிகள் நிறைந்துவாழ்கின்ற வீட்டில், செல்லாது (ஒருவர்) போக வொட்டாமல், குரைநாய்கள் அங்கு இருக்கும்-குலைக்கின்றநாய்கள் அவ்விடத்திலிருக்கும் கொடுக்கும் தியாகி உண்டு - கொடுக்கின்ற தியாகி யுண்டு (அவனிடத்தில்) இடையூறு பேசும் - தடை சொல்லுகிற, கொடும்பாவி உண்டு-கொடும்பாவியும் உண்டு, வடுவையும் - மாவடுவையும், கடுவையும் - நஞ்சையும், பொருவும்- நிகர்க் கின்ற, இருகண்ணி-இரண்டு கண்களையுடையவளாகிய, குற வள்ளிக்கு-குறவள்ளிநாயகிக்கு, உகந்த கணவா-விருப்பமுள் ளகணவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே, எ - று.

தியாகி-கொடையாளி. இடையூறு தடைவடுவென்பது வடுவின் பிளவை கஞ்சமலர் முதலான இடங்களில் முதலை முதலானவைகளிருந்து அவற்றின் பயனைப் பிறரநுபவிக்க வொட்டாமற் செய்வதுபோல தியாகியினிடத்தில் ஒருகொ டும்பாவி அடுத்திருந்து அவனது பயனைப் பிறர் அநுபவிக்க வொட்டாமற் செய்வனென்பது இச்செய்யுட்கருத்து.

கணிகையரிழிவு.

தேவதா சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
சேர்ந்திடு படுக்கை வீடு
தெருவாசல் கட்டில்பொது வம்பல முடுத்ததுகில்
செய்யசூ தாடு சாலை
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனங் கவர் தூண் டிலாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு தொடை சர்ப்பமாம்
ஆவலா கியவல்கு லோதண்டம் வாங்குமிட
மதிகபட மாம னதுகல்
லமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
யவர்க்காசை வைக்க லாமோ
மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலா யுதா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (56)

(இ-ள்.) தேவதாசிகள் வீடு-வேசைகளுடைய வீடு, சந்தை-சந்தைகூடுகிற, பெரும்பேட்டை-பெரிய பேட்டையாகும், சேர்ந்திடு படுக்கை வீடு-பொருந்திய படுக்கை வீடானது, தெருவாசல்-தெருவாசலாகும், கட்டில்-கட்டிலானது, பொது அம்பலம் - பொதுவாகிய அம்பலமாகும், உடுத்த துகில்-உடுத்த ஆடையானது, செய்யசூதாடிசாலை-செய்கிற சூதாடிசாலையாகும், மேவலாகிய கொங்கை-தழுவத்தகுந்த

தனங்கள், கையாடுதிரள்பந்து-கையாடுகிற திரண்ட பந்தமர் கும், விழி-கண்கள், மனங்கவர்-மனமாகிய மீனைப்பிடிக்கிற, தூண்டில்ஆம்- தூண்டிலாகும், மிக்கமொழி (அவரது) மிகுந்தசொற்கள், நீர்மேல் எழுத்து-நீர்மேலெழுத்தாகும், அதிக மோகம்-அவரிடத்தில் ஒருவன்மீதுண்டாகிற மிகுந்தமோக மானது, ஒருமின்னல்-ஒருமின்னல்போல உடனேயழிவதா கும், இருதொடை-இரண்டுதொடைகள், சர்ப்பம்ஆம்-பாம் புகளாகும், ஆவலாகியஅல்குலோ - (ஆடவர்க்கு விருப்ப த்தையுண்டாக்குகிற அல்குலென்றுலோ, தண்டம் வாங்கும் இடம்-தண்டம்வாங்குகிற இடமாகும், அதிகபடமாம்-அதிக கபடமாகிய, மனது-மனமானது, கல்-கல்லாகும், அமிர்த வாய் இதழ்-அமிர்த வாயுடன்கூடிய இதழானது, சித்ரசாலை எச்சிற்குழி-சித்திரசாலையும் எச்சிற்குழியுமாகும், (ஆதலால் இத்தன்மையான இழிவுள்ள) அவர்க்கு - அந்த வேசையர் மீது, ஆசைவைக்கலாகுமோ, மாவடிவுகொண்டு ஒளித்த - மாமரவுருவங்கொண்டொளித்திருந்த, ஒருசூரனை-ஒப்பற்ற சூரபன்மனை, வதைத்த-கொன்ற, வடிவேலாயுதா - வடித்த வேற்படையையுடையவனே, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே- எ-று.

தேவதாசிகள் வீடுமுதலியவை சந்தை பெருப்பேட்டை முதலியவைபோல இழிந்தனவாதலால் அறிவுடையார் அவர்கள்மேல் விருப்பம் வைக்கலாகாது என்பது இச்செய்யுட் கருத்து.

கலிகாலக் கொடுமை

தாய்புத்தி சொன்னான் மறுத்திடுங் காலமுயர்
    தந்தையைச் சீறு காலஞ்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
    சற்றுமெண் ணாத காலம்
பேய்தெய்வ மென்றுப சரித்திடுங் காலம்
    புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலநற்
    பெரியார்சொல் கேளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிகு
    சிறியவன் பெருகு காலஞ்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்வசை
    செப்புவோர்க் குதவு காலம்
வாய்மதம் பேசிவிடு மணியாய காரர்க்கு
    வாய்த்தகலி கால மையா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (57)

(இ-ள்.) தாய்புத்தி சொன்னாள்-தாயானவள் புத்திசொன்னால், மறுத்திடும்காலம்-மறுக்கின்ற காலம், உயர்-உயர்ந்த, தந்தையை-தகப்பனை. சீறுகாலம்-சீறுகிற காலம் சற்குருவை நிந்தைசெய்காலம்-சற்குருவை நிந்திக்கிறகாலம், மெய்கடவுளை-உண்மையாகிய கடவுளை, சற்றும் எண்ணாதகாலம்-சிறிதும் எண்ணாதகாலம், பேய்.பேயை, தெய்

வம்என்று உபசரித்திடுங்காலம்-தெய்வமென் றுபசரிக்கிறகாலம், புரட்டருக்குஏற்றகாலம்-புரட்டருக்குத்தகுந்தகாலம், பெண்டாட்டிவையினும்-மனைவியானவள் வைதாலும், கேட்கின்றகாலம்-கேட்கிறகாலம், நல் பெரியவர் சொல்கொளாதகாலம் - நல்லபெரியோருடைய சொல்லை யேற்றுக்கொள்ளாதகாலம், தெய்வுடன்-மெலிவோடு, பெரியவன்-பெரியவனானவன், சிறுமையுறுகாலம்-தாழ்வடையுங்காலம், மிகுசிறியவன்-மிகவுஞ் சிறியவன், பெருகுகாலம்-பெருகுகிறகாலம், செருவில்-யுத்தகளத்தில், விட்டு-தமது (அரசனைவிட்டு) ஓடினோர்-ஓடிப்போனவர்கள், வரிசைபெறுகாலம்-வரிசைபெறுதற்குரியகாலம், வசைசெப்புவோர்க்கு உதவுகாலம்-நிந்தைசொல்லுவோர்க்கு உதவுகிறகாலம், வாய்மதம்பேசிவிடும்-வாய்மதம்பேசுகிற, அநியாயகாரர்க்கு-அநியாயகாரருக்கு, வாய்த்தகலிகாலம்-பொருத்தமான கலிகாலம், ஐயா-ஐயனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவு குமரேசனே. எ-று.

தாய் புத்திசொன்னால் மறுத்தல் முதலிய குணங்கள் இந்தக்கலிகாலத்துக் கேற்றனவாமென்பது இச்செய்யுட் கருத்து.

அவரவர்க்குரியவை.

கல்வியோடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன் பிதாவாம்
கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன் புத்திரன்

செல்வமிரு கணவனே தெய்வமென் றநுதினஞ்
சிந்தைசெய் பவண்மனைவியாஞ்
சினேகிதன போலவே யன்புவைத் துண்மைமொழி
செப்புமவ னேசோ தரன
தொல்வளமிருந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னேகுரவனுஞ்
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சிஷன்
வல்லிரக மிஞ்சுசுர குஞ்சரி யுடன்குறவர்
வஞ்சியை மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (58)

(இ-ள்.) கல்வியொடு கனம்உற - கல்வியுடனே மேன்மையும் பொருந்தும்படி, சபையின்-சபையின்கண், மேல்வட்டமாக வைப்போன் - மேல்வட்டமாகத் தோன்றும்படி தன்பிள்ளையை வைப்பவன், பிதாவும்-தந்தையானவன், கற்று-கல்விகற்று, உணர்ந்து-அவற்றின்பொருள்களை நன்றாயறிந்து, தனதுபுகழால்-தன் புகழினால், பிதாவை-தந்தையை, பிரகாசம் செய்வோன்-பிரகாசப் படுத்துவோன், புத்திரன்-புதல்வனாவன், செல்வமிருகணவனே, தெய்வம் என்று-செல்வமிருந்த கணவனை தெய்வமென்று, அநுதினம் - நாள்தோறும், சிந்தைசெய்பவள் - நினைப்பவள், மனைவியும் - மனைவியாவாள், சிநேகிதன் போலவே - நண்பன் போலவே, அன்புவைத்து - அன்பு வைத்து, உண்மைமொழி செப்புமவனே - மெய்ச்சொல்லைச் சொல்லுகிறவனே, சோதரன் -

சகோதரனாவான், கொல்வளம்மிகுந்த-பழமையாகிய வளமிகுந்த, நூல்களைத்தெரிந்த - நூல்வரம்புதெரிந்து, உறுதிமொழிசொல்லுபவனை-உறுதிமொழி சொல்லுவோனை, குரவனும்-சற்குருவாவான், சொன்னமொழி தவறாமல்-சொன்னசொல் தவறாமல், வழிபாடுசெய்துவரு - வழிபாடுசெய்துவருகிற, ஐயனை-பரிசுத்தனை, இனியசீஷன்-இனிதானசீடனாவான், வல்விரகம்மருந்த-வலிய விரகமிஞ்சின, நாகுஞ்சரியுடன்-தெய்வயானையுடனே, குறவர்வஞ்சியை-குறவர்பெண்ணையும், மணந்த கணவா-மணஞ்செய்துகொண்டகணவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே எ-று.

மேல்வட்டம்-மேலான அந்தஸ்து, பிரகாசஞ்செய்தல் - விளக்கச்செய்தல், சோதரன்-சகோதரன், (ஒரு தாய் வயிற்றில்பிறந்தவன், உறுதிமொழி-நன்மையைத்தருகிற சொல், வழிபாடுசெய்தல்-தொண்டுசெய்தல்.

சிறுமையிற் பெருமை.

சேற்றில் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தசாது
தேகத்தின் மேலிருக்கும்
போற்றியிடு பூச்சியின் வாயினால் பட்டென்று
பூசைக்கு நேச மாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் றேவர்கொள்
புனிதவபி டேக மாகும்

சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
    சவாதுபுழு கனைவர்க் குமாம்
சாதியீ னத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
    சபையின்மேல் வட்ட மன்றோ
மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
    வைத்தமெய்ஞ் ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (59)

(இ-ள்.) சேற்றில்பிறந்திடும்-சேற்றிலுண்டாகுகிற, கமலமலர்-தாமரைமலர், கடவுளது-இறைவனது, திருமுடியின்மேல் இருக்கும்-திருமுடிமீதிருக்கும், திகழ்-விளங்குகிற, சிப்பிஉடலில் சனித்தமுத்து-சிப்பியினுடம்பி லுண்டானமுத்து, அரசரது தேகத்தின்மேல் இருக்கும்-வேந்தருடைய சரீரத்தின்மேலிருக்கும், போற்றிபிடு-கட்டுகிற, பூச்சியின் வாயினூல்-பூச்சியின்வாய் நூல், பட்டு என்று-பட்டென்று சொல்லப்பட்டு, பூசைக்குநேசம் ஆகும்-பூசைக்குவிரும்பப்படுவதாகும், புகல் அரிய வண்டு எச்சில் ஆனதேன்-சொல்லுதற்கரிய வண்டின் எச்சிலாகிய தேனானது, தேவர்கொள்-தேவர்கள் ஏற்றுக்கொள்ளுகிற, புனிதம்-பரிசுத்தமாகிய, அபிடேகம் ஆகும்-அபிஷேகத் திரவியமாகும், சாற்றிய-சொல்லப்பட்ட, புலாலொடு பிறந்த-மாமிசத்தோடு பிறந்த, கோரோசனை சவாதுபுழுகு-கோரோசனை சவாது புழுகு என்பவைகள், அனைவர்க்கும் ஆம்-எல்லார்க்கும் உபயோகமாகும், (ஆதலால்) சாதி ஈனத்தில் பிறக்

கினும் - ஈனசாதியிற் பிறந்தாலும், கற்றோர்கள் - கல்வி கற்றோர்கள், சபையின் மேல்வட்டம் அன்றோ-சபையின் மேல்வட்டமல்லவா, விபூதியால்-திருநீற்றில், சுரத்தினைமாற்றி-சுரத்தை நீக்கி, உடல்குளிரவைத்த-உடம்பு குளிரவைத்த, மெய்ஞ்ஞான முதலை-மெய்ஞ்ஞானத்தையுடைய முதல்வனை, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

சிப்பி - முத்துச்சிப்பி. புலால்-மாமிசம். விபூதியாலுடல் குளிரவைத்தது. திருஞான சம்பந்தரா யவதரித்தபோது பாண்டியனை விபூதியினா லச்சுரநீக்கி உடல் குளிரச்செய்தது.

செயத்தகாதவை.

தானுசரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியஞ் செயல்விடாது
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலது சுடும்
ஆனாலு மேலவர்கண் மெத்தவுந் தனதென்
றடாதுசெய் யிற் கெடுதியாம்
யானைதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
யாதுசெய் தாற்கொன் றிடும்
தேனை இனிதென்று மீனுண் விரும்பினாற்
றேகபீ டைகளே தருஞ்
செகராசர் சனுவென்ன வேலாத காரியஞ்
செய்தான் மனம்பொ றார்காண்

வானாடு புகழுமொரு சோணாடு தழையவிவண்
வந்தவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (60)

(இ-ள்) தான் ஆசரித்துவருதெய்வம் இதுவென்று-தான் வழிபட்டுவருகிற தெய்வமிதுவென்று, பொய்சத்தியம் செயில் விடாது-பொய்சத்தியம் செய்தால் அதுவிடாது, தன்வீட்டில் ஏற்றிய விளக்கு என்று-தன் வீட்டிலேற்றிய தீபமென்று, முத்தம் கொடுத்தால்-முத்தந்தந்தால், அதுசுடும்-அத்தீபம் சுடும், ஆனாலும்-ஆயினும், மேலவர்கள்-மேலோர்கள், மெத்தவுந் தனது என்று-மிகவுந் தனதென்று, அடாதுசெய்யின்-அடாதகாரியத்தைச் செய்தால், கெடுதியாம்-கெடுதியுண்டாகும், ஆனைதான் மெத்த பழக்கம் ஆனாலும்-ஆனையானது மிகுபழக்கமானாலும், செய்யாது செய்தால்-செய்யாத காரியத்தைச் செய்தால், கொன்றிடும்-கொன்றுவிடும், தீனது-உணவானது, இனிதென்று-இனிதாயிருக்கிறதென்று மீதூண்விரும்பினால்-அதிக வுணவை விரும்பினால், தேகபீடைகளே தரும்-சரீரபீடைகளையுண்டாக்கும், ஜெகராசர் தனதென்ன-பூலோகத்தரசர் தனதாயிருக்கிறதென்று, எலாதகாரியம் செய்தால்-தகாதகாரியஞ் செய்தால், மனம்பொறார்-மனம் பொறுக்கமாட்டார்கள், வானாடுபுகழும்-சுவர்க்கலோகத்தாரால் புகழப்படுகிற, ஒரு சோணாடு தழைய-ஒப்பற்ற சோழநாடு தழையும்படி, இவண்-இவ்விடத்தில், வந்து

அவதரித்த முதலே-வந்து அவதாரஞ்செய்த முதல்வனே, மயி லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

ஆசரித்துவருதல்-வழிபட்டுவருதல். தனது என்று-வேண் டியவர்களென்று. சனுவென்ன-தனதென்று விடாது அழிக்கும்- அடாதுசெய்தல்-தகாதகாரியத்தைச் செய்தல். பீடை-துன்பம். (வியாதி.)

நடுவுநிலைமை.

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள்
வருமென்று நேச ரென்றும்
வன்பகைஞ ரென்றுமய லோரென்று மிக்கதன
வானென்று மேழை யென்றும்
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமோ
ரெள்ளள வுரைத்திடாம
லெண்ணமுட னெவிகித புத்தியொடு சாக்ஷிக்கு
மேற்கச்ச பாச மதயாம்
முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போன்
மொழிந்திடிற் றரும மதுகாண்
முனைவீம னுடல்பாதி மிருகந் தனக்கென்று
மூன்றருமர் சொன்ன தலைவா
மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தை வடிவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (61)

(இ-ள்.) (நியாயசபையில் நியாயாதிபதியாய்-வீற்றிருப்பவன்) வந்த விவகாரத்தில் (தன்னிடம்) வந்த விவகாரத்திலே இனிய பரிதானங்கள் வரும் என்றும்-விரும்பத்தக்க லஞ்சப் பொருள்கள் (வாதிப்பிரதிவாதிகளுள் ஒருசாராயுடமிருந்து தனக்குக்) கிடைக்குமென்றும், நேசர் என்றும் (அவர்களில் ஒருசாரார் தனக்குச்) சிநேகிதரென்றும், வல்பகைஞர் என்றும்-கொடிய பகைவரென்றும், அயலோர் என்றும்-(சிநேகிதரும்பகைவருமாகாது) நொதுமலராயிருப்பவரென்றும், மிக்க தனவான் என்றும்-மிகுந்த செல்வமுடையோரென்றும் ஏழை என்றும்-வறியவனென்றும், இந்த வகையை குறித்து-இவ்விதமான காரணங்களை உத்தேசித்து, ஒரு பக்ஷபாதம் ஓர் எள் அளவு உரைத்திடாமல் (ஒரு சாராரிடத்து) ஒரு சிறிதும் பக்ஷபாதமாகத் தீர்ப்புச் சொல்லாமல், எண்ணமுடனே (அவரவருடைய) மனத்தின் நினைப்புக்கும், லிகிதபுத்தியொடு-எழுத்துமூலமான ஆதாரங்களால் அறியப்படுகிற விஷயத்துக்கும், சாட்சிக்கும்-சாட்சிகள் சொன்ன வாக்குமூலத்துக்கும், ஏற்க-தகுதியாகவும், சபாசமதம் (தான் இருக்கிற) நியாயசபையில் உள்ளோர் எல்லோர்க்கும் சம்மதமாயிருக்கும்படியும், முந்த இருதலையும் சமன்செய்த கோல்போல்-முன்னே (தான் ஒருபக்கத்திலும் சாயாமல்) சமமாய் நடுநின்ற துலாக்கோல் (பின்பு தன்னிடம் வைக்கப்பட்ட பாரத்தை உள்ளபடி உணர்த்துதல்) போல, மொழிந்திடின்-(தான் சமமாய் நின்று) தீர்ப்புக்கூறினால், தர்மம் அதுகாண்-அதுவே தருமமாகும், முன்-முன்பு, தருமர் - தருமபுத்திரால் - முனிவீமன்

உடல்பாதி - வலிமையுடைய வீமசேனனது உடம்பில் ஒருபாதி மிருகந்தனக்கு என்று சொன்னது அலவோ-மிருகத்துக்கு உரிய தென்று சொல்லப்பட்டதன்றோ, அன்று-அக்காலத்தில், உம்மை உமாதேவி, மைந்தன் என-பிள்ளையாகக்கொண்டு, முலைபால்கொடுத்திட - (தனது) முலைப்பாலைக்கொடுக்க வளர்ந்தருள் - வளர்ந்தருளின குழந்தைவடிவமானவனே, மயிலேறி விளையாடு குகனேபுல்வயல்நீடு மலைமேவு குமரேசனே, எ-று.

பரிதானம்-வழக்கில் தன்பக்கம் தீர்ப்புப்பெற்றுக்கொள்ளுதற்குக் கைம்மாருகக்கொடுக்கும் பொருள். எள்ளளவு-இது, மிகச்சிறுமையைக் குறித்தற்கு எடுத்துக்காட்டப்படும் அளவு. வாதிப் பிரதிவாதிகளுடைய சொற்செயல்களைக் கொண்டேயன்றி, வியாச்சியமூலம் நிகழுங்காலத்தில் அவர்களுக்கு இருந்த எண்ணத்தையும் ஆராய்ந்தறிந்து அதற்கும் ஏற்ப முடிவுசெய்யவேண்டுமென்பது நீதி நூற்கொள்கையாதலால், "எண்ணமுடனே" என்றார் வழக்கில் உண்மை நிச்சயித்தற்கு வேண்டுவனவான அநுபவம், லிகிதம், சாக்ஷி என்ற மூன்றனுள் லிகிதாதாரமாகிய சீட்டுப்பத்திரங்களினுல் அறியப்படுகிற விஷயம், இங்கு "லிகித புத்தி" எனப்பட்டது உணி, "லிகிதபுத்தியொடு என்பதற்கு விவகாரங்களுக்காக எழுதப்பட்ட நீதி நூல்களில் தேர்ந்த அறிவோடுகூடியென்றும் பொருள்கொள்ளலாம், லிகிதம் எழுதப்பட்டது "அரசனுல் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி சில சபிகர்களுடன் இருந்து வழக்கைவிசாரித்து அவர்கள் கொள்கையையுந் தழுவி முடிவுசொல்லவேண்டும்" என்ற தருமசாஸ்திரக் கொள்கைபற்றி

"சபாசமந்தமா" என்றார். சபிகராவார்-நியாயாதிபதியுடன் சபையில் இருந்து வழக்காளிகளின் நியாய அநியாயங்களை அறிதற்காக நியமிக்கப்பட்டவர்கள். ஆகவே சபா என்பது சபிகர்க்கு இடவாகுபெயராம்.

புருஷமிருகமென்பது-முகத்தில் மனிதவடிவமும்உடம்பில் மிருகவடிவமும் கொண்டதொரு விலங்கு; இதுதான் உலாவும் இடங்களையெல்லாம் தன்மேற்பட்ட காற்றுவீசிய மாத்திரத்தால் பரிசுத்தமாக்குந் தெய்வத்தன் வாய்ந்தது தன்முன்னிலையில் எதிர்ப்பட்டவரைக் கொல்லாதுவிடாது தருமபுத்திரா அசுவமேதயாகஞ் செய்கின்றபொழுது லக்ஷக்கணக்கான பிராமணர்கள்போஜனஞ்செய்கிற இடங்களையெல்லாம் உடனுக்கு உடனே பரிசுத்தமாக்கவேண்டி புருஷமிருகத்தை யழைத்து வரும்பொருட்டுக் கண்ணபிரான் கட்டளைப்படி புறப்பட்ட வீமசேனன் வடதிசையில் நெடுந்தூரஞ் சென்று இமயமலையில் கதலிவனத்தில் அநுமானைக்கண்டு செய்தி கூறி "புருஷமிருகத்தை அத்தினபுரிக்கு நான் அழைத்துச்செல்லும் உபாயம் கூறியருளவேண்டும்" என்று வேண்டினான் அதற்கு அவ்வநுமான அது உன்னைக் கண்டளவில் கொல்லுதற்கு ஓடிவரும்; நீ அதன்முன்னே ஓடிச்செல்லவேண்டும்; அது உன்னை துரத்திக்கொண்டே வரும், அப்போது நீ அதன் கைக்கு அகப்படாது முற்பட்டு குறித்த இடஞ் சேர்வையாயின் அது உன்னைக் கொல்லுதல் தவறாது; நீ ஓடித் தப்பமுடியாதபடி எங்கெங்கு அது உன்னை நெருக்குகிறதோ, அங்கங்கு இந்த என்மயிர் ஒவ்வொன்றாய்க் கீழே எறிவாயாயின், அங்கு ஒரு சிவலிங்கமுண்டாம், அதனை யப்பிருகம்

தன்வழக்கப்படி பூசித்து வருவதற்குள் நீநெடுந்தூரஞ் செல்ல லாம், என்றுசொல்லி, தனது மயிர்களுள் ஏழுகொடுக்க, அவை பெற்ற வீமன் நிர்மநுஷ்யமான வனத்திற்சென்று அதனைக் கண்டு அதன்முன் நின்றளவில் புருஷமிருகம் துரத்திக்கொண்டு வர, வெகுவேகமாய்ஓடி அநுமான் சொன்னபடியெல்லாம்செய்து முன்வந்து அத்திருபுரி சேர்ந்த வீமன் யாகசாலையின் உள்ளே ஒருகாலைவைத்து நுழையுமளவில், வெளியே நின்றகாலைப் புருஷ மிருகம் பிடித்துக்கொள்ள வீமன் உரிய இடத்திற் சேர்ந்துவிட் டபின்பு என்னை நீபிடித்தல் தகுதியன்று, என்று வாதிக்கவே, அவ்விலங்கு உனது ஒருகால் வெளியே நின்றதனால், நான்பிடித் தல் தகுதியே எனக்கு நீ உரியவனாகின்றாய் என்று எதிர்வாதங் கூறியதனால் இருவரும் மாறுபட்டுத் தம்தம்வழக்கைத் தாங்கள் முன்புகொண்ட கோட்பாட்டுடனே தருமபுத்திரரிடத்தில் எடுத் துச்சொல்ல, தருமநெறி தவறாத அத்தருமராசர் சிறிதும் நீதி நெறிதப்பாமல் வீமனுடலிற்பாதி அம்மிருகத்திற்கு உரியதே என்று வரையறுத்துக்கூறினர், தனது தம்பியென்ற காரணத் தால் வீமனிடத்துச் சிறிதேனும் பக்ஷபாதமாகக்கூறாத அந் தத் தருமபுத்திரருடைய நடுவு நிலைமையைக்கண்ட அத்தெய்வ விலங்கு அதற்கு மிகவுஞ் சந்தோஷித்து அதற்கு ஈடாகவீம னுடம்பின் பகுதியை விட்டுவிட்டது என்பது இந்தக் குறித்த வரலாறு.

சரவணப் பொய்கையில் குமாரக்கடவுள் அவதரித்த ஆறு வடிவத்தோடு இருக்கையில் சிவபிரான் பார்வதிதேவியுடனே

சரவணத்தையடைய அங்குச் சிவபிரான் கட்டளைப்படி பார்வதா தேவி அம்மைந்தனது ஆறுவடிவங்களையும் ஒன்றுசேர்த்து எடுத்து ஒரு குழந்தையாக்கி உச்சிமோந்து மார்பில் அணைத்து முலைப்பாலூட்டி பாமன்கையிற் கொடுத்தனளென்பது ஈற்றடியிற் குறித்தகதை.

பக்ஷபாதம்.

ஓரவிவ காரமா வந்தவர் முகப்பார்த்
துரைப்போர் மலைக்கு ரங்கா
மூடியாவெள் ளெருக்குடன் மூளைத்துவிடு மவரில்லை
முயையுமூர் பாழ்கத் தமாம்
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகுஞ்
சமானமா வெழூபி றப்புஞ்
சந்ததியி லாதுழலவ ரவர்முகத் தினின்மூத்த
தையலே குடியி ருப்பாள்
பாரமிவ மென்றுபுவி மங்கையு நடுங்குவாள்
பழித்ததூர் மரண மாவார்
பகர்மூடிவி லேரவுர வாதிநர கத்தனு
பவப்பரெப் போது மென்பார்
வாரமுட னருணகிரி நாதருக் கனுபூதி
வைக்கெழுதி யருள்கு ருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (62)

(இ-ள்.) ஓரவிவகாரமாய் - ஓரவிவகாரமாக, வந்தவர்முகம்பார்த்து உரைப்போன் - வந்தவருடைய முகத்தைப் பார்த்துச் சொல்லுவோன், மலைக்குரங்கு ஆம் - மலைக்குரங் காவான்,

அவன் இல்லம் - அவன்வீட்டில், உடன்-உடனே, உயர் வெள்ளெருக்கு முளைத்துவிடும் - உயர்ந்த வெள்ளெருக்கஞ் செடிமுளைத்துவிடும், உறையும் ஊர் - அவன் வாழுமூரும், பாழ்நத்தம் ஆம் - பாழ்நத்தமாய்விடும், தாரணியில் - உலகத்தில், இவர்கள் கிளை - இவர்களுடைய சுற்றம். நெல்லியிலைபோல் உகும் - நெல்லியிலைபோ லுதிர்ந்துவிடும், சமானமா - சமானமாக, எழுபிறப்பும்- எழுபிறப்பிலும், சந்ததியில்லாது உழல்வார்-சந்ததியில்லாமல் அலைவார்கள், அவர் முகத்தினில்-அவருடைய முகத்தில், மூத்தவை தையலே குடியிருப்பாள் - மூதேவியே குடியிருப்பாள், இவர்பாரம் என்று-இவர்கள் நமக்குப்பளுவா யிருக்கிறார்களென்று, புவிமங்கையும் நடுங்குவாள் - பூமிதேவியும் நடுங்குவாள், பழித்த- உலகத்தாரால் பழிக்கப்பட்ட, துர்மரண மாவார் - துர்மரணத்தை யடைவார்கள், பகர்-சொல்லப்பட்ட, முடிவிலே - முடிவில், எப்போதும் - சதாகாலமும், ரவுரவாதி நரகத்து அனுபவிப்பர்- ரவுரவாதி நரகத்தில் வீழ்ந்து அத்துன்பத்தை யநுபவிப்பார்கள், என்பார்-என்று சொல்லுவர் (பெரியோர்) வாரமுடன்-அன்புடனே, அருணகிரிநாதருக்கு - அருணகிரிநாதருக்கு, அநுபூதி வைத்து எழுதியருள் - அநுபூதிவைத்து எழுதியருளின, குருபரா - குருபரனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

ஓரவிவகாரம் - பக்ஷபாதமான வழக்கு, சமானமா ஒரேநிகராக. சந்ததி-சந்தாநம். (பிள்ளை) ரவுரவம்-ஒருநரகம்.

ஒன்றிலாமையாற் சிறவாதவை.

கொங்கையில் லாதவட் கெத்தனைப் பணியுடைமை
    கூடினும் பெண்மை யில்லை
  கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
    கூறினும் புலமை யில்லை
சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
    தரிக்கினுங் கனதை யில்லை
  சட்சுவை பதார்த்தவகை யுற்றாலு நெய்யிலாச்
    சாதமுந் திருப்தி யில்லை
பங்கச மிலாமலெத் தனைமலர்கள் வாவியிற்
    பார்க்கினு மேன்மை யில்லை
  பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள்
    பண்ணினும் பூசை யில்லை
மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம்
    வரினுமில் வாழ்க்கை யில்லை
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரே சனே. (63)

(இ-ள்.) கொங்கை இல்லாதவட்கு - ஸ்தநங்க ளில்லாதவளுக்கு, எத்தனை பணியுடைமை கூடினும் - எத்தனை ஆபரணங்க ளிருந்தாலும், பெண்மையில்லை - பெண்தன்மை யில்லை. கூறும் - சொல்லப் பட்ட, நிறைகல்வி யில்லாமல் - நிறைந்த கல்வி யில்லாமல், எத்தனை கவிதை கூறினும் - எத்தனை கவிகள் சொன்னாலும், புலமையில்லை - பாண்டித்திய மில்லை. சங்

கையில்லாதவர்க்கு - சங்கையில்லாதவர்களுக்கு, எத்தனைவிவேகம் தரிக்கினும்-எத்தனையறிவு புகட்டினாலும், கனதையில்லை-மேன்மையில்லை, சட்சுவை பார்த்தவகை உற்றாலும் - அறுசுவை பதார்த்தவகை யிருந்தாலும், நெய்இல்லா - நெய்யில்லாத, சாதமும்-சோறும், திருப்தியில்லை - திருப்தி யடையவில்லை, பங்கயம் இல்லாமல்-தாமரையில்லாமல், வாவியில்-தடாகத்தில், எத்தனை மலர்கள் பூத்திருந்தாலும், மேன்மையில்லை - பெருமையில்லை, பத்தியில்லாமல்-பக்தியில்லாமல், வெகு நியமமாய் மிகுந்த நியமமாக, அர்ச்சனைகள் பண்ணினும் - அர்ச்சனைகள் செய்தாலும், பூசையில்லை - பூசையின் பயனில்லை, மங்கையர் இல்லாமனைக்கு-மாதரில்லாதவீட்டுக்கு, எத்தனை அருஞ்செல்வம் வரினும் - எத்தனை அருஞ்செல்வம்வரினும்-எத்தனை அருமையாகிய செல்வங்கள் வந்தாலும், இல்வாழ்க்கை இல்லை-இல்வாழ்க்கை யில்லையாகும், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே, எ-று.

கொங்கை-முலை. பணி-ஆபரணம். அறுசுவை - கைப்பு, புளிப்பு, துவர்ப்பு. இனிப்பு. கார்ப்பு. உப்பு. என்பன பதார்த்த வகை-கறிவகை. நியமம்-ஏற்பாடு.

அளவு படாதவை

வாரியா முத்தையும் புனலெறிய மலைகளையு
மானிடர்கள் சனத்தையும்
மன்னவர்க ளினைவையும் புருஷர்யோ கங்களையும்
வானிலுயர் நீளத்தையும்

பாரிலெழு மணலையும் பலபிரா ணிகளையும்
படியாண்ட மன்ன வரையும்
பருப்பதத் தின்னிறையு மீசுரச் செயலையும்
பனிமாரி பொழிது ளியையும்
சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையுஞ்
சித்தர்தம துள்ளத் தையுந்
தெரிவையர்கள் சிந்தையு மிவ்வள வெனும்படி
தெரிந்தள விடக்கூ டுமோ
வாரிச மடந்தைகுடி கொண்டநெடு மாலுக்கு
மருகனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (64)

(இ-ள்.) வாரி ஆழத்தையும் - கடலினது ஆழத்தையும், புனலெறியும் மலைகளையும்-நீரை வீசுகிற மலைகளையும், மானிடர்கள் சனனத்தையும் - மானிடர்களுடைய பிறவியையும், மன்னவர்கள் நினைவையும் - அரசருடைய நினைப்பையும் புருஷர் யோகங்களையும் - புருஷருடைய யோகங்களையும், வானின் உயர்நீளத்தையும்-ஆகாயத்தினது உயர்ந்த நீளத்தையும், பாரில்எழுமணலையும் பூமியிலுண்டான மணலையும், பலபிராணிகளையும்-பலசீவராசிகளையும், படியாண்ட மன்னவரையும்-பூமியையாண்ட அரசர்களையும், பருப்பதத்தின் நிறையும்-மலையினது எடையையும் - ஈசுரச்செயலையும் - ஈசுரச்செயலையும், பனிமாரிபொழி துளியையும் - குளிர்ந்தமழை பொழிகிற துளிகளையும், சீரிய தமிழ்புலவர்வா

க்கில் எழுகவியையும் - சிறந்த தமிழ்ப்புலவர்களுடைய வாக்கிலு ண்டாகிய கவிகளையும், சித்தர் தம்து உள்ளத்தையும்-சித்தர்களு டைய மனத்தையும், தெரிவையர்கள் சிந்தையையும்-மாதர்களு டையமனத்தையும், இவ்வளவு எனும்படி-இவ்வளவென்று சொ ல்லும்படி, தெரிந்து அளவிடக்கூடுமோ-தெரிந்து அளவுபடுத்த வொண்ணுமோ; வாரிசமடந்தை-திருமகள்; குடிகொண்டு-வாழ் தற்கிடமாயிருக்கிற, நெடுமாலுக்கு-திருமாலுக்கு, மருகனென- மருகனென்று சொல்லும்படி, வந்தமுருகா - அவதரித்த முருக க்கடவுளே 'மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

புனல்-நீருவி, நிரை-எடை வாரிசமடந்தை-தாமரை மல ரில் வாழ்கின்றபாது, தெரிவையர்கள் சிந்தை அளவிடப்படா மையாற் சிறந்ததென்பது தோன்ற இறுதியிற் கூறினர்

பிறர்மனைநயத்தல்.

தந்தார மன்றியே பாதார மேனினைவு
தன்னைவைத்த சாமு தாக்குத்
தனையில்லை நிசமில்லை வெட்கமில்லை சமரினிற்
றைரியஞ் சற்று மில்லை
அந்தார மில்லைதொடர் முறையில்லை நிலையில்லை
யறிவில்லை மரபு மில்லை
யறமில்லை நீதியில்லை பிறவினிற் றனிவழிக்
கச்சமோ மனதி லில்லை

நந்தாத சனமில்லை யினமில்லை யெவருக்கு
    நட்பில்லை கனதை யில்லை,
  நயமில்லை யிளமைதனில் வலிமையிலை முத்திபெறு
    ஞானமிலை யென்பர் கண்டாய்
மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
    மார்பனே யருளாளனே
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (65)

(இ-ள்.) தம்தாரம் அன்றியே - தமது மனைவியை யல்லாமலே, பரதாரம்மேல் நினைவுதனை வைத்த காமுகர்க்கு - பிறன்மனைவியின் மேல் விருப்பம்வைத்த காமுகருக்கு, தயையில்லை-கிருபையில்லை, நிசம்இல்லை-மெய்யில்லை, வெட்கம்இல்லை-நாணமில்லை, சமரினில்-போரில், தைரியம் சிறிதும் இல்லை-தைரியமென்பது சற்றுமில்லை, அம்தாரம்இல்லை - அழகிய தன்மனைவியில்லை, தொடர்முறையில்லை-தொடர்ந்தமுறையில்லை, நிலையில்லை - நிலைமையில்லை, அறிவு இல்லை-விவேகமில்லை, மரபும் இல்லை - மரபுமில்லை, அறம் இல்லை-தருமமில்லை, நிதியில்லை-பொருளில்லை, இரவினில் - இராக்காலத்தில், தனிவழிக்கு - தனியேசெல்லும்வழிக்கு, மனதில் அச்சம் இல்லை - மனதில்பயமில்லை, நந்தாசனம் இல்லை-கெடாத சனங்களில்லை, இனம் இல்லை-உறவில்லை, எவருக்கும் நட்பு இல்லை-ஒருவருக்கும் சிநேகமில்லை, கனதை இல்லை - மேன்மையில்லை, நயம் இல்லை-நன்மையில்லை, இளமைதனில் வலிமையில்லை - இளமைப் பருவத்திலேயே பலமில்லை, முத்திபெறும் - மோக்ஷமடைதற்

குறிய, ஞானம் இல்லை - ஞானமுமில்லை, என்பர் - என்றுசொல்லு வார் (பெரியோர்) மந்தாரபரிமளம்-மந்தாரமலரின் பரிமளத்தோடு, சுகந்தாதிபுனையும் - சுகந்தவர்க்கத்தையும் தரிக்கின்ற, மணிமார் பனை-அழகிய மார்பையுடையவனே, அருளாளனே - கிருபாளு வே, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரே சனே. எ-று.

தாரம்-மனைவி, காமுகர் - விடர். மரபு - சந்ததி. மந்தாரம்- தேவலோகத்துப் பஞ்சதருக்களி லொன்று. சுகந்தம் நறு நாற்றம்.

மானம்விடாமை.

கனபாரமேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்திடாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரனவிலை
கனசூர னமரின் முறியான்
தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சிவனள விற்கொடாது
நிரமான பெரியோர் சரீரங்கள் போகினுஞ்
செப்புமுறை தவறிடார்கள்
வனமேறு கவரிமா னுயிர்போகு மளவுந்தன்
மயிரினொன் றுங்கொடாது
வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறிநடவாள்
மனதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (66)

(இ-ள்.) கல்தூண் - கல்லினாலாகிய தூண், கனபாரம் எறின் - அதிகபாரம் தன்மேலேற்றப்பட்டால், பிளந்து இறுவது அன்றியே - பிளவுபட்டு ஒடிவதேயல்லாமல், வளைந்திடாது - வளையாது, கனசூரன் - மிக்க சூரனானவன், கருதலர்களால் உடைந்தாலும் - பகைவர்களால் தனக்கு அழிவு நேர்ந்தாலும், உயிர் அளவிலே - தனக்கு உயிருள்ளவரையிலும், அமரில்புரியான் - போர்செய்தலில் பின்னிடான், வேங்கை - வேங்கைப்புலியானது, தினம் ஓர் இடுக்கண்வந்து உற்றாலும் - நாள்தோறும் ஒருதுன்பம் (தனக்கு) வந்துநேர்ந்தாலும், சீவன் அளவில் - தனக்கு உயிரிருக்குமளவும், தோல்விகொடாது - தோற்றுப் பின்னிடாது, திரம் ஆன பெரியோர் - ஒழுக்கங்களில் உறுதியுள்ள பெரியோர்கள், சரீரங்கள் போகினும் - தங்களுடம்பு அழிவதானாலும், செப்பும் உரை தவறிடார்கள் - சொன்னசொல் தவறமாட்டார்கள், வனமருவு கவரிமான் - அழகுமிக்க கவரியென்னும் மானானது, உயிர்போகும் அளவும் - தனது உயிர்நீங்கும் வரையிலும், தன்மயிரில் ஒன்றும் கொடாது - தனது மயிரில் ஒன்றையும் (பிறர்க்குக்) கொடாது, கற்புஉடையமாது - பதிவிரதாதருமத்தையுடையபெண்ணானவள், வாராத ஆபத்துவருகினும் - வரவொண்ணாத தீங்குவந்தாலும், நிறைதவறி நடவாள் - அக்கற்புநிலைமைதப்பி நடக்கமாட்டாள், மனது ஆர - மனப்பூர்வகமாக, உனது அடைக்கலம் என்ற - உனது

அடைக்கலப் பொருளாவேன் யான் என்று கூறிச் சரணமடைந்த, கீரற்கு-நக்கீரனென்னும்புலவனுக்கு, வல்சிறைதவிர்த்த - கொடிய சிறையிருப்பை ஒழித்தருளிய, முருகா முருகக்கடவுளே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

"உற்றவிடத்தி னுயிர்வழங்குந்தன்மையோ, பற்றலரைக்கண்டால் பணிவரோ-கற்றூண், பிளந்திடுவதல்லால் பெரும்பாரந் தாங்கின், தளர்ந்து வளையுமோதான்." "மயிர்நீப்பின்வாழாக் கவரிமாவன்னார், உயிர்நீப்பர்மானம்வரின்" என்பன காண்க. கவரிமான் தனதுமயிர்த்திரளில் ஒருமயிர் நீங்கினும் உயிர்நீங்கும் இயல்பினது, கருதலர்-ஒருபொருளாக எண்ணாதவர், கற்பு-கணவனைத்தெய்வமென்றுகொண்டு அதற்கேற்ப ஒழுகும் ஒழுக்கம், இவ்வொழுக்கம் தாய்தந்தையராலும் கணவன் மாமன்-மாமிமுதலியோராலும் கற்பிக்கப்பட்டு நிலைபெறுவது.

திருவருட் சிறப்பு.

திருமகள் கடாக்ஷமுண் டானவர்க்குஞ்
சிறப்புண்டு கனதை யுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடுஞ்
சொல்லாத வார்த்தை சொல்லும்
பொருளொரு துரும்புமரி யாதையாஞ் செல்வமோ
புகல்பெருக் காறு போலாம்
புவியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேச மாவார்

பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம்
பெரும்ப்ர திஷ்டை யுண்டாம்
பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான்
பேச்சினிற் பிழைவ ராது
வருமென நினைத்தபொருள் கைகூடி வருமதிக
வல்லமைகண் மிகவு முண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (67)

(இ-ள்) திருமகள் கடாக்ஷம் உண்டானால்-திருமகளாது கடாக்ஷ முண்டானால், எவர்க்கும்-எல்லாருக்கும், சிறப்பு உண்டு மென்மையுண்டு, கனம் உண்டு - பெருமையுண்டு, சென்றவழியெல்லாம் - போனவழியெல்லாம், பெரும்பாதையாய்விடும் - பெரியவழியாகிவிடும், சொல்லாதவார்த்தை சொல்லும்-சொல்லாத சொல்லும், பொருள் - பொருளானது, ஒருதுரும்பு மரியாதையும் - ஒரு துரும்புக்கு நிகராகும், செல்வமே - பாக்கியமே, புகல்-சொல்லப்பட்ட, பெருக்காறுபோலும்-பெருக்காறுபோலாகும், புவியில்-பூமியில், முன்-முன்னே, கண்டுமதியாதபேர்-பார்த்து மதிக்காதபேர்கள், பழகினவர்போலவே நேசமாவார் - பழகினவர்போலவே நட்பாவார்கள், பெருமையொடு-பெருமையுடனே, சாதியில் உயர்ச்சி தரும் - சாதியில் உயர்வையுங்கொடுக்கும், அனுதினம்-நாள்தோறும், பெரும்ப்ரதிஷ்டை உண்டாம் - பெரும்பிரதிஷ்டையும் உண்டாகும், பகையாளிகூட-விரோதியுங்கூட, பிரிய

மொடு-அன்போடு; உறவுஆகுவான்-உறவினனாவான், பேச்சினில் பிழைவராது-சொல்லில் பிழையுண்டாகாது, வரும் எனநினைந்த பொருள்-வருமென்றெண்ணினபொருள், கைகூடிவரும் - கைகூடி வரும், அதிகவல்லமைகள் மிகவும் உண்டாம் - அதிகசமர்த்தும் மிகுதியாயுண்டாகும், மயிலேறி விளையாடுகுகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கடாட்சம்-அருள், பேச்சினில் பிழைவராது - சொல்லில் பிசகுநேரிடாது, கைகூடிவருதல்.

நட்பு நிலை.

கதிரவ னுதிப்பதெங் கேகமல மெங்கே
  களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே மயிற்றிரளை யெங்கே
  களித்தினட் பான தென்ன
மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுக
  மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன
வல்லிரவு விடிவதெங் கேகோழி யெங்கே
  மகிழ்ந்துகூ விடுத லென்ன
நிதியரச ரெங்கேயி ருந்தாலு மவர்களொடு
  நேசமொன் றுமிருக்கு
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந் தாலுமவர்
  நிறைநட்ப மறவார் களாம்
மதிலுடன் கோபுரமும் வானளவும் புடைசூழ
  மருவுசோ ணாட்ட திபனே

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (68)

(இ-ள்.) கதிரவன் உதிப்பது-சூரியன் தோன்றுவது, எங்கே-எவ்விடத்திலே, நளினம்-தாமரையிருப்பது, எங்கே-எவ்விடத்திலே, (ஒன்றுக்கு ஒன்று நெடுந்தூரமாயிருந்தும்) உளங்களித்து மலர்ந்தது என்ன-சூரியனைக் கண்டவுடனே தாமரை, மனம்மகிழ்ந்து மலர்ச்சிகொண்டது என்ன ஆச்சரியம், கார்மேகம்-கருநிறமுள்ளமேகம் இருப்பது, எங்கே-எவ்விடத்திலே, பசுந்தோகை-பசுநிறமுள்ள மயில் இருப்பது, எங்கே-எவ்விடத்திலே, (ஒன்றுக்கு ஒன்று நெடுந்தூரமா யிருந்தும்) கருத்தில் நட்பு ஆனது என்ன (மயில்மேகத்தினிடத்தில்) சிநேகங்கொண்டு அதனைக்கண்டவுடனே களித்துக்கூத்தாடுவது என்ன ஆச்சரியம், மதியம் எங்கே - சந்திரன் இருப்பது, எவ்விடத்திலே, முகமலர்ந்து மகிழ்கொண்டதென்ன (ஒன்றுக்கு ஒன்று நெடுந்தூரமாயிருந்தும்) (சந்திரனைக் கண்டவுடனே ஆம்பல) மகிழ்ச்சிகொண்டு முகமலர்வது என்ன ஆச்சரியம் வல் இரவு விடிந்தது எங்கே-பயங்கரமான இராப்பொழுது நீங்கிப்பகற்பொழுதுவருவது எவ்விடத்திலே, கோழி எங்கே-கோழியிருப்பது எவ்விடத்திலே, மகிழ்ந்துகூவிடுதல் என்ன (அப்படியிருந்தும் பொழுதுவிடிவது கண்டவளவிலே கோழிமகிழ்ச்சிகொண்டு கூப்பிடுவது என்ன ஆச்சரியம் அவை இயல்பாதல்போலவே) நீதி அரசர் எங்கே யிருந்தாலும் - செல்வமுள்ள அரசர்கள் எவ்விடத்திலே யிருந்தாலும், அவர்களோடு

நேசம் ஒன்றாய் இருக்கும் நீதிமிகு நல்லோர்கள் எங்கு இருந்தாலும் - அவ்வரசர்களுடனே நட்புப்பொருந்தியிருக்கிற நியாயத்தோடு மிக்கநற்குண முடையவர்கள் எவ்விடத்தி லிருந்தாலும், அவர் நிறைபட்சம் மறவார்கள்காண் - அவர்கள் ஒருத்தர்மேலொருத்தர் நிறைந்த அன்பை மறக்க மாட்டார்களன்றோ, மதிலுடன் - மதில்களும், கோபுரமும் - கோபுரங்களும், வாவியும் தடாகங்களும், புடைசூழ - பக்கங்களிலெல்லாஞ் சூழ்ந்திருக்க, மருவு - பொருந்திய, சோணாடு - சோழநாட்டுக்கு அதிபனே தலைவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயலீடு மலைமேவு குமரேசனே. எ-று.

வானத்தில் நெடுந்தூரத்திலுள்ள பொருள்களுக்கும் பூமியிலுள்ளபொருள்களுக்கும் ஒன்றுக்கொன்று சிநேககுணம்மிகுதல் போலவே உலகத்தில் எவ்வளவு தூரத்திலுள்ளார்க்கும் சிநேகம் மிகுதல் இயல்பென்பதாம். இரவுவிடிவது எங்கும் உள்ள தாயினும் அதற்குக்காரணமான சூரியனது தோற்றம் வானத்திலுள்ளதுபற்றி அதனைநெடுந் தூரத்ததுபோலக் கூறினர்.

கால மறிதல்.

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர் தாமுங்
கருதுசய காலமது கண்டந்த வேளையிற்
காரிய முடித்து விடுவார்
மேகமுங் கார்கால மதுகண்டு பயிர்விளைய
மேன்மேலு மாரி பொழியும்

மிக்கான வறிவுளோர் வருதருண காலத்தின்
மிடியாள ருக்குதவுவார்
நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென் றுவந்து கூவு
நல்லோர் குறித்ததைப் பதறுமலந்தந்த
காலையின் முடிப்பார் கண்டாய்
வாகனைய காலைகண மாலைபுல் லெனுமுலக
வாடிக்கை நிசமல் லவோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (69)

(இ-ள்.) காகம் - காகமானது பகல்காலம் - பகற்காலத்தில், கூகையை வென்றுவிடும் (அதுபோலவே) சனகமுடி பொன்முடியைத்தரித்த, அரசர்தாமும் - அரசரும், கருதுபகாலமதுகண்டு - நினைத்ததற்குரிய சமயகாலத்தைப்பார்த்து, அந்தவேளையில் - அந்தச் சமயத்தில், காரியம் முடித்துவிடுவார் - தமது காரியத்தை முடித்து விடுவார்கள், மேகமும் - மேகமும், கார்காலமதுகண்டு - கார்காலத்தைப் பார்த்து, பயிர்விளைய - பயிர்கள் விளையும்படி, மேன்மேலும் - மேலுமேலும், மாரிபொழியும் - மழையைப் பொழியும், மிக்கான அறிவுளோர் - மேலான அறிவுள்ளவர்கள், வருதருண காலத்தில் - வருகிற தருண காலத்தில், மிடியாளருக்கு உதவுவார் - தரித்திருக்கு உதவி செய்வார்கள், நாகரிகம் உறுகுயில் - நாகரிகம் பொருந்திய குயிலானது, வசந்த காலத்திலே - வசந்த ருதுவில், நலம் என்று வந்துகூவும்.

நன்மையென்று மகிழ்ந்து கூவாநிற்கும், நல்லோர் - நல்லவர்கள், குறித்ததை - தாம் நினைந்ததை, பதறாமல் - அவசரப்படாமல், அந்தந்த நாளையில் - அந்தந்தகாலத்தில், முடிப்பர் - முடிப்பார்கள், வாகு ஆனையகாலே கனமாலே புல்லெனும் - உலகவாடிக்கை- உலகவழக்கம், நிசமல்லவோ-உண்மையல்லவோ, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவு குமரேசனே, எ-று.

சயகாலம்-வெல்லுங்காலம் கார்காலம் - மழைகாலம்-தருவை காலம்-ஆபத்காலம் மிடியாளர்-வறியர், வசந்தகாலம்-கோடைகாலம் வாசனையகாலே கனமாலே புல்லெனும் என்பது உலகத்துப்பழமொழி.

இட எரிபால்.

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலநிதியி லோடு கப்பல்
தரையினி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை
தன்முன்னே கரிநிற்குமோ
விரைமலர் முடிப்பாமர் வேணிபா வினைவெல்ல
மிருகராஜ னாலாகுமோ
வெங்கான கத்திலுறு கரடிதனி லஞ்சாமல்
வேறொருவர் செல்லலாமோ
துரைகளைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத்
துஷ்டர்பகை யென்ன செய்யுந்
துணைகண்டு சேரிட மறிந்துசே ரென்றௌவை
சொன்னதை பொய்யல்லவே

வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்த தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (70)

(இ-ள்.) தரையதனில் ஓடுதேர்-பூமியின்மேலோடுகிற தேரானது, நீள்கடலில் ஓடுமோ-நீண்ட கடலிலே ஓடுமோ, சலதியிசை ஓடுகப்பல்-கடலின்மீதோடுகிற கப்பலானது, தரைமீதில் ஓடுமோ-பூமியின்மேலோடுமோ, தண்ணீரில் உறுமுதலை தன்முன்னே, கரிநிற்குமோ - யானையானது நிற்குமோ, விரைமலர்முடி-மணமுள்ள மலர்மாலைகளையணிந்த சடையையுடைய, பரமர்-பரமசிவனது, வேணி-சடையிலுள்ள, அரவினை வெல்ல-பாம்பைவெல்லுதற்கு, மிகுகருடனால் ஆகுமோ-மேலான கருடனால் ஆகுமோ, வேங்கைகள் இருக்கின்ற-புலிகள்வாழ்கின்ற, காடுதனில்-காட்டில், அஞ்சாமல்- பயப்படாமல், வெறொருவர் செல்லவசமோ - வேறொருவர்போகவசமாகுமோ, துரைகளை பெரியோரை - துரைகளையும் பெரியோரையும், அண்டி வாழ்வோர்தமை - அடுத்துவாழ்வோர்களை, துஷ்டர்பகை என்னசெய்யும்-துஷ்டர்களுடைய பகையானது என்னசெய்யும், துணைகண்டு- துணையாவாரையறிந்து, சேரிடமறிந்துசேர் என்று-சேரிடமறிந்துசேரென்று ஔவைசொன்ன கதை பொய்யல்லவே - ஔவையார்சொன்ன கதைபொய்யல்லவே, வரையூதுமாயனை-வேய்ங்குழலை யூதுகிற கண்ணனை, அடுத்தலால்-அடுத்ததனால், பஞ்சவர்கள்-பஞ்சபாண்டவர்கள், வன்போர் செயித்தது அன்றோ - வலியபாரதயுத்தத்தில் வென்றதல்லவா, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

சலதி-கடல். கரி-யானை. விரை-வாசனை. வேணி-சடை. வரை-மூங்கில். (புள்ளாங்குழல்.)

யாக்கை நிலையாமை.

மனுநன்மாந் தாதாமு னனவர்க ளெல்லாரு
மண்மே லிருந்து வாழ்ந்து
மடியா திருந்தபே ரில்லையவர் தேடியதை
வாரிவைத் தவரு மில்லை
பணியதனை நம்பியே போர்பூட்டு கதையெனப்
பாழான வுடலை நம்பிப்
பார்மீதி லின்னம்வெகு நாளிருப் போமென்று
பலகோடி நினைவை யெண்ணி
அனிதமாய் விருதாவின் மாய்வதே யல்லாம
லன்பாக நின் பதத்தை
யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணுர்க
ளாசைவலை யிற்சு ழலுவார்
வனிதையர்கள் காம விகாரமே பகையாகு
மற்றுமொரு பகைமை யுண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (71)

(இ-ள்) மனுநல்மாந்தாதா முன்னனவர்கள் எல்லாரும்-மனு நல்லமாந்தாதா முதலானவர்களெல்லாரும், மண்மேல் இருந்து வாழ்ந்து-பூமிமேலிருந்து வாழ்ந்து, மடியாதிருந்த பேர் இல்லை இறவாமலிருந்தவர்களில்லை, அவர்தேடியதை-அவர்தேடிவைத்த

பொருளோ, வாரிசைத் தவறும் இல்லை-வாரிக்குளித் துறைத் தவறு மில்லை, பணியத் தனை நம்பி-பணியை நம்பி, ஏர்பூட்டுகிறதையென-ஏர் பூட்டினதைப்போல, பாழான உடலை நம்பி-பாழாகிய வுடம்பை நம்பி, பார்மீதில்-பூமியின்மேல், இன்னம் வெகுநாள் இருப்போம் என்று-இன்னம் வெகுகால மிருப்போமென்று, பல்கோடி நினைவை எண்ணி-பலகோடி யெண்ணங்களை யெண்ணி, அநிதமாய்-அநியாயமாய், விருதாவில்-வீணாக, மாய்வதே அல்லாமல்-மடிவதேயன்றி, அன்பாக நின்பதத்தை-அன்போடு உன்திருவடியை அர்ச்சித்து-அர்ச்சனைபண்ணி, முத்திபெறல் வேண்டும் என்று எண்ணார்கள்-மோக்ஷமடையவேண்டுமென்று நினையார்கள், ஆசை வலையில் சுழலுவார்-ஆசையாகிய வலையிலகப்பட்டுழல்வார்கள், வனிதையர்கள்-மாதருடைய, காமவிகாரமே பகையாயிருக்கும், மற்றுமொரு பகையை உண்டோ-வேறுமொரு பகையுளதோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

மடிதல்-இறத்தல். நினைவு-எண்ணம். மாய்தல்-மடிதல் வனிதையர்-மாதர்.

வேட்டகத் திகழ்ச்சி.

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவின்
மேன்மேலு முபசரித்து
விருந்துகள் சமைத்துநெய் பாறயிர் பதார்த்தமொடு
வேண்டுவ வெலாமமைப்பார்

ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் ஐதலமிட்
டுறுதியாய் முழுகு விப்பார்
ஓயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
ருற்றநா ளாலா கிலோ
நாட்டமொரு படியிறங் குவதுபோன் மரியாதை
நாளுக்கு நாள்கு றைவுறும்
நகைசெய்வர் மைத்துனர்க ளறுவல்பார் போவென்று
நாளுமன் மாமி சொல்வாள்
வாட்டமினி யாளொரு துரும்பாய் மதிப்பளவள்
மட்டியினு மட்டி யன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (72)

(இ-ள்.) வேட்டகம்தன்னில்-கலியாண வீட்டில், மருகன் வந்திடில்-மருமகன்வந்திடு மளவிலே, மேன்மேலும் உபசரித்து-மேலும் மேலும் உபசாரம்பண்ணி, விருந்துகள் சமைத்து-விருந்து போசனங்கள் சமைத்து, நெய் பால் தயிர், பதார்த்தவகை-பதார்த்தவகைகள், வேண்டுவனவெல்லாம் அமைப்பார்-இன்னம் வேண்டுமென்ற வெல்லாம் அமைத்துவைப்பார்கள், ஊட்டம்மிகு-வலிவு மிகுதற்குரிய, வர்க்கவகை செய்திடுவர்-பலகாரவகைகள் செய்வார்கள், ஐதலமிட்டு-எண்ணெயிட்டு, உறுதியாய் முழுகுவிப்பார்-நன்றாக முழுக்காட்டுவார்கள், ஓயாது தின்ன-ஓயாமல் தின்னுதற்கு, பாக்கிலை கொடுத்திடுவர்-பாக்குவெற்றிலை கொடுப்பார்கள், உற்றநாள் நாலாகிலோ-பொருந்தியநாள் நாலானாலோ,

நாட்டம் ஒருபடி இறங்குவதுபோல்-அன்பு ஒருபடி யிறங்குதல் போல, மரியாதை-மரியாதையானது, நாளுக்குநாள் குறைவுறும்-நாளுக்குநாள் குறையும், மைத்துனர்கள் நகைசெய்வர்-மைத்துனர்கள் சிரிப்பார்கள், மாமி-மாமியாரும், நாணமல்-வெட்கமில்லாமல், அலுவல்பார்போமென்று சொல்லுவாள்-ஏதாகிலும் ஒரு வேலை பார்ப்போவென்று சொல்லுவாள், வாட்டம்மனையாள்-வாட்டத்தையுடைய மனைவியானவள், ஒரு துரும்பாய் மதிப்பாள்-ஒருதுரும்பா யெண்ணுவாள்-அவன் அப்படிப்பட்ட வெட்டகஞ் சேர்ந்தவன் மட்டியினும் மட்டி அன்றோ-மூடனிலுமூடனல்லவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு பலைமேவுகுமரேசனே.

வெட்டகம்-மாமியார். வர்க்கவகை-பலகாரவகை. பாக்கிலை-தாம்பூலம். அலுவல்-உத்தியோகம்.

செல்வ நிலையாமை.

ஓடமிகு மீட்டமது மணற்சுடுஞ் சுரமீடமு
மோடமிக வேநடக்கும்
முற்றதோ ராற்றின்மடு மேடாகு மேடெலா
முறுபுனல்கொண் மடுவாயிடும்
நாடுகா டாகுமுயர் காடுநா டாகிவிடு
நவில்சகடு மேல்கீழதாய்

நடையூறு சந்தைபல கூடுமுட னேகலையு
நன்னிலவி ருளாய் விடும்
நீடுபகல் போயபின் பிரவாகு மிரவுபோய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வு கண்டாய்
மாடுமனை பாரிசன மக்கணிதி பூஷணமு
மருவுகன வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (73)

(இ-ள்.) ஓடமிடும் இடமது - ஓடமோடுகிற இடமானது மணல்சுடும்-மணல் சுடுதற்குரிய இடமாகும், சுடும் இடமும்-சுடுகிற இடத்திலும், ஓடம்மிக நடக்கும்-ஓடமானது மிகவும் நடக்கும், உற்றது - பொருந்தியதாகிய, ஓர் ஆற்றின் மடு மேடாகும்-ஒரு யாற்றின் மடுவானது மேடாகும், மேடெலாம் - மேடுமுழுதும், உறுபுனல்கொள்ள - மிகுந்த நீரைக்கொண்ட, மடு ஆயிடும்-மடுவாய்விடும், நாடு காடு ஆகும் - நாடு காடாய்விடும், உயர்காடு நாடு ஆகிவிடும் - உயர்ந்தகாடு நாடாகிவிடும், நவில் - சொல்லப்பட்ட, சகடு - வண்டியுருளையானது, மேல்கீழது ஆம் - மேலது கீழதாகும், நடைஊறு சந்தைபலகூடும் - மனிதர் நடையாடுகிற பயிசந்தைகள்கூடும் உடனே கலையும் - உடனேகலைந்து போகும், நல்நிலவும்-நல்ல நிலாக்காலமும், இருள் ஆய்விடும் - இருட்கால

மாய்ந்திடும், நீடுபகல் போலவின்பு-நீண்ட பகற்காலம் கழிந்தபிறகு, இரவு ஆகும்-இராக்காலம்வரும், இரவுபோய் - இராக்காலம் போய், நிறை பகற்போது ஆய்விடும்-நிறைந்த பகற்காலமாய் விடும், நிதியோர் மிடித்திடுவர் - செல்வர் வறியராவர், மிடியோர் செழித்திடுவர் - வறியர் செழிப்பார்கள். (ஆகலால்) வாழ்வு-செல்வமானது, நிசம்அல்ல - மெய்யல்ல, மாமனை-சாருகின்ற, பாரி-மனைவி, சனம் - உறவினர், மக்கள் - புதல்வர்கள், நிதி - செல்வம், பூஷணமும் - ஆபரணமும், மருவு - பொருந்திய, கனவு ஆகும் அன்றோ-கனவாகுமல்லவா, மயிலேறி விளையாடி குகனேபுல் வயலீடு மலைமேவு குமரேசனே. எ-று.

ஓடம்-கப்பல், சகடு-சக்கரம், போது-பொழுது, நிதி-செல்வம், மிடி-வறுமை, பாரி-பாரியை (மனைவி)

பிறக்காற் பெறுபேறு.

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று
  தன்பேர் விளங்கவேண்டுஞ்
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ
  தரிக்கவே வேண்டுமல்லால்
இடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
  இசைமெச்ச வேண்டுமல்லால்
தேகியென் வருபவர்க் கில்லையென் னாமலே
  செய்யவே வேண்டுமல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்தையா
  ளாகவே வேண்டுமல்லா

அறிவான துரைமக்களாகவர வேண்டுமிவ
ரதிகபூ பாலரையா
வடகுவடு இடிகிடென வெகுண்டு மலையெறிய
மணியுரகன முடிகணெரிய
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
மலைமேவு குமரேசனே (74)

(இ-ள்.) உடம் ஒன்று எடுத்தால் - சரீரமொன்றை யெடுத்தால், புவிக்கு-பூமியில், நல்லதொன்று-நல்லதொன்று, நன்பேர் விளங்கவேண்டும் - நன்பேர் பிரகாசிக்கவேண்டும், சதிருடன் இது அல்லாது - சதுரதையோடு இதையல்லாமல் புத்திரனொருவனென்று பிறக்கவேண்டும், அல்லால் - அல்லாமல், திடம் இனிய உருசியின்றிருக்க, ரணசூரவீரன் - ரணசூர வீரனாவான், இவன் அன்ன - இவனையென்று, திசைமெச்ச வேண்டும் - திக்கிலுள்ளார் எல்லாரும் மெச்சிக்கொள்ளவேண்டும், அல்லால் - அல்லாமல், தேடியென வருபவர்க்கு - தேடியென்று வருவோருக்கு, இல்லையென்னாமல் - இல்லையென்று சொல்லாமல், செய்யவேண்டும் - உதவிசெய்யவேண்டும், அல்லால் - அல்லாமல், அடைவுடன் - முறைமையாக, பலகல்வி ஆராய்ந்து - பலவகைக் கல்விகளையும் ஆராய்ந்து, வித்துவான் ஆகவேண்டும் - வித்துவானாகவேண்டும், அல்லால் - அல்லாமல், அறிவான - விவேகமுள்ள, துரைமக்களாக வரவேண்டும் - துரைமக்களாகப் பிறக்கவேண்டும், இவர் - இவர்கள், அதிகம் - மேன்மையுள்ள, பூபாலர் - பூபாலராவர், ஐயா - ஐயனே, வடகுவடு மேருமலையானது, இடிகிடென - டிடிகிடென்ற தொனியும்,

எழுகடலும் அலையெறிய - சப்த சமுத்திரங்களும் அலைமோத வும், மணி - மாணிக்கமுள்ள, உரகன்-ஆதிசேடனது, முடிகண் நெரிய - தலைகள் நெரியவும், மயிலேறி விளையாடு குகனேபுல் வய லீடு மலைமேவு குமரேசனே, எ-று.

தேசியென-கொடுவென்று, பலகல்வி-பல நூல்கள்-துரைமக் கள் - சீமான்பிள்ளைகள், பூபாலர்-பூமியிலுள்ளோரைக் காப்பாற்று வோர், இவ்வுலகத்தில் மனிதனாகப் பிறந்தவன் நல்லவன் மெய் ஞ்ஞானி யென்பன முதலான பெயர்களுக் குரியனாதல் வேண்டு மென்பதாம்.

வேசை நிந்தை.

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற்
றேசி வன்போ லவே
சிநேகித்த வுமைையொரு பொழுதுகா ணுவிடிற்
செல்லுமு தன்ன மென்றே
கூடிச் சகிப்பரென் னுசையுன் மேலென்று
கூசாம லாணை யிடுவார்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ்
கொடுப்பார்சும் பனமு கப்பர்
வேடிக்கை பேசியே கைமுடல் பறித்தபின்
வேறுபட நிந்தை செய்து
விடவிடப் பேசுவார் தாய்கலக மூட்டியே
விட்டுத் துரத்தி விடுவார்

வாடிக்கை யாயிந்த வண்டப் பரத்தையர்
மயக்கத்தை நம்ப லாமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (75)

(இ-ள்.) பணக்காரர்-பணக்காரர்கள், தம்வீட்டில்-தம் வீட்டிற்கு, தேடிவந்திடில்-தேடிக்கொண்டு வந்துவிட்டால், தேகசிவன் போலவே-சரீரசரீரிகள்போலவே, சினேகித்த உம்மை - சினேகஞ்செய்த தங்களை, ஒருபொழுது காணாவிடின்-ஒருபொழுது காணாவிட்டால், அன்னம் செல்லுறாது என்று-சோறுசெல்லாது என்று சொல்லி, கூடி சுகிப்பார்-கூடியின்ப மடைவார்கள், என் ஆசை-என் விருப்பமுழுதும், உன்மேல் என்று - உன்மேலே யென்று, கூசாமல்-நாணாமல், ஆணையிடுவார்-ஆணையிடுவார்கள், கொங்கையை-தனங்களை, வெடிக்க-வெடிக்கும்படி, பிடிக்கக்கொடுத்து-பிடிக்கக்கொடுத்து, இதழ்கொடுப்பார்-இதழையுங்கொடுப்பார்கள், சும்பனம் உகப்பார் - (அந்தஇதழை அப்புருடர்) சும்பித்தலை விரும்புவார்கள், வேடிக்கைபேசி-வேடிக்கை வார்த்தைகள்பேசி, கைமுதல்பறித்தபின்-கைமுதலைப் பறித்துக்கொண்டபிறகு, வேறுபட நிந்தைசெய்து-வேறாகநிந்தித்து, விடவிட பேசுவார் - விடவிட பேசுவார்கள், தாய்கலகம்மூட்டிவிட்டு-தாய்கலகம் மூளச்செய்து, விட்டு துரத்தி விடுவார் - துரத்திவிடுவார்கள், வாடிக்கையாய்-வழக்கமாக, இந்தவண்டப் பரத்தையர் மயக்கத்தை - இந்த துஷ்டவேசையாது காமமயக்கத்தை, நம்பலாமோ - நம்பவொண்ணு

[illegible]மோ, (ஒன்றுந்து) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

தேகசீவன்போல - உடம்பு முயிரும்போல, சும்பாகட்-சுவைத்தல் (சப்புதல்.) கைமுதல் - கையிலுள்ள முதற்பொருள், விடவிடப்பேசுதல் - மானங்கெடப் பேசுதல், தாய்க்கலகம் - தாய்ச்சண்டை, விட்டுத்துரத்தல் - விட்டை விட்டுத்துரத்தல்.

இதற்கிது உறுதியெனல்.

கைக்குறுதி வெல்லின் மனைக்குறுதி மனையாள்
    கவிக்குறுதி பொருளடக்கம்
  கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
    கண்டிடிற் சத்யவசனம்
மெய்க்குறுதி மூன்பின் சபைக்குறுதி வித்வசனம்
    வேசையர்க் குறுதி தேடல்
  விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதிபூண்
    வீரருக் குறுதி தீரம்
செய்க்குறுதி நீருரும் பார்க்குறுதி செங்கோல்
    செழும்படைக் குறுதி வேழஞ்
  செல்வந் தனக்குறுதி பிள்ளைகண கர்க்குறுதி
    சேர்ந்திடுஞ் சர்ச்சனர்களாம்
மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைதசர
    மங்கைமரு வுந் தலைவனே
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (76)

(இ-ள்.) கைக்குஉறுதி - (ஒருவனது) கைக்கு உறுதியாவது, வேல்வில்-வேலும்வில்லுமாம், மனைக்குஉறுதி-வீட்டிற் குறுதியாவது, மனையாள்-மனையாளாவாள், கவிக்கு உறுதி-கவிக்குறுதியாவது, பொருள் அடக்கம்-பொருளடக்கமாம், கன்னியர் தமக்கு உறுதி-கன்னியர்களுக்கு உறுதியாவது, கற்புடைமை - கற்புடைமையாம், சொற்குஉறுதிகண்டிடின்-சொல்லுக்குறுதியாவது பார்க்குமிடத்தில், சத்தியவசனம்-உண்மைமொழியேயாம், மெய்க்குறுதி முன்பின்-சரீரத்துக்குறுதி தமையன்தம்பி என்பவராவர், சபைக்குஉறுதி-சபைக்கு உறுதியாவது, வித்வஜனம்-வித்துவசனங்களாவார், வேசையர்க்கு உறுதி - வேசையர்க்கு உறுதியாவது, தேடல்-பணந்தேடுதலேயாம், விரகருக்கு உறுதி-விரகருக்குறுதியாவது, பெண் - பெண்ணானவள், மூப்பினுக்கு உறுதி ஊண் - முதுமைப் பருவத்துக்கு உறுதியாவது உணவேயாம், வீரருக்கு உறுதி தீரம்-வீரருக்குஉறுதியாவது தைரியமாம், செய்க்குஉறுதி நீர்-வயலுக் குறுதியாவது நீரேயாம், அரும்பார்க்கு உறுதிசெங்கோல்-அரியவுலகத்துக்கு உறுதியாவது செங்கோலாம் செழுபடைக்கு உறுதி வேழம்-செழுமையாகிய படைக்கு உறுதியாவதியானையாம், செல்வந்தனுக்கு உறுதி பிள்ளைகள் - செல்வத்துக்குறுதி பிள்ளைகளேயாவர், நகர்க்குஉறுதி-நகரத்துக்குறுதியாவது, சேர்ந்திடும் சற்சனங்கள்ஆம்-கூடியிருக்கிற நன்மக்களே, மைக்கு உறுதியாகிய-அஞ்சனத்துக்குறுதியாகிய, விழி - கண்களையுடைய, குறமடந்தை - குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியும், சுரமங்

கை-தெய்வயானையும், மருவும்-சேர்கின்ற, தலைவனே-இறைவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

வறுமையிற் சிறுமை.

வறுமைதான் வந்திடிற் றாய்பழுது சொல்லுவாண்
 மனையாட்டி சற்று மெண்ணாள்
 வாக்கினிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
 வசனமாய் வந்து விளையும்
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
 சிந்தையிற் றைரியமில்லை
 செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாஞ்
 செல்வரைக் காணு ணாணும்
உறுதிபெறு வீரமுங் குறைறிடும் விருந்துவரி
 லுயிருடன் செத்த பிணமா
 முலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
 றொருவரொடு செய்தி சொன்னால்
மறுவசன முஞ்சொலார் துன்பினிற் றுன்பமிது
 வந்தணுகி டாதருள் வாய்
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (77)

(இ-ள்.) வறுமைதான்வந்திடில் - (ஒருவனுக்குத்) தரித்திரம் உண்டானால், தாய்பழுதுசொல்லுவாள் - அவனைப்பெற்ற தாயாரும் (அவன்மேல்) குற்றங்கூறுவாள், மனையாட்டி - மனைவியானவள் சற்றும் எண்ணாள் - (அவனைச்) சிறிதும்

மதிக்கமாட்டாள், வாக்கில்பிறக்கின்ற சொல் எலாம்-(அவனது) வாயினின்றுவருகிற சொற்களெல்லாம், பொல்லாத வசனம்ஆய் வந்துவிளையும் - தீங்கு விளைக்கிற சொற்களாய்த் தோன்றி அவ்வாறே பலிக்கும், (அவனுக்கு) சிறுமையொடு தொலையாவிசாரமே அல்லாது - எளிமையும் தீராக்கவலையுமே எப்பொழுதும் உண்டாவதல்லாமல், சிந்தையில் தைரியம்இல்லை-மனத்தில் தைரியமுண்டாவதில்லை, செய்ய சபைதனிலே சென்றுவா - நல்லசபையிலே போய்வருவதற்கு, வெட்கம்ஆம்-(அவனுக்கு) வெட்கமுண்டாகும், செல்வரைகாணில் - செல்வமுடையவர்களைக் கண்டால், நாணும் - (அவன்) நாணமடைவான், உறுதிபெறு வீரமும் குன்றிடும் - வலிமைபெற்ற பராக்கிரமமும் (அவனுக்குக்) குறைந்து போகும், விருந்துவரில்-(அவனிடத்துக்கு) விருந்தாளி வந்தால் உபசரிக்கப் பொருளில்லாமையால் அவன் உயிருடன் செத்தபிணம் ஆம்-உயிரோடிருக்கையிலேயே உயிர்நீங்கின வுடம்புபோலச் செயலழிந்துநிற்பான், உலகம் பழித்திடும் - (அவனை) உலகத்திலுள்ள சனங்களெல்லோரும் இகழ்ந்துபேசுவார்கள் (அவன்) பெருமையோர் முன்புசென்று செல்வத்திற் பெரியோர்களுடைய முன்னிலையிற்போய், ஒருவரொடு செய்திசொன்னால்(அவர்களில்) ஒருத்தருடனே ஒருசெய்தியைக் கூறினால், மறுவசனமுஞ்சொலார் - (அவனுக்குப்) பதிலுத்தரமுஞ் சொல்லமாட்டார்கள், துன்பினில் துன்பம் இதுவந்து அணுகிடாது-துன்பங்கள் எல்லாவற்றிலும் மிக்க துன்பத்தைத் தருவதான இவ்வறுமை (பார்க்கும்) வந்து சேராதபடி, அருளுவாய் - கருணைசெய்வாய்,

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

"கல்லானேயானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங்கெதிர்கொள்வர்-இல்லானை, இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லாதவன் வாயிற் சொல் என்றார் ஔவையாரும்? மனையாட்டி வீட்டிலிருந்து சம்சாரகாரியங்களை நிர்வகிப்பவள், ஆட்டி-ஆள்பவள்.

நீச்சார்பா னன்மையிழப்பு.

ஆனைதண் ணீரினிழல் பார்த்திடத் தவளைசென்
றங்கே கலக்கி யுலவு
மாயிரம்பேர்கூடி வீடுகட் டிடிலேது
மறைகுரா ளுமுடனே வரும்
ஞானற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவி
லீக்கிடந் திசைகே டதாம்
மின்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
இனியகோ னதுத டுக்கும்
சேனையுடன் னவரென்ன கருமகிய மிக்கினுஞ்
சிறியோர்க ளாற்குறை படுஞ்
சிங்கத்தை யும்பெரிய ருஷபத்தை யும்பகைமை
செய்ததொரு நரியல் லவோ
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி
மார்பனே யருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (78)

(இ-ள்.) ஆனை-யானையானது, தண்ணீரில்-நீரிலே, நிழல்பார்த்திட-தனது நிழலைப்பாராநிற்க, தவளை-தவளையானது, அங்கேசென்று-அவ்விடத்திற்போய், கலக்கி உலவும்-(அந்நீரை) கலக்கி உலாவுக்கொண்டிருக்கும், ஆயிரம்பேர்கூடி வீடுகட்டிடின்-ஆயிரம்பேர் சேர்ந்து வீடுகட்டினால், ஏதம் அறை-(அதற்கொரு) குற்றஞ்சொல்லுகிற, குறளும்-குறளனும், உடனேவரும் - உடனேவருவான், என்னநல் பெரியோர்கள்-மற்றைப் பெரியோர்கள், போசனம் செயுமளவில்-போசனம் செய்யுங்காலத்தில், ஈகிடந்து (அந்த) போசனத்தில் ஈவிழுந்து, இசைகெடுதூஉம்-(அவரது) பெருமைக்குக் கெடுதி விளைப்பதாகும், இன்பம் மிகுபசுவிலே-இன்பமிகுந்த பசுவினிடத்திலே, கன்றுசென்று உண்ணுதற்கு - கன்றுபோய் பாலுண்பதை, இனியகோன் அது தடுக்கும் - இனிய இடையன் அதைத்தடுப்பான், சேனை மன்னர்-சேனையையுடைய அரசர்கள், என்னகருமம் நியமிக்கினும் - என்னகாரியத்தை நியமித்தாலும், சிறியோர்களால் - சிறியவர்களால், குறைபடும் (அந்தக்காரியம்) குறைவுபடும், சிங்கத்தையும் பெரியருஷபத்தையும்-சிங்கத்தையும் பெரிய எருதையும், ஒரு நரியல்லவோ பகைமைசெய்தது-ஒருநரியல்லவா பகையுண்டாக்கினது, மானையும் மான்மகளாகிய வள்ளிநாயகியையும், திகழ்தெய்வயானையும் - விளங்குகிற தெய்வயானையையும், தழுவு-தழுவுகிற, மணிமார்பனே-அழகிய மார்பையுடையவனே, அருளாளனே-அருளுடையோனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. எ-று.

குறள்-கோட் சொல்லுவோன், இசைகேடு-வாந்திசெய்தல் முதலாயின.

இடையூறுற்றும் பயன்படாதவை.

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலு மூற்றுநீ
ரமுதபா னங்கொ டுக்கு
மாதவனை யொருபாதி கட்செவி மறைத்தாலு
மப்போது முதவி செய்வன்
கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினுங்
குவலயத் திருள்கெ டுக்குங்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு
குருவிக்கு மேய்ச்ச லுண்டு
வீறுடன் உதாரிதான் மிடியான போதினிலு
மிகநாடி வருப வர்க்கு
வேறுவங்க யில்லையென் றுரையாதி யன்றளவு
மியந்துள மகிழ்ந்து தவுவான்
மாறுபடு சூரசங் காரகம் பீரனே
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (79)

(இ-ள்.) ஆறுதண்ணீர் வற்றிவிட்டாலும் - ஆற்றினது தண்ணீர் வற்றிப்போனாலும், ஊற்றுநீர் - ஊற்றுநீரானது அமுதபானம் கொடுக்கும் - அமிர்தபானத்தை யுதவும், ஆதவனை -

சூரியனை, ஒருபாதி-ஒரு அரைப்பங்கு, கட்செவி மறைத்தாலும் பாம்பு மறைத்துவிட்டாலும், அப்போதும் - அப்பொழுதும், உதவிசெய்வன் - உலகத்திற் குதவிசெய்வான், கூறும்மதி-சொல்லப்பட்ட சந்திரன், தேய்பிறையதாகக் குறையினும்-தேய்பிறையாகக் குறைந்தாலும், குவலயத்து இருள் சிதைக்கும்-உலகத்திலுள்ள இருளைநீக்கும், கொல்லைசாவி போய்விட்டாலும்-கொல்லையானது சாவியாகப்போய்விட்டாலும், அங்குவருகுவிக்கு - அவ்விடத்து வருகின்றகுருவிகளுக்கு, மேய்ச்சல்உண்டு-இரையுண்டு, வீறுடன்-மேன்மையோடு, உதாரி-உதாரகுணமுள்ளவன், தான் மிடியான போதிலும் - தான்வறியனான காலத்தும், மிகநாடி வருபவர்க்கு - மிகவுந் தன்னைத் தேடிவருபவர்க்கு; வேறுவகை இல்லை என்று உரையாது - வேறுவழி யில்லையென்றுசொல்லாது இயன்றளவு-தன்னாலியன்றளவு, வியந்து - விரும்பி, உள்ளம்மகிழ்ந்து - மனமகிழ்ந்து, உதவுவான்-கொடுப்பான், மாறுபடு-மாறுபட்ட; சூரசங்கார - சூரனைச்சங்கரித்தவனே, கம்பீரனே - பெருமையுடையவனே, வடிவேல் அணிந்தமுருகா - வடிவேலைத்தரித்தமுருகக் கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

அமுதபானம்-குடிநீர் கட்செவி-பாம்பு (இராகுகேதுக்கள்;) குருவி-சிறுபறவைகள், உதாரி-கொடையாளி - மிடி-தரித்திரம். மாறுபடுதல்-பகைத்தல்.

இன்னவர்க்கிது வில்லையெனல்,

சார்விலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாப மேது

தனையிலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசை யுறவு
ஊரிலா தவர்தமக் கரசேது பசிவேளை
யுண்டார்க் குறுதி நிலையே
துண்மையில் லாவோர்க் கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வமேது
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
சுகமிலார்க் காசையேது
துர்க்குண மிலாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
துஷ்டர்க் கிரக்கமேது
மார்புருவ வாளிமே லஸ்திரம் விடுத்தநெடு
மான்மருக னை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ-ள்.) சார்ப்புஇல்லா தவர்க்கு-ஒரு ஆதாரமில்லா தவர்களுக்கு நிலைஏது - நில்மையேது, முதல் இல்லா தவருக்கு-முதற்பொரு ளில்லா தவர்களுக்கு, வேசை உறவுஏது - வேசையாநட்பேது, ஊர் இல்லா தவர் தமக்கு - ஊரில்லா தவர்களுக்கு, அரசு ஏது-அரசாட்சியேது, பசிவேளை உண்டார்க்கு - பசிப்பொழுதில் உண்ணு தவர்களுக்கு, உறுதிநிலையேது-திடமானநிலையேது, உண்மை இல்லா தவர்க்கு-மெய்ம்மை இல்லா தவர்களுக்கு, அறம்ஏது-தர் மமேது, முயல்வுஇல்லார்க்கு - முயற்சியில்லா தவர்களுக்கு, உறவ தொருசெல்வம் ஏது-உண்டாவதாகிய ஒருசெல்வமேது, சோர்வு

இல்லாதவருக்கு - மனத்தளர்ச்சி யில்லாதவர்க்கு, மற்றும் ஒரு பயம் ஏது - வேறும் ஒருபயமேது, சுகம்இல்லார்க்கு ஆசைஏது- சுகமற்றவர்களுக்கு ஆசையேது, துர்க்குணம் இல்லாதவர்க்கு- கெட்டகுண மில்லாதவர்களுக்கு, எதிராளி ஏது - பகையாளி யேது, இடர்செய் துஷ்டர்க்கு-(பிறர்க்கு) துன்பத்தைச்செய்கின்ற துஷ்டர்களுக்கு, இரக்கம் ஏது-தயையேது, மார்புஉருவ-மார்பில் உருவிப்போகும்படி, வாலிமேல்-வாலியின்மீது அஸ்திரம்விடுத்த அம்புஎய்த, நெடுமால் - திருமாலுக்கு, மருகன் ஆன - மருமகனாகிய, முருகா-முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

சார்பு-பற்றுக்கோடு, முதல்-முதற்பொருள், அரசு-அரசாட்சி சோர்வு-தளர்வு வாலி-ஒருவானர சிரேஷ்டன்.

இதுவுமது நன்றெனல்

பஞ்சரித் தருமையறி யார்பொருளை யெய்தலிற்
பலர்மனைப் பிச்சை நன்று
பரிவாக வுபசார மில்லா விருந்தினிற்
பட்டினி யிருக்கை நன்று
தஞ்சமொரு முயலையடு வென்றிதனில் யானையொடு
சமர்செய்து தோற்ற னன்று
சாரகுண மில்லாத பெண்களைச் சேர்தலிற்
சன்னியா சித்த னன்று

அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி
லரவினொடு பழகு வதுநன்
றந்தணர்க் காபத்தி லுதவா திருப்பதனி
லாருயிர் விடுத்த னன்று
வஞ்சக ருடன்கூடி வாழ்தலிற் றனியே
வருந்திடுஞ் சிறுமை நன்று
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (81)

(இ-ள்.) பஞ்சரித்து-கெஞ்சி, அருமை அறியார்பொருளை-தமது அருமையை யறியாதவருடைய பொருளை, எய்தலினும், மலர்மனை - பலபேர் வீட்டிற்சென்று ஏற்கிற, பிச்சை-பிச்சையே நன்று - நன்மையாம், பரிவாக-அன்பாக, உபசாரம் இல்லாவிருந்தினில் - உபசாரமில்லாத விருந்துண்பதைப் பார்க்கிலும், பட்டினியிருக்கை நன்று - பட்டினியாயிருத்தலே நன்மையாகும், தஞ்சம் ஒருமுயலை அடுவென்றிதனில் - பற்றுள்ள ஒருமுயலைக் கொன்ற வெற்றியைப்பார்க்கிலும், யானையொடு - யானையுடனே, சமர்செய்து தோற்றல் - போர்செய்து தோற்குதலே, நன்று-நன்மையாகும், சரசகுணம் இல்லாதபெண்களைச் சேர்தலின் - சரசகுணமில்லாத பெண்களைச் சேர்தலைப்பார்க்கிலும், சந்நியாசித்தல் துறவடைதலே, நன்றுநன்மையாம், அஞ்சலார் தங்களொடு-பகைவருடனே, நட்பா யிருப்பதனின் - சிநேகமா யிருப்பதைப் பார்க்கிலும், அரவினொடு பழகுவது - பாம்போடு பழகுவது, நன்று - நன்மையாம், அந்தணர்க்கு - வேதியர்க்கு,

ஆபத்தில்-ஆபத்காலத்தில், உதவாதிருப்பதனின்-உதவிசெய்யா திருப்பதைப்பார்க்கிலும், ஆர் உயர்விடுத்தல் - அரியவுயிரைவிடு வதே, நன்று-நன்மையாம், வஞ்சகருடன் கூடிவாழ்தலின்-வஞ்சக ரோடுசேர்ந்து வாழ்வதைப்பார்க்கிலும், தனியே - தனியாகவே யிருந்து, வருந்திடும் சிறுமை - வருந்துகிற சிறுமையே, நன்று- நன்மையாம், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

பஞ்சரித்தல்-கெஞ்சுதல், பட்டினியிருக்கை-உண்ணாதிருத் தல். சரசகுணம் நயகுணம்.

நிலையாதவை.

கொற்றவர்கள் ராணுவமு மாறுநேராகி
குளங்களும் காசி யுறவுங்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங்
குலவுநீர் விளையாடலும்
பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
பழையதா யாதி நிணறும்
ப்ரதார மாதாது போகமும் பெருகிவரு
பாங்கான வாற்று வரவும்
நற்றுமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவு
நல்லமத யானை நட்பும்
நாவிநல் லுறவுமொரு நாள்போ விராதிவைக
ணம்பப் படாது கண்டாய்

மற்றுமொரு துணையில்லை நீதுணை யெனப்பாவும்
வானவர்கள் சிறைமீட்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (83)

(இ-ள்.) கொற்றவர்கள் ராணுவமும் - அரசாது படைகளும், ஆறுநேராகிய குளங்களும்- ஆற்றுக்கெதிராகிய குளங்களும், தாசி யுறவும்-வேசையின் உறவும், குணம் இல்லாநேசமும் - குணமில்லாதவர்களுடைய நட்பும், பாம்பொடுபழக்கமும் - பாம்புடனே பழகுதலும், குலவுநீர் விளையாடலும்-பெருகியநீரில் விளையாடுதலும், பற்றலார் தமஇடைவருந்து விசுவாசமும்-பகைவர் தம்மிடத்தில் வருந்துகிற விசுவாசமும்-பழையதாயாதியின் அன்பும்,- பரதாரம்-பிறன்மனைவியாகிய, மாதாதுபோகமும் - பெண்களுடைய போகமும், பெருகிவருகிற, மாங்கான-அழகான, ஆற்றுவரவும்-ஆற்றுப்பெருக்கும், நற்றும்-பற்றுகிற, ஒருதுர்ப்புத்திகேட்கின்றபேர் உறவும்-ஒரு கெட்டபுத்தியைக் கேட்கிறவர்களுடைய உறவும், கல்லமதயானைநட்பும் - கல்லமதயானையின் சிநேகமும், நாவில் உறவும் - நாவியின்நல்ல சிநேகமும் (ஆகிய) இவைகள்-இவையாவும், ஒருநாள்போலிரா - ஒருநாள்போலிருக்கமாட்டா, (ஆதலால்) நம்பப்படாது-நம்பவொண்ணாது மற்றும் ஒருதுணையில்லை, நீதுணையென-நீயே துணையென்று, பாவும் - தோத்திரம்

பண்ணின, வானவர்கள் தேவர்களுடைய, சிறைமீட்டவா - சிறை விடுவித்தவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே.

குணமிலார் - நற்குண மில்லாதவர், நிணறு - அன்பு. நாவி-கஸ்தூரிமிருகம்.

நற்புலவர் தீப்புலவர்செயல்.

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
 விருப்பமொடு தேடி நாடும்
மிடைகருங் காகங்க ளெச்சனி யிருந்தாலும்
 வேப்பங் கனிக்கு நாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினி
 லிருக்கின்ற தேனை நாடு
மெத்தனை சுகந்தமுறை யுற்றாலு முருள்வண்
 டினந்தார் மலத்தை நாடும்
தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
 தாம்பார்த் துகந்து கொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
 தமிழிலா ராய்வர் கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவர்
 வள்ளியுந் தழுவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (83)

(இ-ள்.) மிக்கானசோலையில்-மேலானசோலையில், குயில்சென்று குயில்போய், மாங்கனி - மாம்பழத்தை, விருப்பமொடு தேடி

நாடும்-விருப்பத்துடன் தேடியாராயும், மிடை-நெருங்கின; கரு காகங்கள் - கரிய காக்கைகள், எக்கனியிருந்தாலும் - எந்தப்பழ மிருந்தாலும், வேப்பங்கனிக்குநாடும்-வேப்பம்பழத்தையேதேடும் எக்காலும்வரிவண்டு - எந்தக்காலத்திலும் வரிவண்டுகள், பங் கேருகத்தினில் இருக்கின்றதாமரைப்பூவிலிருக்கிற, தேனைநாடும்-தேனையேதேடும், எத்தனை சுகந்தவகை உற்றாலும்-எத்தனைசுகந் தவர்க்கங்க ளிருந்தாலும், உருள்வண்டு இனம்-உருள்வண்டின் கூட்டம், துர்மலத்தைநாடும் - கெட்டமலத்தையேதேடும், தக் கோர்-பெரியோர்; பொருள்களின், சுவைநயங்கள் எங்கேயென்று-சுவைநயங்க ளெங்கேயென்று, தாம்பார்த்து-தாம் கண்டறிந்து, உகந்துகொள்வார்-சந்தோஷித்துக்கொள்வார்கள், தாழ்வானவன்கண்ணர்-இழிவாகிய வன்கண்ணர்கள், குற்றம்எங்கேயென-குற்ற மெங்கே யிருக்கிறதென்று, தமிழில் ஆராய்வர் - தமிழ்ப்பாடல் களில் ஆராய்வார்கள், மைக்காவி-கருங்குவளைமலர்போன்ற, விழி-கண்களையுடைய, மாது-பெண்ணாகிய தெய்வானையும் - தெய்வயா னையும், குறவர் பெண்ணாகிய வள்ளிநாயகியும், தழுவு-தழுவுதற் குரிய, தலைவா-தலைவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வய லீடு மலைமேவு குமரேசனே, எ-று.

மிடைதல் - நெருங்குதல் வரிவண்டு-இராகம்பாடும்வண்டு, சுகந்தம்-நல்லமணம் வன்கண்ணர்-மூர்க்கர்.

தாழ்தற் பெருமை

வெங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதல்
விரிசிலை குனிந்திடுதலும்

மேடம தகன்றிடலும் யானைக ளொடுங்குதலும்
வெள்விடைக டுள்ளி விழலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ணயந்து கொளலும்
முதிர்படை யொதுங்குதலும் வினைஞர்க ளடங்குதலு
மாயர்குழல் சூடு படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதகுறு விளைப்பு வருமோ
மாங்கனிக் காவானை வலமது புரிந்தவளர்
மதகரிக் கிளைய முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (84)

(இ-ள்.) (ஒவ்வொரு சமயத்தில்) வேங்கைகள் பதுங்குதலும் - புலிகள் பதுங்கியிருத்தலும், மாமுகில் ஒதுங்குதலும் - பெரிய மேகங்கள் விலகிச் செல்லுதலும், விரிசிலை குனிந்திடுதலும் - பெரியவிற்கள் வளைந்திடுதலும், மேடம் அது அகன்றிடலும் - ஆடுகள்விலகிப் பின்னேசெல்லுதலும், யானிகள் ஒடுங்குதலும் - யானைகள் அடங்கியிருத்தலும், வெள்விடைகள் துள்ளி விழலும் - வெண்மையான எருதுகள் துள்ளி விழுந்திடுதலும், மூங்கில்கள் வளைதலும், மேலவர் இணங்குதலும் (வல்லமையி லுற்) பெரியோர் அதிற் சிறியரோடு சந்தியாதற்கு இசைதலும், முனிவர்கள் நயந்துகொளலும் - (கோபங்கொண்டு சபிக்கத் திற

முள்ள) முனிவர்கள் (அங்ஙனஞ் செய்யாது) அன்புகொண்டு
நடத்தலும், முதிர்படை ஒதுங்குதலும் - வலிமை மிக்க சேனை
கள் பின்வாங்குதலும், வினைஞர்கள் அடங்குதலும் - தொழில்
திறமுள்ளவர்கள் அடங்கியிருத்தலும், மூதவிஞர் பயந்திடுத
லும் - தலைமை பெற்றவர் (தமக்குக் கீழ்ப்பட்டவர்க்கு) அஞ்சுத
லும், ஆம் காவு சாய்குதலும் - பெரிய முதலைகள் தலைசாய்ந்திருத்த
லும், மகிழமலர் உலர்ந்திடலும் - மகிழம்பூ உலர்தலும், ஆயர்
குழல் கூடுபடலும் - இடையர்வாயில் வைத்து ஊதும் வேய்ங்
குழல் அனற்கூடு கொள்ளுதலும், (ஆகிய) இவை - இவைகள்,
காரியங்களுக்கு அல்லாமல் பின்பு ஒரு பெருங்காரியத்தைக் குறி
த்தேயல்லாமல், அம்புவியில் - அழகிய பூமியில், அதனால் - இங்ங
னம் மெலிதலால் இளைப்புவருமோ - (அவற்றிற்கு) ஒருமை உண்
டாகுமோ (உண்டாகாது என்றபடி,) மாங்கனிக்கு ஆ - மாம் பழ
த்தைப் பெறும்பொருட்டாக, அரனை - சிவபிரானை, வலம் அது
புரிந்து - பிரதக்ஷணஞ்செய்து, வளர் - வளர்ந்த, மதகரிக்கு - மதம்
பிடித்த யானையின் வடிவங்கொண்ட விநாயக மூர்த்திக்கு,
இளைய - தம்பியான, முருகா - முருகக்கடவுளே, மயிலேறி விளை
யாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

புலிபதுங்குதல் - உடனே பாய்தற்கு, முகில் ஒதுங்குதல்,
மழை பெய்தற்கு, வில்வளைதல் - உடனே பாய்ந்து சேர்தற்கு,
யானை ஒடுங்குதல் - சமயமறிந்து கொல்லுதற்கு, எருது துள்ளி
விழுதல் - பின்பு எழுந்து ஊக்கங்கொண்டு தொழில் செய்தற்கு

மூங்கில் வளைதல் - பல்லக்குக் கணைமுதலியனவாகப் பயன்படு தற்கு, மேலோர் கீழோரோடு சந்திக்கு இசைதல் - பின்பு சமயத்தில் அவரை வெல்லுதற்கும், தற்காலத்தில் பெருமை பெறுதற்கும் முனிவர்கள் நயந்துகொள்ளுதல் - தலைவலிமை குன்றாமல் பெருமை யடைதற்கு வலிமை மிக்க சேனைபின்னிடுதல் - சமயமறிந்து முன்னிட்டு பகைவெல்லுதற்கு தொழில் திறமுடையோர் அடங்குதல்-தங்கள் திறத்தை தொழிலிற்காட்டி மேன்மைபெறுதற்கு, தலைவர்கள் கீழ்ப்பட்டவர்க்கு அஞ்சினாற்போல்-காட்டுதல்-அவர்களை யாராய்தற்கு, முதலை தலைசாய்ந்திருத்தல் - தனக்கு இரையாகும் பிராணியை தவறாது பற்றுதற்கு மகிழம்பூ உலர்தல்-மிகு மணந்தருதற்கு, வேய்ங்குழல் சுடுபடுதல் இன்னிசைதருதற்கு, ஆங்கு அரவு எனப் பிரித்து ஆங்கு என்பதை அசையாகக் கொண்டு அரவுசாய்தல் என்பதற்கு-பாம்பு தலைசாய்தல் என்றும் பொருள்கொள்ளலாம் பாம்பு தலைசாய்தல் - பின்பு படமெடுத்துக் கடித்தற்கு ஒருகாலத்தில் சிவபிரான் நாரதமுனிவரால் கொணர்ந்து கொடுக்கப்பட்ட திவ்யமான ஒரு மாம்பழத்தைக் கையில் வைத்துக்கொண் டிருக்கும்பொழுது, அதுகண்ட விநாயகரும் சுப்பிரமணியரும் அக்கனியைத் தாம் தாம் பெற வேண்டும் என்னுங் கருத்தினராய் எனக்கு அதுகொடுக்க என்று ஒருங்குவேண்ட, சிவபிரான் விளையாட்டாக அக்குமாரர் இருவரையும் நோக்கி உங்களில் உலகத்தை வலஞ்செய்து முந்திவருபவனுக்கு இதுகொடுப்பேன் என்று கூறியவளவிலே, முருகக்கடவுள் வெகு விரைவாக மயில் வாகனத்தின்மீது ஏறிப் பூமிப்

பிரதக்ஷணஞ் செய்தற்குச்செல்ல, அவர் வருமுன்னமே, விநாயகர் தந்திரமாக, பிரபஞ்ச சொரூபியாயிருக்கிற அச்சிவபிரானையே ஒருமுறை வலம்வந்து நான் லோகப்பிரதக்ஷணஞ் செய்து முதலில் வந்துவிட்டேன் என்றுகூறி மெய்ப்பித்து அக்கனியைப் பெற்றுக் களித்தனர் என்பது வரலாறு இப்பழம், நாரதமுனிவர் பிரமதேவனை இசைபாடிக் களிப்பித்து அத்தேவனிடத்தினின்று வெகுமதியாகப் பெற்றது, மாதுளம்பழமென்று சில நூல்கள் கூறும்.

தெய்வச்செயல்.

சோடாய் மரத்திற் புறாவொன் றிருந்திடத்
துறவுகண் டேவே டுவன்
றோலாம லவையெய்ய வேண்டுமென் றொருகணை
தொடுத்துவில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே பெழும்பிடி லடிப்பதற்
குலவுரா சாளி கூட
வுயரப் பறந்துகொண் டேதிரிய வப்போ
துறைத்தசிலை வேட னடியில்
சேடாக வல்விடந் தீண்டவே யவன்விழச்
சிலையிற் றொடுத்த வாளி
சென்றிரா சாளியெய் தைத்துவிழ வவ்விரு
சிறைப்புறா வாழ்ந்த வன்றோ
வாடாம லிவையெலாஞ் சிவன் செயல்க ளல்லாதுன்
மனச்செயலி னாலும் வருமோ

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (85)

(இ-ள்.) சோடாய்-இணையாகிய, மரத்தில்-ஒருமரத்திலே, புறாரெண்டு இருந்திட-இரண்டு புறாக்களிருக்க, வேடுவன்துறவுகண்டு ஒருவேடன் அவற்றின் உளவைக்கண்டு, அவை அவற்றை, தோராமல்-தவறாமல், எய்யவேண்டுமென்று - அம்பு எய்யவேண்டுமென்று, ஒருகணைதொடுத்து - ஒரு அம்புதொடுத்து, வில்வாங்கி நிற்க-வில்வளைத்துக்கொண்டு நிற்க ஊடாடிமேலே யெழும்பிடில்-ஊடாடிமேலே பறக்குமானால், அடிப்பதற்கு- அடித்துக்கொண்டு போவதற்கு, உலவு - உலாவுகின்ற, ராஜாளிகூட-ராஜாளியுங்கூட உயரபறந்துகொண்டே திரிய - மேலே பறந்துகொண்டே திரிய அப்போது-அந்தச் சமயத்தில், உதைத்த சிலைவேடன் அடியில்-வில்லையுதைத்த உந்தின வேடனதுகாலில், சேடுஆக-மிகுதியாக வல்விடம் தீண்டவே-வலியவிஷந்தீண்ட, அவன்விழ-அந்தவேடன் (பூமியில்) வீழ்ந்துவிட, சிலையிலதொடுத்தவாளி - வில்லிற்றொடுத்த அம்பு, சென்று இராசாளிமெய்யைத்தைத்துவிழ-போய்இராசாளியினுடைய உடம்பில்தைத்து அது கீழேவிழ, அ - அந்த, சிறை இருபுறா-சிறைகளையுடைய இரண்டு புறாக்களும், வாழ்ந்த அன்றோ - வாழ்ந்தனவல்லவோ, வாடாமல் - சோராமல், இவை எலாம்-இவைகள்யாவும், சிவனசெயல்கள அல்லாது - சிவனசெய்கைகள் அல்லாமல், மனச்செயலினாலும் வருமோ - ஒருவனது மனோசங்கல்பத்தாலும் உண்டாகுமோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே எ-று.

ஜோடு-ஜதை கணை-அம்பு, வில்வாங்கல்-வில்வளைத்தல் ராசாளி - பறவைப்புள், விடந்தீண்டுதல்-பாம்புகடித்தல் சிலைவில், வாளி-அம்பு

பாட ஷியல்பு.

எழுத்தசைகள் சீர்தளைக ளடிதொடைகள் சிதை
 திருக்கவே வேண்டு மப்பால்
வீறைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
 பினியசொற் கமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
 ளடக்கமு மிருக்க வேண்டும்
மன்பான பாவின மிசைந்துவரல் வேண்டுமு
 லலங்கார முற்ற துறையில்
பழுத்துள முவந்தோதாசை யுற்றுவரல் வேண்டும்
 படிக்குமிசை கூடல் வேண்டும்
பங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
 பாடிச் சிறப்பென் பர்காண்
மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தகங்காளனருள்
 மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே. (86)

(இ-ள்.) எழுத்து - எழுத்துக்கள், அடிதொடைகள் - அடிதொடைகள், (யாவும்) சிதையாதிருக்கவே வேண்டும் - கெடாமல் இருக்கவேண்டும், அப்பால் - அதற்குமேல், ஈரைம்

பொருத்தம் ஒடு-பத்துப் பொருத்தத்துடன், மதுரமாய் - இனிமையாய், பளபளப்பு-பளபளப்பும், இனியசொற்கு-இனியசொற்களுக்கு அமையவேண்டும் - அமைந்திருக்கவேண்டும் அழுத்தமிகு - அழுத்தமிகுந்த, குறளினுக்கு ஒப்பாகவே - குறட்செய்யுட்கு நிகராகவே, பொருள் அடக்கமும இருக்கவேண்டும்-பொருள் அடக்கமும் இருக்கவேண்டும், அணபான - அன்போடு கூடின, பாஇனம் இசைந்துவரல்வேண்டும் - பாவும் பாவினமும் பொருந்தி வரல்வேண்டும், முன-முன்னே, அலங்காரம் உற்றதுறையில் - அலங்காரம் பொருந்தியவழியில், பழுத்து - முதிர்ந்து, உள்ளம் உவந்து - மனமகிழ்ந்து ஓசை உற்றுவரல்வேண்டும் - நல்லோசையும் பொருந்திவரல்வேண்டும், படிக்கும் இசைகூடல்வேண்டும் - படித்தற்குரிய இய இராகமும் பொருந்திட இவைகள் அமையும்படி, சொல்-சொல்லப்பட்ட கவிதைபாடின்-கவிபாடினால், சிறப்பு என்பார் - சிறப்பென்று சொல்லுவர் (பெரியோர்) தினம்-நாள்தோறும், செங்கைதனில்-செவந்தகையினில், மழுவைத்த - மழுவையேந்திய, கங்காளன - கங்காளனாகிய சிவபெருமான், அருள்-ஈன்ற, மைந்தன் என-புதல்வனென்று சொல்லும்படி, வந்த-அவதரித்த, முருகா-முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

எழுத்து - அகரமுதலாகிய முப்பது எழுத்துக்கள். அசைகள் - நேரசை நிரையசைகள். சீ - ஆசிரியவுரிச்சீர் முதலி

யன. தலை-ஆசிரியத்தளை முதலியன அடி-குறளடி முதலியன. தொடை-எதுகைத் தொடைமுதலியன. ஈரைம்பொருத்தம் பாலப்பொருத்தம் முதலியன. பளபளப்பு-தெளிவு, அழுத்தம்-பொருளாழம், பொருளடக்கம் - பொருளடங்கி யிருத்தல், பா-வெண்பாமுதலியன. பாவிமனம்-துறைதாழிசைமுதலியன அலங்காரம்-உவமைமுதலியன.

விபூதி வாங்குமுறைமை.

பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலி ருந்தும்
தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினுஞ்
செங்கைபொன் றாலும்விரன் மூன்றாலும் வாங்கினுந்
திகழ்தம் பலத்தி னோடும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு
மசுத்தநில மான வதிலு
மங்கே தரிக்கினுந் தந்திடிற் றள்ளினு
மவர்க்குநர கென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சகநா தனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (87)

(இ-ள்.) பரிதனில் இருந்தும்-குதிரைமே லிருந்தும், இயல் சிவிகையில் இருந்தும்-பொருந்திய பல்லக்குமே லிருந்தும், உயர் பலகையில் இருந்தும் - உயர்ந்த பலகையின்மே லிருந்தும், மிகபாங்கான - மிகவும் அழகான, அம்பலந்தனிலே இருந்தும்- பொதுவிடத்திருந்தும், பருத்ததிண்ணையில் இருந்தும்-பெரிய திண்ணையின்மே லிருந்தும், தெரிவொடு கொடுப்பவர்கள்-விவேகத்தோடு கொடுக்கின்றவர்கள், கீழ்நிற்க-கீழே நிற்க, மேல்நின்று-மேலேநின்று, திருநீறுவாங்கி இடினும் - விபூதி வாங்கினாலும், செங்கை ஒன்றாலும்-செவந்த ஒற்றைக்கையினாலும், விரல் மூன்றாலும் மூன்றுவிரலாலும், வாங்கினும்-வாங்கினாலும், திகழ்தம்பலத்தோடும் - விளங்குகின்ற தம்பலத்தோடும், அரியது ஒரு பாதையில்-அரிதாகிய ஒருவழியில், நடக்கின்றபோதிலும்-நடக்கின்ற காலத்திலும், அசுத்தநிலம் ஆன அதிலும்-அசுத்தமான நிலத்திலும், அங்கே தரிக்கினும் - வாங்கின அவ்விடத்திலேயே தரித்துக்கொண்டாலும், தந்திடின் தள்ளினும் - (பெரியோர்) கொடுக்கத் தடுத்துவிட்டாலும், அவர்க்கு - அத்தன்மையோர்க்கு, நரகு என்பர் - நரகம் சித்திக்குமென்று சொல்லுவர் (பெரியோர்), வரிவிழி - ரேகைகளையுடைய கண்களுள்ள, மடந்தை-பெண்ணாகிய, குறவள்ளி நாயகிதனை-குறவள்ளிநாயகியை, மணந்து-மணஞ்செய்து, மகிழ்-மகிழ்ந்த, சகநாதனே-லோகநாதனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

குதிரை முதலியவற்றின் மேலிருந்து விபூதிவாங்குவோர்க்கும் வாங்கின இடத்திலேயே தரிப்போர்க்கும் பெரியோர் கொடுத்

தால் தடுப்பவர்க்கும் நரகபிராப்தி யுண்டென்பது இச்செயுட் கருத்து. பரி-குதிரை. சிவிகை-பல்லக்கு. உயர்பலகை உயர்ந்த பீடம். தம்பலம்-மென்ற வெத்திலைப்பாக்கு. பாதை-வழி.

விபூதிதரிக்குமுறைமை.

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்து கையா லெடுத்துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதி லொழுக
நித்தமு விரல்களா னெற்றியி லழுந்தவுற
நினைவாய்த் தரிப்ப வர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம லிமல னங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந் திரு
சஞ்சலம் வாராதுபா கதியுதவு மிவரையே
சத்தியுஞ் சிவனென் னலாம்
மத்தினிய பேருவென வைத்தமு தினைக்கடையு
மான்மருக னை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (88)

(இ-ள்.) பத்தியொடு-பக்தியுடனே, சிவசிவா என்று-சிவசிவா வென்று உச்சரித்து, திருநீற்றை - விபூதியை, பரிந்து கையால்

எடுத்து - விரும்பிக்கையினால் அள்ளி, பாரினில்வீழாதபடி - பூமியில் சிந்தாதபடி, அண்ணாந்து-நிமிர்ந்து, செவியொடு புருத்தபுயமீதில் ஒழுக-காதுகளோடு பெருத்ததோள்களின்மீதும் சிந்தும்படி, நித்தம் - நாள்தோறும், மூவிரல்களால் - மூன்றுவிரல்களால், நெற்றியில் அழுந்தஉற - நெற்றியில் அழுந்தும்படி, நினைவாய் தரிப்பவர்க்கு-மறவாது தரிப்பவர்க்கு, நீடுவினை அணுகாது-பெரியபாவம்சேராது, தேகபரிசுத்தம்ஆம்-சரீரசுத்தமுண்டாகும், நிமலன்-சிவபெருமான், அங்கே-அவ்விடத்தே, நித்தம்-நாள்தோறும், நீங்காமல்-பிரியாமல், சத்தியொடு விளையாடுவன்-சத்தியோடுகூடி விளையாடிக்கொண்டிருப்பன், முகத்திலே-அவர்கள்முகத்தில், திருத்தாண்டவஞ்செய்யும்-இலக்குமிநடனஞ்செய்வாள், சஞ்சலம்வாராது-சஞ்சலம் உண்டாகாது, பரகதிஉதவும்-மேலான மோட்சத்தையுங்கொடுக்கும், ஆதலால் இவரையே-பத்தியொடு விபூதிதரிக்கின்ற இவர்களையே, சத்தியம்-உண்மையாக, சிவன்எனலாம்-சிவபெருமான்என்று சொல்லலாம், இனியமேரு - அழகானமேருமலையை, மத்துஎனவைத்து - மத்தாகநாட்டி, அமுதினைகடையும் - அமுதின்பொருட்டுக் கடைந்த, மால்-திருமாலுக்கு, மருகன்ஆன-மருகனாகிய, முருகா - முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

பத்தி-அன்பு, பரிதல்-விரும்புதல், அண்ணாத்தல்-நிமிர்தல், அழுந்தல்-பதிதல், நினைவாய்-சிரத்தையாய், (ஞாபகமாய்,) நிமலன்-பரிசுத்தன். தாண்டவம்-நடனம், சஞ்சலம்-சலனம், மேரு

என்பது இவ்விடத்தில் மந்தரமலையைக்குறித்தது. அமுதினை-உருபுமயக்கம்.

இவ்வுறுப்பாற் பயனில்லெனல்.

தேவால யஞ்சுற் றிடாதகா லென்னகா
　　றெரிசியாக் கண்ணென் னகண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
　　சிந்தைதா னென்ன சிந்தை
மேவாக மஞ்சிவ புராணமவை கேளாமல்
　　விட்டசெவி யென்ன செவிகள்
விமலனை வணங்காத சென்னியென் சென்னிபணி
　　விடைசெயாக் கையென் னகை
நாவார நினையேத் திடாதவா யென் னவாய்
　　நற்றீர்த்த மூழ்கா வுட
ளனிலத் தெனவுடல் பாவியா கியசனன
　　நண்ணினுற் பலனே துகாண்
மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
　　வடிவேலை விட்ட முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (89)

(இ-ள்.) தேவாலயம் சுற்றிடாதகால் - தேவாலயத்தை வலம்வராதகால், என்னகால் - எத்தன்மைத்தாகிய கால், தெரிசியாகண் - தெரிசனஞ்செய்யாதகண், என்னகண் - எத்தன்மைத்தாகியகண், தினமும் - நாள்தோறும், நின் - உனது

கமலம்-தாமரைமலர்போன்ற, பாதத்தை-திருவடியை, நினையாத-நினைக்காத, சிந்தை-மனம், என்னசிந்தை-எத்தன்மைத் தாகிய மனம், மேவு - மனம்பொருந்திய, ஆகமம்-ஆகமமும் சிவபுராணம்-சிவபுராணமும், (ஆகிய) அவை - அவற்றை, கேளாமல் விட்ட செவி-கேளாதுவிட்ட காதுகள், என்னசெவிகள் - எத்தன்மைய வாகிய காதுகள், விமலனை-சிவபெருமானை, வணக்காத-பணியாத, சென்னி - தலை, என்சென்னி - எத்தன்மைத் தாகிய தலை, பணிவிடை செய்யா தகை-தொண்டு செய்யாதகை, என்னகை-எத்தன்மைத்தாகியகை, காவூர - நாநிரம்ப, நினை ஏத்திடாதவாய் - உன்னைத் துதிக்காதவாய், என்னவாய் - எத்தன்மைத்தாகிய வாய், நாநிலத்து - உலகத்தில், நல்தீர்த்தம் - நல்லபுண்ணிய தீர்த்தங்களில், மூழ்காத உடல் - முழுகாத உடம்பு, என்ன உடல் - எத்தன்மைத்தாகிய உடம்பு, பாவியாகிய-பாபத்தை யுடையதாகிய, சனனம் நண்ணினால்-பிறவியெடுத்தால், பலன்ஏது-பயன் யாது, மாஆகி-மாமரமாகி, வேலைதனில்வரு-கடலில்வந்த, சூரன்-சூரபன்மனது, மார்பு உருவ-நெஞ்சிற்பட் டுருவும்படி, வடிவேலைவடித்த வேலாயுதத்தை, விட்ட-பிரயோகித்த, முருகா முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. என்றவாறு.

தேவாலயம்-தேவர்கோயில். விமலன்-பரிசுத்தன். நல்தீர்த்தம் - கங்கைமுதலிய புண்ணியநதிகள் பாலைக்கு நிலமில்லாமையால் பூமியை நாநிலமென்றார்.

நற்பொருளொடு தீப்பொருள்பிறத்தல்.

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவுமாட் டின்க ணதர்தான்

கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
    கொடும்பாசி யுற்று மென்ன
மாகருணு மமுதினொடு நஞ்சம் பிறந்தென்ன
    வல்லிரும் பிற்று ருத்தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள்
    வளமொடு பிறந்தென் னவுண்
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
    பண்ணுமொரு தாய்வ யிற்றிற்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
    பலனேது மில்லை யன்றோ
மாகனகமேருவைச் சிலையென வளைத்தசிவன்
    மைந்தனென வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (90)

(இ-ள்.) கோகநகமங்கையுடன்-திருமகளோடு, மூத்தவள் பிறந்து என்ன-மூதேவி பிறந்தாலென்ன, குலவும்-விளங்குகிற, ஆட்டின்கண் - ஆட்டினிடத்தில், அதர் - அதரானது, கூடப்பிறந்து என்ன - கூடவே பிறந்தாலென்ன, தண்ணீரினுடனே - நீருடன், கொடும்பாசி உற்றும் என்ன - மிகுந்தபாசி உண்டாயிருந்தாலென்ன, மாகர் உண்ணும்-தேவர்கள் உண்ணுகிற, அமுதினொடும்-அமிர்தத்துடன், நஞ்சம்பிறந்து என்ன - நஞ்சுபிறந்தாலென்ன, வல்இரும்பில்-வலியஇரும்பினிடத்தில், துரு-துருவானது, வந்து பிறந்து என்ன - வந்துபிறந்தாலென்ன, நெடுமரந்தனில் - நீண்ட

மாத்தில், மொக்குள் - மொக்குளானது, வளமொடு - வளமாக, பிறந்து என்ன-பிறந்தாலென்ன, உண்-உண்ணுதற்குரிய, பாகம் மிகு-பக்குவமிகுந்த, செந்நெலொடு-செந்நெல்லுடனே, பதர்-பதரானது, பிறந்து என்ன - பிறந்தாலென்ன, பன்னும் - சொல்லப்பட்ட, ஒரு தாய்வயிற்றில்-ஒருதாயின் வயிற்றிலே, பண்பு உறு விவேகியொடு - நற்குணம் பொருந்திய விவேகியுடன், சயவர்கள் பிறந்து என்ன-கீழ்மக்கள் பிறந்தாலென்ன, பலன் ஏதும் இல்லை அன்றே - பயன்சிறிதும் இல்லையல்லவா, மா - பெரிய, கனகம்-பொன்மயமாகிய, மேருவை-மேருமலையை சிலையெனவளைத்த-வில்லாகவளைத்த, சிவன்மைந்தன் என - சிவபெருமானுக்குப் புதல்வனாக, வந்த-அவதரித்த, முருகா-முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கோகநகமங்கை-தாமரைமலரில் வாழ்கின்றமாது. மூத்தவள்-அந்தத்திருமகளுக்கு மூத்தவள். அதர்-ஆட்டின் கழுத்தில் நீளமாகத் தொங்குகிறதோல். மாகம்-சுவர்க்கம்-மாகர் - சுவர்க்கலோகவாசிகள். (தேவர்கள்) திரு - களிம்பு. மொக்குள் - புல்லுருவி. பதர்-உள்ளீடில்லாதநெல். (உமிக்கூடு.)

தன்னினத்தாலழிவு.

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூறிரும் புகளை வெல்லுங்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
கோத்திர மெலாமழிக்கும்

நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
நண்ணுபற வைகளை யார்க்கு
நற்புடன் வளர்ந்தகலை மானொன்று சென்றுதன்
னவில்சாதி தனையிழுக்கும்
உலகுநற் குடிதனிற் றோன்றிக ளிருந்துகொண்
டுற்றாரை யிடறிப்ப
ருளவில்லா மலுள்ளா ரழியாதெ னச்சொல்லு
முலகமொழி நிசமல்லவோ
வலமாக வந்தா னிடத்திற் கனிகொண்ட
மதயானை தன்சோதரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (91)

(இ-ள்.) குலமான சம்மட்டி - தன்னினமான சம்மட்டியும், குறடு - குறடும், கைக்கு உதவியாய் - கைக்கு உதவியா யிருந்து கொண்டு, கூர் இரும்புகளைவெல்லும் - கூர்மையாகிய இரும்புகளை அழிக்கும், கோடாலிதன்னிலே-கோடாலியில், மரமது நுழைந்து-மரமானது நுழைந்து தன்கோத்திரம் எல்லாமழிக்கும் - தன் வமிசத்தை யெல்லாம் அழிக்கும், நலம் ஆன பார்வைசேர்-நன்மையாகிய பார்வையுள்ள, குருவியானது வந்து - குருவி யானது வந்திருந்து கொண்டு, நண்ணு - அவ்விடத்தில் வரு கிற, பறவைகளை ஆர்க்கும் - பக்ஷிகளைக் கட்டி வசப்படுத் தும், நட்புடன் வளர்ந்த கலைமான் ஒன்று-சிநேகமாக வளர்ந்த ஒரு கலைமானானது, சென்று - போய், தன் - தனது, நவில்-

சொல்லப்பட்ட, சாதிதனை இழுக்கும் - இனத்தை யிழுக்கும், உலவு - உலாவுகிற, நற்குடிதனில் - நல்லகுடியில், கோளர்கள் இருந்துகொண்டு - கோட்சொல்லுவோர் இருந்துகொண்டு, உற்றாரை - உறவினரை, ஈடழிப்பர் - பெருமையழிப்பார்கள், உளவன் இல்லாமல்-உளவாளியில்லாமல், ஊர் அழியாது-ஊர் அழியமாட்டாது, எனச்சொல்லும்-என்று சொல்லுகிற, உலகமொழி-லோகவாக்கியம், நிசம்அல்லவோ-உண்மையல்லவா, வலமாகவந்து-பிரதக்ஷிணமாய்வந்து, அரசனிடத்தில் - சிவபெருமானிடத்தில், கனிகொண்ட-கனியைவாங்கின,மதயானைதன்சோதரா-விநாயகரது சகோதரனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

கோடாலி-கோடரி (மரங்களைவெட்டிச்சாய்க்கும்) ஓரிருப்புக்கருவி ஆர்த்தல்-கூட்டல், ஈடு-பெருமை, உளவன் - அந்தரியந் தெரிந்தவன், கனி-மாம்பழம், விநாயகர் யானைமுகத்தை யுடையவராதலால் அவரை மதயானையென்றே கூறினர். சோதரன்-ஒரு தாய்வயிற்றிற் பிறந்தவன்.

வீணுக் குழைத்தல்.

குயின்முட்டை தனைதென்று காக்கையடை காக்குங்
 குணம்போலு மீக்க ளெல்லாங்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினங்
 கூடிய்த்த நறவு போலும்
பயில்சோர ருக்குப் பிரத்திடத் தாம்பெற்ற
 பாலனென் றட்ச ருகியே

பாராட்டி முத்தமிட்டன்பாய் வளர்த்திடும்
பண்பிலாப் புருடர் போலும்
துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற்
றொட்டுத் தெறித்தி டாமல்
தொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போகவரு
சொந்தமா னவர்வே றுகாண்
வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க் குதவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவு குமரேசனே. (92)

(இ-ள்.) குயில்முட்டை-குயிலின் முட்டையை, தனதுஎன்று-தனதென்றுநினைத்து, காக்கை-காகமானது. அடைகாக்கும்குணம்போலும்-அடைகாக்கும் குணம்போலவும், ஈக்கள் எல்லாம்-ஈக்கள் எல்லாமும், கூடிசேர்ந்து, தாம்உண்ணவேண்டுமென்று-தாம்குடிக்கவேண்டுமென்று, தினம்-நாள்தோறும், கூடு-தமது கூட்டில், உய்த்த-சேர்த்துவைத்த, நறவுபோலும்-தேனைப்போலவும், பயில்-சிநேகித்த, சோரருக்கு-கள்ளபுருடருக்கு, பிறந்திட-பிறக்க, தாம்பெற்ற பாலனென்று-தாம்பெற்ற புதல்வனென்று, உள்கருதி-மனத்தில்எண்ணி, பாராட்டி முத்தமிட்டு-கொண்டாடி முத்தமிட்டு, அன்பாய் வளர்ந்திடும்-அன்போடு வளர்க்கின்ற, பண்புஇலா புருடர்போலும்-நற்குணமில்லாத புருஷர்போலவும், துயில்இன்றி - தூக்கமில்லாமல், நிதிகளைத்தேடி - திரவியங்க

ளைச் சம்பாதித்து, ஒருவர்பால்-ஒருவரிடத்து, தொட்டுதெறித் திடாமல்-தொட்டுத் தெறிக்காமல், தொகைபண்ணிவைத்திடு வர்-தொகைசெய்து வைத்திடுவார்கள், (ஆனால் அந்த நிதிகளைக்) கைக்கொண்டு போகவரு-கைப்பற்றிப் போகவருகிற, சொந்தமா னவர்-சொந்தக்காரர், வேறு-வேறானவரே; வயிரமொடு-மனவைரத் தோடு, சூரனை-சூரபதுமனை, சங்காரஞ்செய்து-சங்கரித்து, வான வர்க்கு-தேவர்களுக்கு, உதவு-உதவின, தலைவா-முதல்வனே, மயி லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே,எ-று.

காகமுதலியவை குயில்முட்டைமுதலியவற்றைத் தம்ம தென்றுகருதிப் பிறர்க்கு உதவியாக்குதல்போல உலோபிகள் திர வியத்தைத்தேடித் தாம்நுகராமல் பிறருக்கே உதவுவர் என்பது இச்செய்யுட் கருத்து. தொகைபண்ணிவைத்தல் - சேர்த்துவைத் தல்.

இதுசேரி னிதுபயன் படாதெனல்.

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
வாற்றிற் கரைத்த புளியு
மரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரு
பலகைகட் கிடுபூசையும்
கழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணற்
சொரிகரும் பனிநீ ருநீள்
சொல்லரிய காட்டுக் கெறித்தநில வுங்கடல்
கழிக்குளே விடுகப் பலும்

விழலுக் கிறைத்திட்ட தண்ணீரு முகமாய்
வேசைக் களித்த பொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாவி தென்பர் கண்டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரு
வண்ணக் குழந்தை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (93)

(இ-ள்.) அழலுக்குளே விட்டநெய்யும்-நெருப்பிற்சொரிந்தநெய்யும், பெருக்கான ஆற்றில்கரைத்தபுளியும்-நீர்ப்பெருக்கமாகிய ஆற்றிலேகரைத்துவிட்டபுளியும், அரிதான-அரிதாகிய, கமரில்-நிலவெடிப்பில், கவிழ்த்திட்டபாலும் - கவிழ்த்துவிட்டபாலும், வரும் (அழைத்தால்ஓடி) வருகிற அலகைகட்கு - பேய்களுக்கு, இடுபூசையும்-செய்கிற பூசையும், சுழல்-சுற்றுகிற, பெருங்காற்றினில்-பெருங்காற்றிலே, வெடித்தபஞ்சும் - வெடித்தபஞ்சும், மணல்சொரி-மணலிற்கொட்டின, நறு-மணமுள்ள, பனிநீரும் - பனிநீரும், நீள்-நீண்ட, சொல்அரிய-சொல்லுதற்கரிய, காட்டுக்கு எரித்தநிலவும்-காட்டிலெரித்தநிலாவும், கடல்சுழிக்குளே விடுகப்பலும்-கடற்சுழியில் ஓட்டினகப்பலும், விழலுக்கிறைத்துவிட்ட நீரும், மோகமாய் - மோகங்கொண்டு, வேசைக்களித்த பொருளும் - வேசைக்கு கொடுத்தபொருளும், வீணருக்குசெய்த நன்றியும்-வீணர்களுக்குசெய்த உபகாரமும், பலன்இல்லை-பயன்படுவனல்ல, இது - இது, விருதாஎன்பர் - வீண்என்று சொல்

ளுவர் (பெரியோர்) மழலை - மழலைச்சொற்களை யுடைய, பசுங் கிள்ளை-பசுங்கிளியை, முன்கை-முன்கையிலுடைய, மலைமங்கை-பார்வதிதேவி, தரு - பெற்ற, வண்ணம் - அழகாகிய, குழந்தை-குழந்தைப்புருவான, முருகா - முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

கமர் - நிலவெடிப்பு. சுழல் பெருங்காற்று - சூறைக்காற்று. நிலவு-சந்திரிகை. விழல் ஓர்வகைப்புல். இறைத்தல்-பாய்ச்சுதல். வீணர்-பயனற்றவர். மலைமங்கை-பர்வதராஜகுமாரி.

கைவிடத்தகாதவர்.

அன்னைசுற் றங்களையு மற்றைநான் முதலா
வடுத்துவரு பழையோ ரையு
மடிபணைகவ சிற்றப்பி வந்தசெத்தாரு வேந்தனையு
மன்பான பெரியோ ரையும்
தன்னைநம் பினரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம் மையுங்
கருணைமிகு வென்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோ ரையும்
அன்னைய தாகமுன் னுதவிசெய் தோரையு
நாளுந் தனக் குறுதியாய்
நத்துசே வகனையுங் காப்பதல் லாதுகை
நழுவவிட லாகா தகாண்

மன்னயிலு மினியகசஞ் செங்கைமலர்
வைத்தசர வணபூபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (94)

(இ-ள்.) அன்னை சுற்றங்களையும்-பெற்றதாயையும் மற்றபந்துக்களையும், அற்றைநாள்முதல் ஆ அடுத்துவரு பழையோரையும் - அன்றைத்தினம் முதலாக (முதலிற்பார்த்த) அத்தினந்தொடங்கி வெகுநாளாகத் தன்னையடுத்துவருகிற பழமையான பரிசயமுள்ளவர்களையும், அடுபகைவரில் தப்பிவந்த ஒருவேந்தனையும்-கொல்லவந்த பகைவர்களுக்கு அஞ்சி (அவர்களிடத்திினின்று) தப்பிவந்த ஓர் அரசனையும், அன்பு ஆன பெரியோரையும்-அன்பு வைக்கத்தக்க பெரியோர்களையும், தன்னை நம்பினரையும்-தன்னை நம்பினவர்களையும், ஏழை ஆனவரையும் - பொருளில்லாதவர்களையும், சார்ந்தமறையோர் தமையும்-தன்னை அடுத்த அந்தணர்களையும், நல் ஆபத்துவேளையில் - மிக்கதுன்பம் நேர்ந்த சமயத்தில், இது தருணம் என்று சரணம் புகுந்தோரையும்-இது பாதுகாத்தற்குரிய சமயமென்று சொல்லிவந்து சரணமடைந்தவர்களையும், நல்நயம் அது ஆக முன் உதவிசெய்தோரையும்-மிக்க இனிமையாகத் (தனக்கு) முன்பு உதவிசெய்தவர்களையும், நாளும் தனக்கு உறுதி ஆய் நத்து சேவகனையும்-தினந்தோறும் தனக்கு நல்லதொழில் செய்பவனாய்த் தன்னிடத்து அன்பு கொண்ட ஊழியக்காரனையும், காப்பது அல்லாது - பாதுகாப்பதேயல்லாமல், கைநழுவவிடல் ஆகாது - சேர்ந்து கைவிட்டிடக் கூடாது, மன்-பெருமையையுடைய, அயிலும்-வேலாயுதத்தையும் இனிய

சேவலும் - (கண்ணுக்கு) இனிமையான அழகிய சேவலின்வடிவத்தை யெழுதியகொடியையும், செம்கை மலர்வைத்த-சிவந்த தாமரைமலர்போன்ற திருக்கைகளிற் கொண்டருளிய, சரவணபூபனே-சரவணபூமிக்குத் தலைவனான முருகனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

முன்னுதவி செய்தல் - தான் ஓர் உதவியையும் அவர்க்குச் செய்யாம லிருக்கையில் அவர் தம்முன்பு தனக்கு ஓர் உதவிசெய்தல், மன் அயில் - மற்றை யாயுதங்கட்கெல்லாம் தலைமையான வேல், பிறருடைய ஆயுதங்களுக்கு அழிவடையாமல் நிலைபெற்ற வேல் எனினுமாம் 'எவர்மேல் விடுக்கினு மவர்தம்' மாயிருந்திறலும் வரங்களுந் சிந்திமன்னுயிருண்ப தெப்படைக்கும், நாயகமாவதொரு தனிச்சுடர் வேல் நல்கியே-மதலைகைக் கொடுத்தான் என்றார் கந்தபுராணத்தும். சேவல்பறவையின ஆண்பாற்பெயர். சேவல் என்பது - இங்கு அதன் வடிவமெழுதிய கொடிக்கு இருமடியாகு பெயராம். சரவணபூபன் என்பதற்கு - சரவணத்தில் தோன்றிய தலைவன் என்பதுகருத்து.

தகாதசெயல்.

அண்டிவரு முற்றார் பசித்தங் கிருக்கவே
வன்னியர்க் குதவு வோரு
மாசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பி
னற்பரை யடுத்த பேரும்

கொண்டவொரு மனையா ளிருக்கப் பரத்தையைக்
கொண்டாடி மருவு வோருங்
கூறுசற் பாத்திர மிருக்கமிகு தானமது
குணமிலார்க் கீந்தபே ரும்
கண்டுவரு விதியோரை நம்பியே பழையரைக்
கைவிட்டிருந்த பேருங்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியா தைகாண்
வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்ப்பனே யருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (95)

(இ-ள்.) அண்டிவரும் உற்றார் - அடுத்துவருகிற உறவினர், அங்கு பசித்து இருக்க - அவ்விடத்தில் பசித்திருக்க, அந்நியர்க்கு உதவுவோரும் - பிறருக்கு உதவிசெய்வோரும் ஆசுஅறு- குற்றத்தைக் கெடுத்த, பெரியோர்செய் - பெரியவரோடு செய்த, நேசத்தைவிட்டு-சிநேகத்தைவிட்டு, பின்-பிறகு, அற்பரை அடுத்தபேரும் - அற்பர்களை அண்டினபேரும், கொண்ட ஒருமனையாள் இருக்க-கொண்ட ஒருமனைவியானவளிருக்க, பரத்தையை-வேசையை, கொண்டாடி மருவுவோரும்-கொண்டாடிப் புணர்வோரும், கூறுசற்பாத்திரம் இருக்க-சொல்லப்பட்ட சற்பாத்திரமிருக்க, குணம் இல்லார்க்கு-நற்குணமில்லாதவர்க்கு, மிகுதானம்ஈந்த

பேறும்-மிகுந்த தானம்செய்தபேறும், கண்டுவரு-பார்த்துவருகிற, புதியோரை-புதியவர்களை, நம்பி-நம்பி, பழையரை-பழையவர்களை, கைவிட்டிருந்தபேர்களும், கரிவாலைவிட்டு-யானையின்வாலைவிட்டு, நரிவால்பற்றி-நரியின்வாலைப் பிடித்துக்கொண்டு, நதிநீர் - ஆற்று நீரை, கடக்கின்ற மரியாதை - தாண்டுகிற செய்கைபோலாகும், வண்டு அடர்-வண்டுகள் நெருங்கின, கடப்பமலர்மாலிகா - கடப் பம்பூமாலையை, ஆபரணம் ஆபரணமாகத்தரித்த, மணி-அழகிய, மார்பனே-மார்பையுடையவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

அண்டிவருதல்-ஆதரவாயெண்ணிவருதல், அங்கு-அந்தச் செல்வர் வீட்டில், ஆசு-குற்றம், சபுதல்-கெடுத்தல், அற்பர்-இழி ந்தவர், மருவுதல்-புணர்தல், சற்பாத்திரம்-நல்லபாத்திரம், கொடு க்கத்தகுந்த நல்ல இடம், தானம்-கொடை, கண்டு-செல்வத்தைப் பார்த்து, ஆபரணம்-அணியென்வும் பிரிக்கலாம்.

நல்லோர் முறை.

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு
குழந்தைபல பெறுத லாலுங்
குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலுங்
கொடுப்பிதிர்க் கிடுத லாலுந்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலுந்
தியாங் கொடுத்த லாலுஞ்

சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்தலாலு
நாடியே தாழ்வாய் வணங்கிடுதலாலுமிக
நல்வார்த்தை சொல்லலாலு
நன்மையே தருமலாற் றூழ்ச்சிகள் வராவிவை
நல்லோர்கள் செயுமுறைமைகாண்
வாடிமன நொந்துதமிழ் சொன்னநக்கீரன்முன்
வந்துதவி செய்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (96)

(இ-ள்.) சோதர்கள்-சகோதரர்கள், கூடிவாழ்தலாலும்-சேர்ந்து வாழ்க்கையாலும், தகு-தகுதியாகிய, பலகுழந்தைபெறுதலாலும்-பலகுழந்தைகளைப்பெறுகையாலும், குணமாக-நற்குணத்தோடு, பிச்சை இட்டு உண்கையாலும்-பிச்சைபகிர்ந்து உண்ணுகையாலும், கொள்ளும்-ஏற்றுக்கொள்ளுகின்ற, பிதிர்க்கு-பிதிர்த்தேவதைகளுக்கு, இடுதலாலும்-அவிசுகொடுத்தலாலும், தேடி-தேடிக்கொண்டுபோய், தெய்வங்களுக்கு-தேவதைகளுக்கு, ஈதலாலும்-உபயோகப்படுத்தலாலும், தியாகம்கொடுத்தலாலும்-தானங்கொடுக்கையாலும், சிறியோர்கள்-சிறியவர்கள், செய்திடும்பிழை செய்கின்ற குற்றங்களை, பொறுத்து - மன்னித்து, சினத்தை தவிர்த்தலாலும்-கோபத்தை ஒழித்துவிடுகையாலும், நாடி-தேடி, தாழ்வாய்-பணிவாய், வணங்கிடுதலாலும் - தொழுதலாலும், மிக-மிகுதியாக, நல்வார்த்தை சொல்லாலும்-இன்சொற்கள் சொல்லுதலாலும், நன்மையே தருமலால்-நன்மையையே கொடுக்குமல்லா

மல், தாழ்ச்சிகள்வாா-தீமைகள் உண்டாகமாட்டா, இவை-இந்தக்காரியங்கள்யாவும், நல்லோர்கள் செய்யும்முறைமை-நல்லவர்கள் செய்கின்ற முறைமையாகும், மணம்வாடிநொந்து-மனம்வாடிவருந்தி, தமிழ்சொன்ன-தமிழ்ப்பிரபந்தம்சொல்லின, நக்கீரன்முன் வந்து-நக்கீரனுக்கு எதிரேவந்து, உதவிசெய் தமுருகா-(அவனுக்குச்) சகாயம்செய்த முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

கொளுட-நல்தார்ப்பணுதிகளை ஏற்றுக்கொள்ளுகின்ற தேடி என்பதற்கு பொருள் சம்பாதித்து என்றும் உரைக்கலாம் பொறுத்தல்-சகித்தல், தாழ்ச்சிகள்-தீமைகள், நக்கீரன் சொன்ன தமிழ் திருமுருகாற்றுப்படை யென்னும் பிரபந்தம்.

அடைக்கலங்காத்தல்.

அஞ்சலெனு நாயினுட றருமகன் சுமந்துமுன்
னூற்றைக் கடத்து வித்தா
னடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுட
னருச்சுனன் சமர்புரிந் தான்
தஞ்சமென வந்திடு புறவுக்கு முன்சிபி
சரீரந் தனைக்கொ டுத்தான்
தடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
ததீசிமுது சென்பளித் தான்

இன்சொலுட னேபூத தயவுடைய ராயினோ
ரெவருக்கு மாபத் திலே
யினியதஞ் சிவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கி ரக்ஷிப்ப ரன்றோ
வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூர னுடல் கீண்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (சூஎ)

(இ-ள்.) முன்-முன்பு, தருமன்-தருமபுத்திரன், அஞ்சல் என-அஞ்சாதே என்றுசொல்லி, அபயம்-அளித்து, நாயின்உடல்சுமந்து-நாயினது உடம்பைச்சுமந்து, ஆற்றைநடத்துவித்தான்-(அந்நாய்) ஆறுகடக்கும்படி செய்வித்தான், அருச்சுனன் - அருச்சுநன், அடைக்கலம் எனும்கயற்கு ஆக-அடைக்கலமென்று சொல்லிவந்து தன்னைச்சரணமடைந்த கயன் என்னும் கந்தருவனுக்காக, நெடுமாலுடன் சமர்புரிந்தான்-பெருமைக்குணமுடைய திருமாலினது திருவவதாரமான கண்ணபிரானுடனே போர்செய்தான், முன்-முன்பு, சிபி-சிபிச்சக்கரவர்த்தி, தஞ்சம் எனவந்திடுபுறாவுக்கு அடைக்கலமென்று சொல்லிவந்து தன்னையடைந்த புறாவுக்காக, சரீரந்தனைகொடுத்தான்-தன்உடம்பை அறுத்துக்கொடுத்தான், முன்-முன்பு, ததீசி-என்னும் முனிவன், கடலைசிறகு அரிந்தவனைகாக்க, பெரியமலைகளின் இறகுகளை அறுத்தவனான இந்திரனைப் பாதுகாக்கும்பொருட்டு, முதுகுஎன்பு அளித்தான்-(தன்னுடைய) முதுகெலும்பைகொடுத்தான், இன்சொலுடனேபூத

தயவுடையர் ஆயினோர் - இனிமையானபேச்சைப் பேசு நலோடு பிராணிகளிடத்தில் கருணையையும் உடையவர்களானவர்கள், எவருக்கும்-(தம்மைச்சரணமடைந்தவர்) யாவர்க்கும், ஆபத்திலே-ஆபத்துக்காலத்திலே, இனிய தம் சீவனைவிடுத்து ஆகிலும்-(அவ்வாபத்தைத் தீர்த்தற்பொருட்டு) இனிமையான தங்களுயிரைவிட்டாவது, இறங்கி காத்து ரட்சிப்பர் அன்றோ - இரக்கங்கொண்டு பாதுகாத்து அருளுவரன்றோ, வஞ்சம் கிரவுஞ்சமொடு-வஞ்சனையையுடைய கிரௌஞ்சகிரியுடனே, தாருகன் சிங்கமுகன் வளர்சூரனுடல் - தாரகாசுரன் சிங்கமுகாசுரன் வளர்ந்தசூரபதுமன் என்பவர்களுடைய உடலை, கீண்டவா - (வேல்கொண்டு) பிளந்தவனே, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே.

நாயினுடல் தருமன் சுமந்தகதை:—கண்ணபிரான் பரமபதமடைந்ததையும், கலியுகம்தொடங்கிவிட்டதையும் அறிந்து பஞ்சபாண்டவர்கள் இவ்வுலகத்தை விடக்கருதியவர்களாய்த் திரௌபதியுடன் மகாப்ரஸ்தானமாகப்பெரும் பிரயாணம் புறப்பட்டபோது, தருமபுத்திருடைய ஜீவகாருணியத்தைப் பரிசோதிக்கக்கருதியவனாய், யமன், ஒருநாய்வடிவுகொண்டு அத்தினாபுரியினின்று அவர்களுடனே விடாது தொடாது சென்றான். வடதிசைநோக்கி நெடுந்தூரஞ்சென்ற அவர்கள் மேருமலையைச் சாருமளவில், திரௌபதி, சகாதேவன், நகுலன், அருச்சுனன், வீமன், என்ற இவர்கள் ஒருவர்பின் ஒருவராய் வலிமைகுன்றிக்

கீழ்விழுந்து மனிதவுடம்பை நீத்து வேறுவடிவங்கொண்டு பரலோகஞ்சேர்ந்தார்கள். பின்பு, தருமன் அவர்கள் வீழ்ந்ததைப் பொருள்செய்யாமல் தானும் நாயுமாக அப்பாற் சென்றுகொண்டிருக்கையில், இந்திரன் விமானத்துடனே எதிர்பட்டுவந்து தருமபுத்திரனை நோக்கி 'நீ இதில் ஏறிக்கொண்டு சுவர்க்கலோகத்துக்குவருக' என்றுகூற, தருமபுத்திரன் இந்தநாய்க்கும் அவ்விமானத்தில் இடந்தரவேண்டும் என்றுவேண்டினான். அதற்கு இந்திரன் உடன்படாமல் மிருகசன்மத்தின் இழிவையும், அதிலும் நாய்ப்பிறப்பின் தாழ்வையும், மேலுலகஞ்செல்வார்க்கு இப்படிப்பட்ட பாசங்கூடாதென்பதையும் வற்புறுத்திக்கூறிமறுக்க, தருமபுத்திரன் சரணமடைந்த உயிரைக்காப்பது மிகவும்மேலான தருமமாதலின்' என்னையேகதியாக அடைந்து என்னிடம்வந்துள்ள இந்த நாயை நான்கைவிடமாட்டேன், இதுவும் என்னுடனே சுவர்க்கத்துக்கு வரவேண்டுவதே, என்று உறுதியாகக் கூறும்பொழுது, யமன் நாய்வடிவத்தைவிட்டுத் தன்வடிவத்தைக்கொண்டு தோன்றி, தருமபுத்திரனுடைய சரணாகதரட்சண தருமத்தைக்கொண்டாடி, தான் அவனை இவ்வாறு பரிசோதித்த தன்மையைக்கூறி, பின்பு அவனை மேலுலகத்திற்கு அழைத்துப் போயினன் என்பது மகாபாரதத்து மகாப்ரஸ்தான பருவத்தின் வரலாறு.

அங்ஙனம் தருமபுத்திரன் நாயுந்தானுமாகச்சென்றுகொண்டிருந்தபொழுது, யமன் அவனது அன்பைப் பரிசோதித்தற்

காகப்பெரிய ஒருநதியை உண்டாக்க, அதனைக்கடக்கும் பொருட்டுத் தருமபுத்திரன் நீரிலிறங்கியபொழுது நாய்தனக்கு இனிக் கதியில்லையென்று கவலைப்பட, அதுகண்டு தருமபுத்திரன் 'அஞ்சாதே' என்று சொல்லி அதனை யெடுத்துத் தோளில்வைத்துக் கொண்டு பெருவெள்ளத்தில் நீந்திச்சென்று அக்கரைசேர்ந்தான் என்பது, இங்குக்குறிக்கப்பட்டது ஆற்றை என்பதற்கு வழியை என்றும் பொருள் கொள்ளலாம்.

கயனுக்காக அருச்சுனன் கண்ணனோடு போர்புரிந்தகதை:- நிஷதபருவத சிகரத்து மணிபுரத்தில் வாழ்பவனான கயனென்னுங் கந்தருவன் தவம்புரிந்து பிரமனிடமிருந்து வரமாகப்பெற்ற விமானத்திலேறி எங்குந் தடையின்றித்திரிந்து அடிக்கடி சத்தியலோகம் சேர்ந்து பிரமனை வணங்கிவரும் வழக்கப்படி ஒருநாள் தனக்குரிய பலமகளிருடனே விநோதமாக விமானமேறி வானத்தின்மீதுசென்று கொண்டிருக்கையில், அவன்வெற்றிலையுண்டு உமிழ்ந்த எச்சிற்றம்பலம், கிரீடார்த்தமாக ரைவதகபருவதத்தில் எழுந்தருளிய கண்ணபிரான் சந்தியாவந்தனஞ் செய்கையில் அர்க்கியஜலத்தையேந்திய கையிலே விழுந்திட்டதனால், அப்பெருமான் மிக்ககோபங்கொண்டு அக்கந்தருவனைக் கொல்லுவதாகக்கருதிச் சபதஞ்செய்கையில், ஓடிச்சென்ற அவன் எங்கும் சரணம்புகுமிடம் பெறுனுய்ப்பின்பு நாரதமுனிவர் சொல்லி

யபடி அருச்சுனனைச் சரணமடைய, அருச்சுனன், தனக்கு உற்ற துணைவனான கண்ணபிரான் பக்கல் அபசாரப்பட்டவனிவன் என்பதையறியாமல் அவனைப் பாதுகாப்பதாக ஏற்று அப்புருத் தூணியில் வைத்துக்கொண்டபின்பு, கண்ணன் தூதர் மூலமாகவும், அக்ரூரர் மூலமாகவும் சுபத்திரை மூலமாகவும், 'இவனை விட்டிடுக' என்று தெரிவிக்க, அருச்சுனன் அதற்கு இணங்காமல் 'சரணமடைந்தவனை விடமாட்டேன்' என்ன, இ[illegible]ாக இருவர்க்கும்பெரும்போர் நிகழ்ந்தது; அப்போரின உக்கிரத்தால் உலகம் நிலைகுலைவதுகண்டு சிவபிரான் இருவரையும் சமாதானப் படுத்தியமைபற்றியும், கபடனே அருச்சுனன் கண்ணனைச் சரணமடைந்தமைபற்றியும், கருணாநிதியான கண்ணன் கோபந் தணிந்து சயனது பிழையைப் பொறுத்தருளினான்.

புறவுக்காகச் சிபி உடல் கொடுத்தகதை:—சூரியகுலத்து அரசனாகிய சிபியென்பவன் அரசாளுகையில் அவனது மேன்மைக் குணத்தைப் பரிசோதிக்கும்பொருட்டு இந்திரன் பெரும் பருந்தாகவும், யமன் சிறுபுறவாகவும் வடிவமெடுத்து அப்புறவைப் பருந்துதுரத்திவர, அது சிபியைச்சரணமடைய, அரசன் அதற்கு அபயமளிக்க, பின்னே வந்தபருந்து 'என் இரையைக் கொடுத்துவிடு' என்று கேட்க, மன்னவன் 'அடைக்கலம் புகுந்தவரை ஆதரியாதுவிடுதல் அதிபாதகமாதலால், இதையன்றி எது கேட்டாலும் கொடுப்பேன்' என்ன, பருந்து இந்தப்புறவின் எடையளவுதசை உன் உடம்பில் அரிந்துகொடு' என்ன, வேந்தன்

சம்மதித்து உடனேயுடம்பிலுள்ள உறுப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றாக அறுத்து வைத்தும் எடைகுறைந்தமையால், தானே தராசுத்தட்டிலேறி எடையை நிறைக்க உடனே அத்தேவர்கள் பிரத்தியக்ஷமாகிச் சக்கரவர்த்தியை மிகவும் கொண்டாடி அவனது உடம்பு முன்போல நிறைவுறும்படி வரமளித்துப்போயினார் என்பதாம். (யமன் வேடனாகியும், இந்திரன் புறாவாகியும் வந்ததாகவும் கதை கூறப்படுவது உண்டு.)

ததீசி இந்திரனுக்கு முதுகெலும்பு அளித்தகதை:—தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடல் கடையவந்தபொழுது, 'யார் கையிலும் ஆயுதமொன்றும் இருக்கக்கூடாது' என்று திருமால் கட்டளையிட்டதனால், அனைவரும் தம் தம் ஆயுதங்களையெல்லாம் ததீசிமுனிவரிடங்கொடுத்துவிட்டனர். பின்பு அவர்கள் நெடுங்காலம் கடல்கடைந்துகொண்டிருந்ததனால் அப்படைக்கலங்களைப்பெற்றுக்கொள்ளாமைபற்றி அம்முனிவர் அவற்றையெல்லாம் தம் தவவலிமைகொண்டு விழுங்கிவிட்டதனால் அவ்வாயுதங்களெல்லாம் ஒன்றாய்த்திரண்டு அம்முனிவரது வலியமுதுகின் தண்டாய் அமைந்தது. பின்பு இந்திரன் மகாபலபராக்கிரமசாலியான விருத்திராசுரனுடன் போர் புரிகையில் தனது வச்சிராயுதத்தை அசுரன்மேல்வீச அது அவனைச் சிறிதும் ஊறுபடுத்தமாட்டாமற் போனதனால், இந்திரன் திருமாலைத்துதிக்க, அப்பெருமான் ததீசிமுனிவரது எலும்பை வச்சிராயுதமாகச்செய்து

அதுகொண்டு விருத்திரனைக்கொல்வாய்" என்று கூறவே, இந்திரன் முனிவரைச் சரணமடைந்து செய்திகூறி, 'முதுகெலும்பைத் தர வேண்டும்' என்றுவேண்ட, அதற்கு உடன்பட்டு அவர் யோகத்தால் உயிர்துறக்க, இந்திரன் அவரது முதுகெலும்பையெடுத்து விசுவகர்மாவைக்கொண்டு வச்சிராயுதமாகச் செய்துகொண்டு அதனால் விருத்திராசுரனைத் துணித்துக்கொன்றனன் என்பதாம்.

இந்திரன் மலைச்சிறகு அரிந்தகதை;—ஆதிகாலத்தில் மலைகளெல்லாம் பறவைகள்போல இறகுடையனவாகி அவற்றால் உலகமெங்கும் பறந்துதிரிந்து பலவிடங்களி லுட்கார்ந்து அவ்விடங்களையெல்லாம் பிராணிகளுடனே பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர்கள் முனிவர்கள் வேண்டியதனால் இந்திரன் வச்சிராயுதங்கொண்டு அவற்றின் இறகுகளை அறுத்துத்தள்ளினன் என்பதாம்.

ஏற்றடியிற் குறித்தகதை;—அசுரேசனது மகளாகியமாயை என்னும் பெயர்பெற்ற சுரசையென்பவள் காசிபமகாமுனிவரைக் கூடிப்பெற்ற புத்திரர்களாகிய சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் என்றமூவரும் பற்பலவகையாக உலகத்தை வருத்தினவளவில், அத்துன்பம் பொறுக்கமாட்டாத தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபிரான் குமாரக்கடவுளை உண்டாக்கியனுப்ப, அக்கடவுள் தனக்கு உரிய கணங்களுடனே புறப்பட்டுச் சென்று போர்புரிந்து அவர்களை வேரோடழித்துத் தேவர்களைப் பாதுகாத்தனன் என்பதாம்.

அவர்களில் தாரகாசூரனோடு முருகக் கடவுளுக்குப்போர் அவ்வசுரனுக்கு இருப்பிடமான கிரௌஞ்சகிரியில் நடந்தது. சாபத்தால் அம்மலைவடிவமான கிரௌஞ்சன் என்னும் அசுரன் அப்பொழுது மாயையினால் பல பெருந்தீங்குகள்செய்ய, முருகக் கடவுள் வேலினால் அம்மலைவடிவத்தைப் பிளந்து அவ்வசுரனை யும் அழித்தொழித்தனன்.

யோக்கியா யோக்கியம்.

பாலினொடு தேன்கலந் துசேரில்ருசி யதிகமாம்
பருகுநீர் சேரி லென்னாம்
பவளத்தி னிடைமுத்தை வைத்திடிற் சோபிதம்
படிகமணி கோக்கி லென்னாம்
மேவியின மன்னர்பால் யானைசேர் வதுகனதை
மேஷமது சேரி லென்னாம்
மிக்கான தங்கத்தி னவமணி யுறிற்பெருமை
வெண்கல் லழித்தி லென்னாம்
வாலிப மினோர்களுட னிளையோர்கள் சேரினலம்
வளைகிழவர் சேரி லென்னாம்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்பிரியம்
வருகயவர் சேரி லென்னாம்
மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை
வள்ளிக்கு வாய்த்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (98)

(இ-ள்.) பாலினொடு - பாலுடனே, தேன்வந்துசேரில் - தேனைவந்துகூடினால், ருசி அதிகம் ஆம் - சுவைமிகுதியாகும் பருகு - குடிக்கிற, நீர்சேரில் - நீர்சேர்ந்தால், என் ஆம் - என்னபயனுண்டாகும், பவளத்தினிடை - பவளத்தின்நடுவில், முத்தைவைத்திடில்-முத்தைவைத்தால், சோபிதம்-அழகாகும் படிகமணி-பளிங்குமணியை, கோக்கில் என்னும் - கோத்தால் என்னபயனுண்டாகும், மேல்-மேலான, இனிய-இனிமையுள்ள, மன்னர்பால்-அரசர்களிடத்து, யானைசேர்ந்து இருக்கை-யானை சேர்ந்திருத்தல் பெருமையாகும், மேஷம்சேரில் என்னும் - ஆடுசேர்ந்தால் என்னபயனுண்டாகும், மிக்கான-மேலான, தங்கத்தில்-தங்கத்தில், நவமணி உறில்-நவரத்தினங்கள் பதிக்கப்பெற்றால், பெருமை-பெருமையாகும், வெண்கல்-வெள்ளைக்கல்லை, அழுத்தினால்-பதித்தால், என்னும்-என்னபயனுண்டாகும், வாலிபம் மின்னார்களுடன்-இளம்பெண்களோடு, இளையோர்கள்சேரின் - இளையமைந்தர்கள் சேர்ந்தால், நலம்-அழகாகும், வளைகிழவர் - மூப்புகுவளைந்த கிழவர்கள், சேரில்-சேர்ந்தால், என்னும் - என்னபயனுண்டாகும், மருவு நல்லோரிடம்-பொருந்திய நல்லோர்களிடத்துக்கு, பெரியோர்வரில்-பெரியோர்கள் வந்தால், பிரியம் - இஷ்டமாகும், வருசபவர்-வருகின்ற கீழ்மக்கள், சேரில் - சேர்ந்தால், என்னும் என்னபயனுண்டாகும், மாலிகை-மாலைகளை, தரித்த-அணிந்த, மணிமார்பனே - அழகிய மார்பையுடையவனே, தெய்வானை வள்ளிக்கு-தெய்வயானைக்கும் வள்ளிநாயகிக்கும், வாய்த்த-கிடைத்த,

கணவா - கொழுநனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. எ-று.

ருசி-இன்சுவை, பருகுதல்-குடித்தல், சோபிதம்-பிரகாசம் எனினும், அமையும், கனதை-கௌரவம், மேஷம்-ஆடு, அது-பகுதிப்பொருள், விகுதிதங்கம்-உயர்ந்தபொன், வெண்கல்-பளிங்குக்கல், மின்னார்கள்-மின்கொடிபோல்வர்கள், மாளிகை - மாளிகா என்னும் வடசொற்றிரிபு.

பெரியோர் இயல்பு.

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்ற
லாபத்தின் வந்த பேருக்
கபயங் கொடுத்திடுத லெல்லினஞ் சேர்ந்திடுத
லாகிரியன் வழிநின் றவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
தூணையடி யருச்சனைசெயல்
சோம்பலில் லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
தொல்புவியி னாட்டி யிடுதல்
பன்னசைச் சேர்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினுந் தாம னையிலே
மருவுநீ ரெனவுறுத லிவையெலா மேலவர்த
மாண்மென் றுரைப்ப ரன்றோ
வன்னமயின் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடியில்
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவுகுமரேசனே. (99)

(இ-ள்.) அன்னதானம் செய்தல் - அன்னதானஞ்செய்தலும், பெரியோர்சொல்வழி நிற்றல்-பெரியோரது சொல்வழியில் நிற்றலும், ஆபத்தின் வந்தபேருக்கு - ஆபத்தடைந்து வந்தவர்க்கு, அபயம் கொடுத்திடுதல் - அபயங்கொடுத்தலும், நல்லினம் சேர்ந்திடுதல்-நல்லினத்தைச் சேர்தலும், ஆசிரியன்வழிநின்று-ஆசாரியனது வழியிலேநின்று, அவன் - அந்த ஆசாரியன், சொன்ன மொழி-சொன்னசொற்படியே, தவறாதுசெய்திடுதல் - தப்பாமல் செய்தலும், தாய்தந்தை - தாய்தந்தையருடைய இணை அடி-இரண்டு திருவடிகளையும், அருச்சனைசெய்தல் - அருச்சனை செய்தலும், சோம்பல் இல்லாமல் - சோம்பலின்றி, உயிர் போகினும்-உயிர்போனாலும், வாய்மைமொழி-உண்மை மொழியை, தொல் புவியில்-பழையதாகிய இவ்வுலகத்தில், நாட்டியிடுதல்-நிலைபெறுத்துதலும், மன்னரை சேர்ந்து ஒழுகல்-அரசரைச் சேர்ந்தொழுகுதலும், கற்பு உடைய - கற்புள்ள, மனைவியொடு வைகினும்-மனையாளோடு கூடியிருந்தாலும், தாமரையிலை-தாமரையிலையின்மேல், மருவும்-பொருந்திய, நீர் என உறுதல்-நீர்போலப் பொருந்தியிருத்தலும் ஆகிய, இவையெல்லாம் - இவையாவும், மேலவர்-மேலோர்களுடைய, மாண்பு என்று-பெருமைக் குணங்களென்று, உரைப்பர் அன்றோ - (பெரியோர்கள்) சொல்லுவார்களல்லவா, வன்னம் - அழகாகிய, மயில்மேல் இவர்ந்து - மயிலின் மேலேறி, இவ்வுலகை - இந்த வுலகத்தை, ஒரு நொடியில் - ஒரு நொடிப் பொழுதில், வலமாகவந்த - பிரதட்சிணமாய் - வந்த, முருகா

முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குகரேசனே, எ-று.

தானம் கொடுத்தல். ஆபத்து இடர். அபயங் கொடுத்தல் அஞ்சாதேயென்று சொல்லுதல் நல்லினம் - நல்லோர் கூட்டம். அருச்சனைசெயல் - மலர் தூவல். வாய்மை - உண்மை. தாமரையிலை மருவு நீரெனவுறுதல் - தாமரையிலையும் தண்ணீரும் கூடியிருக்கும் பற்றற்றிருத்தல் போலப்-பற்றற்றிருத்தல்.

நூற்பயன்.

வன்னமயி லேறிவரு வேலாயு தக்கடவுண்
மலைமே லுகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மானோன்
வானவர்கள் சேனைபதி
கன்னன்மொழி யுமையா டிருப்புதல்வ னான்மகன்
கங்கைபெற் றருள்புத் திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
கடவுளா வினன்குடி யினான்
பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேற்
பரிந்தொரு பாத தாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தினானை
பாடலொரு நூறு காடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடோறுங் கற்ற பேர்கள்

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (100)

(இ-ள்) வன்னம் - அழகாகிய, மயில் ஏறிவரு - மயில்மேலேறிவருகிற, வேலாயுதக் கடவுள் - வேலாயுதன் என்னுந்திருநாமத்தையுடைய கடவுள், மலைமேல் உகந்த முருகன் - மலையின் மேலிடங்களை யெல்லாம் விரும்பின முருகன் - வள்ளிக்கொடிக்கு இனிய வேங்கைமரம் ஆகினோன் - வள்ளிநாயகியின் பொருட்டு இனிதாகிய வேங்கைமரமானவன்-வானவர்கள் சேனாபதி தேவசேனாபதி, கன்னல்மொழி-கருப்பஞ்சாற்றை நிகர்த்த இனிய சொல்லையுடைய, உமையாள் - உமாதேவிக்கு, திருப்புதல்வன் - அழகியபுத்திரன், அரன்மகன்-சிவன் மகன், கங்கைபெற்றருள் புத்திரன்-கங்கைபெற்றருளின புத்திரன், கணபதிக்கு - விநாயகருக்கு, இளைய-இளையவராகிய, ஒரு-ஒப்பற்ற, மெய்ஞ்ஞான தேசிகக்கடவுள்-மெய்ஞ்ஞான தேசிகனாங் கடவுள், ஆவினன்குடியினன்-திருவாவினன்குடியை யுடையவன், பன்னரிய-சொல்லுதற்கரிய, புல்வயலில் - திருப்புல்வயலிலெழுந்தருளியிருக்கிற, வாலகுமரேசர்மேல்-பாலசுப்பிரமணியர் மீதுபரிந்து - அன்புகொண்டு, குருபாததாசன்-குருபாததாசனானவன், பாங்கான - அழகாகிய, தமிழ் ஆசிரியவிருத்தத்தின் - தமிழ்ஆசிரியவிருத்தங்களால், அறைபாடினபாடல் ஒருநூறும்-ஒருநூறுபாடலையும், நாடி-தேடி, நல்நயமதாக படித்தபேர் - நல்ல விருப்பத்தோடு படித்தவர்களும், கேட்டபேர் - கேட்டபேர்களும், நாள்தோறும் கற்ற

பேர்கள் - தினந்தோறுங் கற்றபேர்களும், ஞானயோகம் பெறுவர் - பதவிகளெல்லாம் பெறுவார்கள், நல்முத்தியும் பெறுவர் - நல்ல மோக்ஷத்தையும் அடைவார்கள், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே, எ-று.

வன்னம் - நிறம் எனினுமமையும் - வள்ளிக்கொடிக் கினியவேங்கைமரம் என்பதற்கு வள்ளிக்கொடி படர்தற்க் கினிதாகிய வேங்கைமரம் என்றுமுரைக்கலாம். கன்னல்சர்க்கரையெனுமாம். ஆவினன்குடி முருகர் திருப்பதிகளாகிய ஆறிலொரு திருப்பதி நன்னயமதாகப் படித்தபேர் - இசையோடு படித்த என்றலுமொன்று.

குமரேசசதகம் மூலமும் - உரையும்.

முற்றிற்று.



கடவுள் துணை.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில், எங்களிடத்தில் தமிழ் நாவல்களும், கதை, புத்தகங்களும், தேவாரங்களும், புராணங்களும், நாடகங்களும், வயித்தியங்களும், சோதிடங்களும் கீர்த்தனைகளும், ஜாவளிகளும், டிராமா சரித்திரங்களும், திருப்புகழ், காவடிச் சிந்துகளும், இஸ்லாமானவர்களுக்கு வேண்டிய துலுக்கு தமிழ் புத்தகங்களும், இஸ்கூல்புத்தக முதலான இனுசுகளும், ரவிவர்மா படங்களும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. வேண்டியவர்கள் வி-பி மூலமாயும் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வேலுசாமி கவிராயர்பாடிய பக்திரசக்கீர்த்தனை 0 5 0

புத்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இ. கோவிந்தராஜுலு நாயுடு,
புத்தகவியாபாரம்
13, கம்புலையர் தெரு,—மதராஸ்.